# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.வெளி.22.20

புதிய விலாசம் கவனிக்கவும்

32,ஜெமிஎத்திராஜ் நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

**ஆப்பிரிக்கா மண்ணில் பிறந்து, வளர்ந்து தான் ஒன்றையும் தரிசியாதிருந்தும், தன்னுடைய ஆவியின் ஏவுதலை பின்பற்றி, தன்னைத்தானே தீர்க்கதரிசியாக்கிக்கொண்ட (எரே.29:26) மதிகெட்ட கள்ளத்தீர்க்கதரிசி (மத்.7:15, 24:11,24) காக்குவ் பிலிப்பு.**

**மற்றும்**

**இந்திய மண்ணில் பிறந்து, வளர்ந்து மதிகெட்ட கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்புவினால் அவனது அப்போஸ்தலனாக அவனால் ஏற்படுத்தப்பட்ட, கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தை தரித்துக்கொண்ட கள்ள அப்போஸ்தலன் (2கொரி11:13) கேரளா, மார்ஷல்.**

**இவர்கள் இருவரும் மாறுபாடான வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கித்து வருவதால் இவர்களும், பொய்க்குச்செவிகொடுக்கிற இவர்கள் கூட்டத்தாரும் சபிக்கப்பட்டவர்கள் (கலா.1:7-9) என தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற, நமது கரங்களில் உள்ள பரிசுத்த வேதவாக்கியங்கள் (2தீமோ3:16) கூறுகிறது. வேதவாக்கியங்கள் யாவும் நித்திய ஜீவ வசனங்கள். (Words of Eternal Life) வானமும் பூமியும் ஒழிந்துப்போம், கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்புவின் தீர்க்கதரிசனங்கள், உபதேசங்கள், போதனைகள், செய்திகள் யாவும் ஒழிந்துபோம். ஆனால் தேவனுடைய வார்த்தைகள் ஒழிந்துபோவதில்லை. லூக்.21:33யை தியானியுங்கள்.**

1. பிரியமானவர்களே, கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற நீங்கள் அனைவரும் இனியும் குழந்தைகளாயிராமல் மனுஷருடைய, கள்ள கபடமுள்ள வேலையாட்களுடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே கடல் அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், நல்மனதுடன், உத்தம வாஞ்சையோடு தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களை, கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபையின் தூதனுடைய செய்திகளை கைக்கொள்ளும் (ஆவியானவர் தூதன் மூலமாய் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவர்கள் மாத்திரமே கேட்பார்கள். வெளி.3:22. உங்களுக்கு காதுகள் உண்டா, இல்லையா? என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.) உங்களுக்கு கிறிஸ்துவின் சரிரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைய கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா எழுதுகிறதாவது : நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

2. 2012ம், ஆண்டு எனது இருமகன்களுக்கும் தனித்தனியாக இரு வீடுகள் கட்ட திட்டமிட்டு, அதற்காக வங்கி கடன் பெற்றேன். தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டத்தில் உள்ள எனது சொந்த வீட்டை விற்று, இந்த கடன்களை திருப்பி செலுத்திவிடலாம் என்ற எண்ணத்தை உடையவனாக இருந்தேன். நிலங்களை வாங்கினேன். வீடுகள் கட்ட, கட்டுமான ஒப்பந்தக்காரரை நியமித்து பணிகள் ஆரம்பமாயின. தொடக்கத்திலிருந்தே

ஒப்பந்தக்காரர் ஒப்பந்த விதிமுறைகளை மீறி கட்டுமான பணிகளை செய்தே வந்தார். நான் மாங்காட்டில் இருந்த போது இந்த ஒப்பந்தக்காரர் எனது வீட்டிற்கு அருகாமையில் உள்ள ஒரு தெருவில் வசித்து வந்தார். இவருடைய உள் நோக்கம், பையன்கள் இருவரும் வெளிமாநிலங்களில் பணிசெய்கிறார்கள். ஆதலால் நாம் இந்த வயதானவரை சமாளித்துக்கொண்டு பணம் சம்பாதிக்கலாம் என்ற நயவஞ்சக நினைவோடு இருந்தார். இதனால் ஒப்பந்தத்தை மீறி அவர் செயல்பட்டு வந்தார். ஓரிருமுறை அவரை எச்சரித்தேன். அதை அவர் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அவர் இஷ்டம் போலவே பணிகளை செய்து வந்தார். முடிவில், நான் கொடுத்த அட்வான்ஸ் பணத்திற்கான வேலைகளை அவர் செய்து முடித்த நிலையில், ஒப்பந்தத்தை ரத்து செய்தேன். அவர் ஆவேசமடைந்தார். உடனே நான் அவருக்கு ரூ.8,00,000 கொடுக்க வேண்டும் என கணக்குக்காட்டினார். நான் அவருக்கு ஒரு பைசா கூட தர முடியாது என மறுத்தேன். என்னை மிரட்டினார். நான் அடிபணியவில்லை. அரசியல் தலைவர்களைக் கொண்டு கட்டபஞ்சாயத்து பண்ண ஆரம்பித்தார். நான் யாருக்கும் இணங்கவில்லை. மாவட்ட அனைத்து உயர்மட்ட அதிகாரிகளுக்கும் மனு செய்தார். காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் விசாரணை. சிவில் சட்டம் அதன் கடமையை செய்யட்டும், காவல்துறை தலையீடு இந்த பிரச்சனையில் தேவையில்லை என கேட்டுக்கொண்டேன். முதலில் அவர்கள் மறுத்தாலும், பின் என் வாதத்தை ஏற்றுக்கொண்டனர். நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அது ஒப்பந்தக்காரருக்கு சாதகமாக அமையவில்லை. முடிவில் லோக்கல் அரசியல்வாதிகளை கொண்டு கட்டப்பஞ்சாயத்து பேசி என்னிடம் ரூ.3,00,000 கேட்டு மிரட்டினார்கள். கட்டிட வேலைபணிகளை செய்யவிடாதபடி தடுத்தார்கள். பின்பு அவர்களுக்குள் இருப்பவனைக் காட்டிலும் எனக்குள் இருப்பவர் பெரியவர் என்பதை உணர்ந்தார்கள்.

3. கட்டுமான பணிகளை என் கரத்தில் எடுத்தேன். கட்டுமான பணியாளர்களின் திருட்டு, பணியில் ஏமாற்று வேலை. இவ்வாறாக எங்கு திரும்பினாலும் பிரச்சனைகள் மேல் பிரச்சனைகள் தான். பல போராட்டங்களின் மத்தியில் என் தேவன் என்னோடு இருந்து சத்ருக்களின் வாசல்களை சுதந்தரித்து கொள்ளசெய்தார். முடிவில் பொருளாதார நெருக்கடி, ஆதரவற்ற நிலை. மனுஷர்களை நம்புவதை பார்க்கிலும் என் தேவன் மேல் நம்பிக்கையுள்ளவனாக இருந்தேன். தொல்லைகளின் மத்தியில், ஒப்பந்தக்காரருக்கு 1 பைசா கூட கொடுக்காமல் எனது வீடு கட்டுமான பணிகளை நானே என் கரங்களில் கொண்டு ஒரு வீட்டில் குடியேற வசதிகளை செய்து முடித்தேன். கர்த்தர் வீட்டை கட்டாராகில் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. முடிவில் 30-12-2017 அன்று எங்களது வீட்டில் குடியேற கர்த்தர் கிருபை செய்தார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். இரு வீடுகளுக்கும் இடையில் ஒரு பிரார்த்தனை கூடம் கட்ட ஏற்பாடுகள் செய்தேன். ஆனால் அதனுடைய வேலைகள் இன்னும் சில முடிவு பெறவில்லை. முற்றுப்பெற்ற வேளையில் நாங்கள் அந்த இடத்திலே சபையாக கூடி தேவனை ஆராதிப்போம்.

4. இந்த சூழ்நிலையில் அவ்வப்போது ஊழியப்பணிகள் பாதிக்கப்பட்டன. இப்பொழுது மீண்டும் உற்சாகத்துடன் தொடர கர்த்தர் பெலன் கொடுத்துள்ளார். DTP பணிக்காக நான் சுமார் 35 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியவனாயிருக்கிறேன். தபால் நிலையத்திற்கு 3 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியதுள்ளது. இந்த நிலையிலும் நான் எதற்காக அழைக்கப்பட்டேனோ, அதற்காக தொடர்ந்து போராடி பந்தயத்தைப் பெற்றுக்கொண்ட நிச்சயத்தோடு ஓட எனக்காக, எனக்கு தங்களது முழு ஒத்துழைப்பையும் கொடுக்கும் எனது பிள்ளைகளுக்காக, எனது குடும்பத்திற்காக தேவஆவியினால் ஏவப்பட்டவர்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள். உங்கள் ஜெபம் இந்நாட்களில் எங்களுக்கு மிக அத்தியவசமான தேவையாயிருக்கிறது. ஜெபம் ஜெயத்தை கொண்டு வரும். அது நிச்சயம்.நாங்களும் உங்கள் அனைவருக்கும், இந்த புதிய ஆண்டு 2018 ஆசீர்வாதமாக காணப்பட, கர்த்தரின் வருகையின் போது உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் அவர் சமூகத்தில் குற்றமற்றதாக காணப்பட ஜெபிக்கிறோம்.

5. நமது தலைப்பில் இரண்டாவது பகுதியில் மலர்ந்துள்ள மார்ஷல் என்பவர் கேரளாவில் வசித்து, கேரள அரசின் கல்வித்துறையில் ஒரு சிறிய பணியை செய்து வருகிறார். இவர் ஆப்பிரிக்கா சென்று நமது தலைப்பு பகுதியில் பிரதானமாக மலர்ந்துள்ள கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்புவிடம் ஞானஸ்நானம் பெற்று, அவனிடம் **அப்போஸ்தலன்** என்ற பட்டத்தையும் பெற்று, அவனுடைய வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கிக்க தன் பொய் நாவினால் பொருளாதார உதவிகளையும் பெற்று, அதனால் இப்பிரபஞ்சத்தில் தன் பொருளாதார நிலையை சற்று உயர்த்தி, கொள்ளை பொருள்களினால் தன் வீட்டையும் நிரப்பி, வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத, வேதவாக்கியங்களின், லவோதிக்கேயா சபைக்கடுத்த செய்தியின் வாசனையே அறியாத மக்கள்

மத்தியில் தன்னை ஒரு பெரியவனாக காண்பித்து, அவர்களை வஞ்சகமாக தனக்கு ஆதாயப்படுத்திக்கொண்டு, பக்கத்தொழிலாக இந்த வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கித்து வருகிறான். பொய் நாவினால் பொருளை சம்பாதிப்பது சாவை தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போல் இருக்கும் என சாலொமோனின் நீதிமொழிகள் எச்சரிக்கின்றன. பணம் சம்பாதிப்பதற்கு குறுக்கு வழி ஏதாவது தென்படாதா என்று ஏங்கிக்கொண்டிருந்த மார்ஷலுக்கு இன்டர்நெட்டில் இவர் ஒருபோதும் அறிந்திராத காக்குவ் பிலிப்பு வெளியிட்ட அவனது செய்தியை பற்றிக்கொண்டு, முருங்கை மரத்தை புளியமரமாக நினைத்து பற்றிக்கொண்டான். நிச்சயமாக இவன் காக்குவ் பிலிப்புவை நம்பி பணம் சம்பாதிக்க முடியாது. ஆனால் ஒரு நாள் தன்னுடையதை இழந்து மோசம் போக நேரிடும்.

6. இந்த கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்பு மத்.25:6 மற்றும் வெளி. 12:14யின் இரகசியத்தை கொண்டுள்ளானாம். தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை பாம்பின் முகத்திற்கு விலக்கி தூரமாக கொண்டு செல்ல, ஒரு குறுகிய செய்தி வரும் என்று மத்.25:6 மற்றும் வெளி.12:14ல் தேவன் கூறியுள்ளதாக இந்த மாய்மாலக்காரன் கூறுகிறான். அதோடுமட்டுமல்ல அதற்கென்று ஒரு அழைப்பையும் (Call) பிறகு பணி ஆணையையும் (Commission) பெற்றுள்ளானாம். நீங்களோ இந்த இரு வசனங்களையும் தியானியுங்கள். இதிலிருந்து ஒரு செய்தி வரும் என்று கர்த்தர் எங்காவது கூறியுள்ளாரா? எல்லாமே இவனுடைய கற்பனைகளாகவே இருக்கிறது. இவனுடைய மனமேட்டிமை இவனை பற்பல கற்பனைகளை கொண்ட உலகத்திற்கு இழுத்து செல்கிறது. ஆனால் இந்த இரு வசனங்களில் அடங்கியுள்ள இரகசியத்தை நாம் ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளில் காண்கிறோம். நானும் இந்த இரு வசனங்களில் அடங்கியுள்ள தேவ இரகசியத்தை ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியோடு ஒப்பிட்டு, இணைத்து ஜீலை 2016-ல் எழுதியுள்ளேன். இங்கு பிரதானமாக நான் உங்களுக்கு எழுத விரும்புகிறது என்னவென்றால் : கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். (மத்.7:15) அநேக கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். (மத்.24:11) கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். (மத்.24:24,25) இங்கு நான் எழுதியுள்ள இத்தனை வேதவாக்கியங்கள் காக்குவ் பிலிப்புவுக்கும் அவனது வகையறாக்களுக்கும் பொருந்தும்.

7. இப்பொழுது ஏழாம் சபைக்கால தூதன் சகோ.வில்லியம் மாரியன் பிரன்காமிற்கு பிறகு வேறொரு தீர்க்கதரிசி செய்தியாளன் எழும்பி பிரகாசிக்க வேதவாக்கியங்களில் இடம் / ஆதாரம் உண்டா அல்லது இல்லையா என்று வாதிக்க கருத்தரங்கு ஒன்றை இந்த கள்ள அப்போஸ்தலன் மார்ஷல் மற்றும் கோவை கே.ராஜா இருவரும் இணைந்து கோவையில் டிசம்பர் 25, 2017-ல் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

8. **கள்ள அப்போஸ்தலன் மார்ஷல் :** வேதவாக்கியங்களின் அடிப்படையில், **தேவனுடைய சித்தத்தினாலே** பவுல் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனானான் (2தீமோ.1:1). நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவனும், நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே** இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல் (1தீமோ.1:1) **மனுஷராலுமல்ல, மனுஷர்முலமாயுமல்ல,** இயேசு கிறிஸ்துவினாலும், அவரை மரித்தோர்களிலிருந்து எழுப்பின பிதாவாகிய தேவனாலும் அப்போஸ்தலனாகிய பவுல் (கலா.1:1) தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் கடினமாக ஊழியத்துக்கு தானாய் ஏற்படுகிறதில்லை. (எபி.5:4) சபை பக்திவிருத்திக்கடுத்த ஊழியங்களை கர்த்தர் ஏற்படுத்துகிறார். (எபே.4:11) தேவன் ஒருவனை ஊழியத்திற்கு அழைக்கிறார். கர்த்தர் ஒருவனை ஊழியத்திற்கு ஏற்படுத்துகிறார். அப்போஸ்தல ஊழியங்களுக்கடுத்த அழைப்பு மேற்கண்டவாறு இருக்க, இங்கு மார்ஷல் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியினால் அப்போஸ்தலனாக அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளான். மேலும் இவன் ஒரு ஊதியத்திற்காக ஊழியம் செய்ய வந்துள்ளான். இந்த தொழிலினால் தனக்கு நல்ல பிழைப்பு உண்டென்று அறிந்து காக்குவ் பிலிப்புவை பற்றிக்கொண்டான். அரசாங்கத்தில் ஊழியத்திற்கு ஊதியம். இங்கும் ஊழியத்திற்காக வெகுமானம். இரண்டுபக்கமும் வருமானம். ஆதலால்தான் இந்த மார்ஷலை நான் கள்ளஅப்போஸ்தலன் என அழைக்கிறேன். இவனுடைய பண ஆசையே எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. மார்ஷல் தன் இளைமை பிராயத்தில் மரியாளின் கரங்களை பிடித்து நடந்து வந்தான். பின் அவளை விட்டு கிறிஸ்து பிரன்காம் கையை பற்றிக்கொண்டான். கிறிஸ்து பிரன்காமோடு மனஸ்தாபம் ஏற்பட்டது. ஆக தன் வாழ்க்கையில் ஒருபகுதி தூரம் மட்டுமே கிறிஸ்துவோடு நடந்து வந்தான். கிறிஸ்துவோடு முழுதூரமும்

நடந்து போகாத நிலையில் காக்குவ் பிலிப்புவுக்கு அப்போஸ்தலனாகி விட்டான். இதன் முடிவு நரகம் என்பதை இவன் அறிந்துகொண்டால் நலமாயிருக்கும். இவனுடைய உடன்பிறப்புகளுக்கும் நலமாயிருக்கும்.

9. அடுத்து வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஊழிய அழைப்பு முறைமையை கவனித்தால் முதலாவது அப்போஸ்தலன், இரண்டாவது தீர்க்கதரிசி. நியமிப்பவர் இயேசு கிறிஸ்து. (1கொரி12:28) ஆனால் இந்த வேறொரு சுவிசேஷத்தில் பிரதானமான கதாபாத்திரம் காக்குவ் பிலிப்பு. இவன் தன்னைத்தானே தீர்க்கதரிசியாக்கி கொண்டான். இதன்பின், இவன்தானே தனக்கு அப்போஸ்தலர்களை நியமித்துக்கொண்டான். பண ஆசையுடன் இவனுடைய வலையில் விழுந்தான் மார்ஷல். பிசாசினுடைய பொய்யை சத்தியமாக ஏற்றுக்கொண்டான். இனி இவனுக்கு பரிசுத்த வேதாகமம் தேவையில்லை, பரிசுத்தஆவி தேவையில்லை. லவோதிக்கேயா சபையின் செய்தி தேவையில்லை. காக்குவ் பிலிப்பு ஒருவனே போதும். இந்த மார்ஷல் நாளுக்கு நாள் பச்சோந்தி போன்று தன் நிறத்தை மாற்றிக்கொள்பவன். பிறப்பில் கத்தோலிக்க சபை. பின் கிறிஸ்து பிரன்காம் கூட்டத்தாருடன் ஐக்கியம். அதன்பின் சகோ.விக்டர் லாசர் உடன் ஐக்கியம். பின் அந்த ஐக்கியத்தை முறித்தான். சிலகாலம் மௌனம். இப்பொழுது மதிக்கெட்ட கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்புவுடன் அன்னியோன்யம். இவனுடைய அனைத்து காரியங்களும் மாயையும், மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல், அதில் விழத்தீவிரிக்கிறதுபோல, இவனுக்குப் பின்னாலே சிலர் சென்று இவனுடைய வலையில் சிக்கிக்கொண்டனர். இச்சக வார்த்தைகளோடே அவர்களை ஒட்டிக்கொண்டார்கள். இவன் பாதையிலே அவர்கள் மதிமயங்கி திரிகின்றனர். இவன் உபதேசம் பாதளத்திற்கு போகும் வழி, அது மரண அறைகளுக்கு கொண்டு செல்லும் என்பதை அறியாமலுமிருக்கிறார்கள். ஆதலால்தான் தேவனுடைய வார்த்தை உலகத்தில் அநேக கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள் என்று நம்மை எச்சரிக்கிறது. (1யோ4:1)

10. எப்பொழுதுமே பிசாசு மிக தந்திரமாக செயல்பட்டு, பக்கவழியாக தன் உபதேசங்களை மக்களிடத்தில் கொண்டு வருவான். காக்குவ் பிலிப்பு சத்திய வழியிலிருந்து மக்களை திசை திருப்பவே சாத்தானால் உபயோகிக்கப்படும் பாத்திரம். இவன் தனக்கென மார்ஷலைப் போன்று அநேக அப்போஸ்தலர்களை நியமித்துள்ளான். பொய்யினாலும் வஞ்சகத்தினாலும் தன்னுடைய செயலை திருஷ்டாந்தப்படுத்த முயற்சிகளும் செய்கிறான். எப்படி? இவன் கூறுவதாவது : மோசே தன்னுடைய காலத்தில் ஆசாரியத்துவத்தை ஏற்படுத்தினான் என்கிறான். ஆனால் மோசே ஏற்படுத்தவில்லை என்பதை வேதவாக்கியங்களை அறிந்தவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். மோசே, கர்த்தர் தனக்கு கற்பித்தபடி ஆசாரியத்துவத்தை ஏற்படுத்தினான். அவன் தன் சுயமாக செயல்படவில்லை. இதுக்குறித்து நாம் யாத்.40 அதியில் தியானிக்கலாம். மேலும் யோவான்ஸ்நானன் தனக்கு அப்போஸ்தலர்களையும், சீஷர்களையும் தெரிந்துகொண்டானாம். யோவான்ஸ்நானன் தனக்கு அப்போஸ்தலர்களை ஏற்படுத்தியதாக வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் இல்லை. மாறாக அவனுடைய உபதேசத்தை பின்பற்றி, அநேகர் அவனுக்கு சீஷர்களானார்கள். மேலும் அப்.பவுலும் அப்போஸ்தலர்களையும், சீஷர்களையும் தனக்கு ஆதரவாக நியமித்தான் என்கிறான். இதுவும் தவறு. இதுவும் வேதவாக்கியங்களில் ஆதாரமற்றது. மேலும் எப்பொழுதும் தேவன் ஒரு தீர்க்கதரிசியை பூமியில் அனுப்பும் போது அவன் தனக்கு அப்போஸ்தலர்களையும் சீஷர்களையும் ஏற்படுத்திக்கொள்கிறான் என்று இவன் பிதற்றுவதற்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் கிடையாது. சகோ.பிரன்காம் கூட தன் ஊழியத்தின் பாதையில் தனக்கென்று அப்போஸ்தலர்களையும், சீஷர்களையும் நியமித்தார் என்று இவன் கூறுவதற்கும் ஆதாரங்கள் கிடையாது. இவன் தன்னிச்சையாக செயல்பட்டு தனக்கென்று அப்போஸ்தலர்களையும் சீஷர்களையும் நியமித்துக்கொண்டான். மேலும் இவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தனக்கு அப்போஸ்தலர்களையும் சீஷர்களையும் தெரிந்துகொண்டது போல் தானும் தெரிந்துகொண்டேன் என்று கூறுவதற்கு இவனுக்கு என்ன அருகதை உண்டு? பிசாசின் மனமேட்டிமையே இவனை ஆட்கொண்டு இயக்கி வருகிறது. இவனிடம் காணப்படுவது பிசாசின் குணமேயன்றி வேறல்ல.

11. ஆக ஏழாம் சபைக்கால தூதனுக்கு பின்பு மற்றொரு தீர்க்கதரிசி செய்தியாளன் எழுந்திருக்க வேண்டும், அவன் ஆப்பிரிக்கா மண்ணில் பிறந்த, வளர்ந்த காக்குவ் பிலிப்பு என்பவன்தான் என்று வாதிக்க ஜான்சன், அமிர்தலிங்கம், மார்ஷல் போன்றோர் பெற்ற பணத்திற்காக மாரடிக்க வந்திருந்தார்கள். ஏழாம் சபைக்கால தூதனுக்குப்பிறகு மற்றொரு செய்தியாளன் வேதவாக்கியங்களின் அடிப்படையில் தேவையில்லை என கருத்தரங்கில் வாதிக்க

கோவை சகோ.கே.ராஜா, அவரது தம்பி சகோ. கே.லாரன்ஸ் மற்றும் நானும் (காலேப் யோசுவா) அழைக்கப்பட்டிருந்தோம். பொதுவாக இப்படிப்பட்ட கருத்தரங்குகளில் நான் பங்குபெறுவது இல்லை. ஆனால் இது வேறொரு சுவிசேஷத்திற்கடுத்த கலந்துரையாடலாக இருப்பதால் இதில் கலந்துக்கொண்டு வேதவாக்கியங்கள், ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளைக்கொண்டு வாதிக்க வேண்டும், அது அத்தியாவசியமானது என என் உள்ளத்தில் ஒரு தூண்டுதல் ஏற்ப்பட்டதால் அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

12. கருத்தரங்கு நாள் 25.12.2017 ல் வாதம் குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறவில்லை. மிக்க தாமதமாகத்தான் ஆரம்பமானது. சகோ.ராஜா தரப்பில் அவரும் அவரது மனைவியாகிய சகோதரி, சகோ.லாரன்ஸ் மற்றும் அவரது மனைவியாகிய சகோதரி, அவரது திருமணம் ஆகாத சகோதரி, மேலும் அவரது இளைய சகோதரி மற்றும் கணவராகிய சகோ.யோசுவா, கோவில்பட்டியிலிருந்து சகோ.மைக்கேல்ராஜ், ஈரோட்டிலிருந்து சகோ.நேசன் மற்றும் அவரது மனைவியாகிய சகோதரி, மற்றும் நான் ஆக மொத்தம் பத்து பேர் கலந்துக்கொண்டோம். கள்ள அப்போஸ்தலன் மார்ஷல் தரப்பில் அவனது மனைவியாகிய சகோதரி, தாய் தந்தை மற்றும் நான் அறியாத நபர்களாக சுமார் 30 பேர் இருந்தார்கள் என கூற கேள்விப்பட்டேன். இவர்கள் கேரளாவிலிருந்து இரு வாகனங்களில் வந்திருந்தார்கள். அவர்கள் எண்ணிக்கையில் மெஜாரட்டியாக இருந்ததினால் அவர்களுக்குள் மிக்க மனமகிழ்ச்சி. ஆனால் நானோ புருஷனுள்ளவளைப்பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அநேக பிள்ளைகள் என்று வேத வாக்கியங்களில் எழுதியிருப்பதை நினைவு கூர்ந்தேன். கிறிஸ்துவை காட்டிலும் கூடுதலான ஜனங்களை உடையவர்களாக சாத்தான் இருப்பான். அவன் அதை பெற்றிருக்கிறான். பொதுவாக மார்ஷல் குழுவினர் அவர்களுடைய பிரதிநிதிகள் பேசும்போது அல்லேலுயா! ஸ்தோத்திரம்! என எப்பொழுது கூற வேண்டும் என்று நன்று கற்றுக்கொடுக்கப்பட்டு, அதில் பழக்கப்பட்டு அருமையாக நடித்தார்கள். மற்றபடி அவர்களிடம் வேத அறிவு, இக்காலத்திற்குரிய தூதனின் செய்தியைப்பற்றிய அறிவு எள் அளவு கூட இல்லை என்பது எனது கணிப்பு. ஒரு காலக்கட்டத்தில் கூலிக்கு மாரடிக்கும் கூட்டத்தை கொண்டுவந்துள்ளார்களோ என்ற ஐயமும் உள்ளத்தில் ஊற்றெடுத்தது. வாதத்திற்கு வந்த மூவரில் ஒருவராவது வேதவாக்கியத்திற்கடுத்த சத்தியத்தின்படி வழக்காடவில்லை. காக்குவ் பிலிப்புவின் மாயையை நம்பி, அவனுடைய உபதேசத்தைக்கொண்டு, அபத்தமானதைத்தான் பேசினார்கள். கலந்துரையாடலுக்கு என் அழைப்புக்குறித்து அறியவந்தபோது முன்னுரையாக நான் சிறிது நேரம் பேச அவகாசம் கேட்டிருந்தேன். அதன்படி கலந்துரையாடல் ஆரம்பிக்கப்படும் முன் ஒழுங்கு விதிமுறைகள் குறித்து பேச ஆரம்பித்தேன். இந்த வேளையில் நான் எந்த தரப்பினருக்கும் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ பேசாமல் நடுநிலைவகித்து சில ஒழுங்குமுறைகள் குறித்து பேசுகிறேன் என ஆரம்பித்தேன்.

13. ஆப்பிரிக்கா மண்ணின் மைந்தன், மத்.25:6 ன் தரிசன நிறைவேறுதல் என்ற செய்தியில் 43வது பத்தியில் நமக்கு ஒரு சட்டமும் இல்லை, ஆனால் வேதாகமே, ஆனால் அவர்கள் அதை மதிப்பது இல்லை, மேலும் ஏழாம் சபைக்கால தூதன் சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் தேவனின் தூதன் என்று கூறியுள்ளதை சுட்டிக்காட்டி, இருசாராரும் முதலில் பரிசுத்த வேதாகமத்திற்கு, இரண்டாவது ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திக்கு களங்கங்கள் ஏற்படுத்தாமல் இரண்டையும் ஒன்றுக்கொன்று இணைத்து தங்கள் வாதங்களை மேற்கொள்ளலாம் என ஆலோசனை கூறினேன்.

14. அடுத்து தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் (The Truth which is after Godliness) விசுவாசமும் (Faith) தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கே (God’s Elected) உண்டாகும் (தீத்1:3). ஏனென்றால் ஒருவனிடத்தில் விசுவாசத்தை தொடங்குகிறவரும், அதை முடிக்கிறவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (எபி12:2) ஆதலால்தான் நீங்கள் என்னை தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களை தெரிந்துகொண்டேன் என்கிறார். (யோ.15:16) மேலும் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் என்கிறார் (யோ.8:36) என்றேன். ஆதலால் தர்க்கத்தினால் / வாதத்தினால் நாம் ஒன்றையும் சாதிக்கமுடியாது. வேதவாக்கியங்களில், இந்த லவோதிக்கேயா சபையின் செய்திக்கடுத்த காரியங்களை அறிந்துக்கொள்ள / புரிந்துக்கொள்ள / விசுவாசிக்க தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் தேவை / அத்தியாவசியம் என்பதை வலியுறுத்தினேன்.

15. மூன்றாவதாக ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கவேண்டும். (1பேது.4:11) ஒருவனுடைய செய்தியை கேட்பவர்களை எழுதப்பட்ட வார்த்தைக்கு, அதாவது நமது கரத்தில் உள்ள

தேவனுடைய வார்த்தைக்கு, லவோதிக்கேயா சபை செய்திக்கு கொண்டு செல்வதாக இருக்கவேண்டும். வெளிப்பாடு என்பதன் பேரில் கொடுக்கப்படும் செய்தி தேவஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களை விட்டு விலகக்கூடாது என அறிவுறுத்தினேன். கேட்பவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்க வேண்டும், ஒருவனுடைய சொற்பொழிவை முற்றிலுமாக பற்றிக்கொண்டு அதை சார்ந்து நிற்க கூடாது, இருதரப்பு வாதங்களையும் நிதானித்து பார்க்க வேண்டும், நலமானதை பற்றிக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன் / வலியுறுத்தினேன்.

16. வாதத்திற்காக அழைக்கப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து ஒன்றை கூட்டவும், குறைக்கவும் கூடாது. நீதி30:6, வெளி22:18,19 யை சுட்டிக்காட்டினேன். மேலும் போதிக்கிறவன் தன்னுடைய ஊழிய அழைப்பையும் (Calling) தெரிந்துகொள்ளுதலையும் (Election) வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஜாக்கிரதையாக உறுதி செய்து கொண்டவர்களாக இருக்கவேண்டும். (2பேது1:10) கருத்தரங்கில் பேச வந்திருப்பவர்களில் அழைப்பு எதுவும் இல்லாமல், தங்களது அழைப்பை உறுதி செய்து கொள்ள முடியாத நிலையில், தங்கள் மனம்போன போக்கில் தங்களுக்கு எல்லாம் தெரிந்தவர்களாக பாராட்டிக்கொண்டு பேச வந்திருப்பதை என் ஆவியில் உணர்ந்தேன். இதற்கடுத்த காரியத்தில் நான் வரும்போது மார்ஷல் கூட்டத்தினர் கலகம் செய்ய ஆரம்பித்தனர். ஏனென்றால் மார்ஷல், காக்குவ் பிலிப்புவினால் அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டதை அடுத்தும், அவரது தரப்பில் பேச வந்தவர்கள் ஊழிய அழைப்பே இல்லாத நிலையில் பேச வந்ததையும் சுட்டிகாட்டியதினால் இந்த எதிர்ப்பும் குழப்பமும் ஏற்பட்டது. பாருங்கள், நீங்கள் பேசுவதை கேட்டு கோபமடையும் ஒரு கூட்டம் உங்கள் முன் இருந்தாள், அப்பொழுது பரிசுத்தஆவியானவர் ஒன்றையும் வெளிப்படுத்த மாட்டார். பாருங்கள் அவர்கள் ஒருமனப்பட்டு ஒரிடத்தில் கூடி வந்தார்கள். ஆதலால் அங்கே பரிசுத்தஆவியின் கிரியை அங்கு இருந்தது. இங்கு ஒருமனப்பாடு இல்லாத நிலையில் நீங்கள் பரிசுத்தஆவியின் கிரியையை எதிர்பார்க்க முடியாது.

17. மேலும் ஊழிய அழைப்பு எதுவும் எபே.4:13ன் படி கர்த்தரால் ஒருவன் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இந்த அழைப்பு இல்லாமல் தேவனுடைய வார்த்தையைக்கொண்டு தர்க்கிப்பது, கருத்தரங்குகளில் கலந்துகொள்வது பற்பல வகைகளில் தேவனுடைய வார்த்தையை கையாண்டு அவைகளை அவமதிப்பது தேவனுடைய சித்தத்திற்கு புறம்பான ஊழியம், அது அயோக்கியதனமானது என்று பிரசங்கித்த வேளையில் குழப்பம் மேலும் அதிகமானது. உடனே கூட்ட நடவடிக்கை கண்காணிப்பாளர் ஈரோடு சகோ.நேசன் எனக்கு கொடுக்கப்பட்ட வேளை முடிந்தது எனக்கூற நானும் என் இருப்பிடத்தில் அமர்ந்தேன். **முன்னுரைக்காக என் தேவன் என் இருதயத்தில் வைத்திருந்ததை அந்த நேரத்தில் முழுமையாக வெளிப்படுத்த முடியவில்லை.** பொதுவாக என்னை அழைக்கும் இடங்களில், நான் அழைத்தவர்களை பிரியப்படுத்த வேண்டும் எனக்கருதி பிரசங்கிப்பது இல்லை. பேச வேண்டும் என்று தேவஆவியினால் ஏவப்படுவதையே பேசுகிறேன். எனவே கர்த்தர் என்னை வழிநடத்தும் விதத்தில் என் சிந்தனைகளை நான் செலுத்துகிறேன். நான் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அவைகளை இக்காலத்து செய்தியோடு இணைத்து, அது சரியென ஆவியானவர் உணர்த்தும் போது அதை உங்களுக்கு எழுதுகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கூட்டத்திற்கு அழைக்கப்பட்டேன். பெண்களுக்கு அவர்கள் நீண்ட தலை மயிரே அவர்களது தலை முக்காடு என பிரசங்கிக்க கூடாது என ஒரு ஊழியக்காரர் கூறி சென்றார். ஆனால் கர்த்தர் என்னை வழி நடத்திய விதத்தில் என் சிந்தனைகளை செலுத்தி அவர் பிரசங்கிக்க கூடாது என்று ஆணையிட்டதையே பிரசங்கித்தேன். ஆவேசத்துடன் அவரும் அவரை சார்ந்தவர்களும் கூட்டத்திலிருந்து எழுந்து சென்று விட்டார்கள். பின் நான் தங்கியிருந்த இடத்திற்கு இரவு அவர் வந்து என்னை மிரட்டினார். கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தவர் தக்க சமயத்தில் அங்கு வந்து என்னை மிரட்டியவருக்கு தக்க பதிலடி கொடுத்து விரட்டினார். என்னை மிரட்டியவர் ஒரு முன்னாள் போலீஸ் அதிகாரி என கேள்வி பட்டேன். அவரை விரட்டி அடித்தவர் அப்போதைய இராணுவ உத்தியோகஸ்தர். மேலும் வேதவாக்கியங்களின்படி நான் கடிந்து கொண்டு கண்டனம் பண்ணி சத்தியத்தை கொண்டுவர வேண்டியுள்ளது. நான் அவ்வாறு செய்ய வேண்டும் என்று சுயமாக விரும்பி அப்படி செய்வதில்லை. ஆனால் ஆவியானவர் வழிநடத்தும்போது அந்த வேளையில் நான் அதை செய்து தான் ஆக வேண்டும். அப்படி செய்வது முக்கியமாயிருக்கிறது.

18. தேவசித்தத்திற்கு புறம்பாக அநேகர் ஊழியங்கள் செய்துகொண்டு தங்களை அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன், போதகன் என அழைத்துக்கொள்கிறார்கள். மேலும் சிலர் தங்களை இன்டர்நேஷனல்

பிரசங்கி, தலைமை போதகன், குணமாக்கும் வரங்களை கொண்டவன் என பற்பல பதவிகளினால் தங்களை அலங்கரித்து கொள்கிறார்கள். இவை அனைத்தும் பிசாசின் தன்மைகளே. (எரே.29:26) இவர்கள் தேவனுடைய நீதியுள்ள ஆக்கினைக்கு தப்பமுடியாது. பாருங்கள் அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகர்களாகாதிருப்பீர்களாக என தேவஆவியானவர் யாக்கோபு மூலம் எச்சரிக்கிறார். (யாக்.3:1)

19. ஆக இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்கள் நீதியின் ஊழியகார்களுடைய வேஷத்தை தரித்துக்கொண்டு, பலவிதமான அந்நிய போதனைகளை கொண்டுவந்து (எபி.13:9) சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகங்களை கொண்டுவந்து (எபே.4:4) ஆட்டுத்தொழுவத்திற்குள் வேறு வழியாய் நுழைந்து மந்தையை சிதறடிக்கிறார்கள். (யோ.10:1) கெர்ச்சிக்கிற சிங்கம் இறை கவ்வுகிறது போல ஆத்துமாக்களை பட்சிக்கிறார்கள். தங்கள் வீட்டிற்கு திரவியத்தையும், விலை உயர்ந்த பொருட்களையும் சவதரித்துக்கொள்கிறார்கள். இதுதான் மார்ஷலின் வேஷம்.

20. மேலும் ஊழியத்தில் ஒருவன் ஒரே நேரத்தில் கிறிஸ்துவுக்கு ஊழியக்காரனாகவும், அதே நேரத்தில் மனிதர்களுக்கு ஊழியக்காரனாகவும் இருந்து கொண்டு இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்து, ஊதியம் பெறக்கூடாது. அது தேவசித்தத்திற்கு புறம்பானது. தியானியுங்கள். மத்.6:24, லூக்.16:13, 2தீமோ.2:4. காக்குவ் பிலிப்புவினால் அபிசேஷகம் பண்ணப்பட்ட அப்போஸ்தலன், ஒரு கேரள அரசின் பணிவிடையாள். பணி செய்து ஊழியம் பெறுகிறவன். மறுபக்கம் காக்குவ் பிலிப்புவுக்கும் ஊழியம் செய்து, அதை தேவனுக்கடுத்த ஊழியமாக சித்தரித்து, அதற்கென்று ஒரு ஊதிய ஊழியம். இது எல்லாம் என்ன? கிறிஸ்துவின் அப்போஸ்தலனுக்கு பணி ஒழுங்குமுறைகள் உண்டு. காக்குவ் பிலிப்பு அப்போஸ்தலனுக்கு எந்த ஒழுங்குமுறைமையும் கிடையாது. மனம்போன போக்குதான் இவனுக்கு ஒழுங்கு. மானங்கெட்ட அப்போஸ்தல ஊழியம். இது இந்த மனுஷனுக்கு தேவைதானா? உன்னுடைய அழைப்பு நீ ஆராதிக்கும் காக்குவ் பிலிப்புவின் அழைப்புதானேயன்றி, அநாதி தேவனுடைய அழைப்பாக இல்லையே. நீ ஊதியத்திற்குத்தானே இந்த ஊழியத்தைக் கொண்டுள்ளாய். நீ வேதத்தை மதிப்பதும் இல்லை. நீயே உன் வாயினால் இந்த பைபிளை நாங்கள் படிப்பது இல்லை என்று கூறினாய். இப்பொழுது நீ உன் கரங்களில் காக்குவ் பிலிப்பு உபயோகிக்கும் டார்பி ஆங்கில பைபிளை எடுத்துக்கொண்டு திரிகிறாய். இதிலிருந்து நீ யார் என எனக்கு தெளிவுபடுகிறது. நீ பிசாசினுடைய கள்ள அப்போஸ்தலனேயன்றி தேவனுடைய அப்போஸ்தலன் இல்லை, இல்லவேயில்லை.

21. பொதுவாக நான் ஆவியில் உணர, கலந்துரையாடலில் தேவனுடைய வார்த்தையை கையாள வந்த பேச்சாளர்களில் பெரும்பாண்மையானவர்களிடத்தில் அவர்கள் அணிந்திருந்த சூட் மற்றும் கோட் தான் அவர்களது ஒழுங்கு நடைமுறை / விதிகளில் பிரதானமாக காணப்பட்டது. மற்றபடி அனைத்தும் மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாய், விசனமுமாயிருந்தது. எல்லாம் சுயவிளம்பரமாக காணப்பட்டதேயன்றி தேவனுடைய நாமம் மகிமைப்பட்டதாக காணப்படவில்லை. கருத்தரங்குக்கு தங்கள் வாதத்தை, தங்கள் உள்ளத்தில் என்ன வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதோ அதை வெளியே காட்டுவதற்கு பதிலாக, தாங்கள் அணிந்திருக்கும் பிரத்தியேகமான ஆடைகளினால் மக்களை ஈர்ப்பவர்களாகவே காணப்பட்டனர். இந்நாட்களில் தமிழ்நாட்டில் நான் பார்த்த அளவில் ஆடை அலங்காரம் அநேகருக்கு ஒரு பாரம்பரியமாக ஆகிவிட்டது. கூட்டங்களுக்கு சூட் மற்றும் கோட் வாடகைக்கு எடுத்தாவது அணிந்து கொண்டு வந்து விடுகிறார்கள். இதைவிட கேவலம் வேறு என்ன இருக்க முடியும்? எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. மார்ஷல் தன் எஜமான் காக்குவ் பிலிப்புவிற்கு மகிமை தேடி அதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என நினைத்தார். ஆனால் அவருடைய கனவு இந்திய மண்ணில் பலிக்காது. ஏனென்றால் இந்தியர் ஆப்பிரிக்கர்களைப்பற்றி நன்கு அறிவார்கள். எனது ஊழியத்தின் தொடக்கப்பாதையில் ஒரு காலக்கட்டத்தில் ஒரு ஆப்பிரிக்கா நாட்டு ஊழியக்காரர் என்னுடன் தொடர்பு கொண்டார். பின் அது மெதுவாக வியாபார நோக்கத்தை நோக்கி சென்றது. உடனே தொடர்பை நிறுத்திக்கொண்டேன்.

**22. இப்பொழுது லவோதிக்கேயா சபைக்காலத்தில் நடக்கும் சில சம்பவங்களை கவனியுங்கள்.**

(அ) இந்த சபைக்காலத்தைப்போன்ற கொடிதான வஞ்சிப்பு வேறு எந்த சபைக்காலத்திலும் இருந்தது இல்லை.

(ஆ) கிறிஸ்துவர்கள் என தங்களை அழைத்துக்கொள்பவர்கள் தங்களுடைய கிரியைகளில் கிறிஸ்துவை பிரதிபலிக்காத பேர் கிறிஸ்தவர்களாகவே காணப்படுவார்கள்.

(இ) பரிசுத்த ஆவியை பெறாதவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டதாகவே தங்களை மேன்மைபடுத்துவார்கள், மறுபிறப்பு அடைந்த கிறிஸ்தவர்கள் என்று பந்தா பண்ணிக்கொள்வார்கள். ஆனால் அவர்கள் மறுபிறப்பு அடையவே இல்லை, இல்லவேயில்லை.

(ஈ) சிற்சில அற்புத அடையாளங்கள் நடப்பதை தேவனுடைய ஆவியின் அநுக்கிரகம் என்று நினைப்பார்கள். ஆனால் கிறிஸ்து அவர்களை அறியவில்லை என்பார்.

(உ) இது தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக மாறுபாடான உபதேசங்களை கொண்ட காலம். இதற்காகத்தான் கர்த்தர் காக்குவ் பிலிப்புவை மற்றும் மார்ஷலை அழைத்துள்ளார். யூதாஸ் அழைப்பை போன்று.

(ஊ) இது சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்கு சாய்ந்துப்போகும் காலம்.

(எ) இது சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிதான வஞ்சகத்தை தேவன் அனுப்பும் காலம். (2தெச.2:11,12) இதற்காகத்தான் காக்குவ் பிலிப்பு, மார்ஷல் மற்றும் இவர்களை பின்பற்றுபவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

(ஏ) இது ஆரோக்கியமான உபதேசத்தை பொருக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்களுடைய சுயஇச்சைகளுக்கேற்ற போதகர்களை / போதனைகளை தங்களுக்கு திரளாய் சேர்த்துக்கொள்ளும் காலம். (2தீமோ.4:3)

(ஐ) கள்ளகபடமுள்ள வேலையாட்கள் தேவனுடைய வார்த்தைக்கு தங்கள் சுயகருத்துக்களைக்கொண்டு மக்களை வஞ்சிக்கும் காலம். இவர்கள் தங்கள் உபாயத்தினால் வஞ்சகத்தை கைகூடி வரப்பண்ணி, தங்கள் இருதயத்தில் பெருமைக்கொண்டு, விசாரத்தோடுயிருக்கிற சிலரை ஆதாயப்படுத்திக்கொள்கிறார்கள். ஆதலால்தான் காக்குவ் பிலிப்பு, மார்ஷல் போன்றவர்களால் இத்தனை குழப்பம்.

(ஒ) ஆத்தும ஆதாயம் என்பது தேவனுடைய கிரியையாகும். ஆனால் ஆத்தும ஆதாயம் பணத்தைக்கொண்டு விலைக்கு வாங்கும் ஒரு வியாபாரமாக நமது மத்தியில் இருக்கிறது. கூலிக்காக அமர்த்திக்கொள்ளும் ஊழியர்கள், அப்போஸ்தலர்கள், பிரசங்கிகள், சாட்சிகள், பாடல் குழுவினர். தேவனுக்கு இதெல்லாம் தேவையா? அவர் இதில் பிரியப்படுகிறாரா? நிச்சயமாக இல்லை.

23. எனது முன்னுரையின் முடிவாக ஒருவனிடம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானம் / ஒன்றை பகுத்தறியும் ஆவி / சத்தியத்திற்குள் வழிநடத்தும் பிரிசுத்தஆவி இருந்தால் மாத்திரமே அவன் எது சரி / எது தவறு / எது உலக ஞானம் / எது தேவஞானம் என்று பகுத்தறியமுடியும். கிறிஸ்துவின் மணவாட்டி தேவனுடைய வார்த்தையின் ஒரு பாகம். ஆதலால் அவள் மாத்திரமே தேவனுடைய வார்த்தையை சார்ந்திருக்க முடியும். மற்றவர்கள் ஸ்தாபன சபைகளில், உலக ஞானத்தினால் பேர் பிரபலமானவர்களையும், கள்ளகபடமுள்ள வேலையாட்களையும், காக்குவ் பிலிப்புவை போன்ற கள்ள தீர்க்கதரிசியையும், மார்ஷல் போன்ற கள்ள அப்போஸ்தலனையும் சார்ந்து இருப்பார்கள்.

24. கருத்தரங்கில் என்னுடைய முன்னுரை தடைப்படுத்தப்பட்ட பின்பு மார்ஷல் தரப்பில் ஜான்சன் பேசினான். அதன்பின்பு சகோ.லாரன்ஸ் பேசினார். அவர்களுக்குப்பின் அமிர்தலிங்கம் பேசினான். இவன் ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி புத்தகம் ஒன்றை தனது எடுத்துக்காட்டுக்காக உபயோகித்து, பின் அதை கிழித்தான். ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியை இந்த பேலியாளின் மகன் அவமதித்தான். திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான் என்று நீதிமொழிகள் கூறுகிறது. இதற்கு தக்க பதிலடி கொடுக்க சகோ.ராஜா அவரின் விவாத வேளை வந்தபோது தீர்க்கதரிசி செய்தியாளன் காக்குவ் பிலிப்பு என்ற புத்தகத்தின் தலைப்பு வரைபடபகுதியை கிழித்து, அதை ஆரோவ் (Arrow) செய்து பறக்கவிட்டு, அந்த புத்தகத்தை தூக்கி எறிந்தார். மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவு கொடாவிட்டால் அவன் ஞானியாயிருப்பான் என்று நீதிமொழிகள் கூறுகிறது. அமிர்தலிங்கத்திற்கு பிறகு எனக்கு மீண்டும் பேச வாய்ப்பு கொடுத்தார்கள். அவர்கள் என் வாதத்தை கேட்டாலும் சரி கேட்காவிட்டாலும் சரி என்ற தீர்மானத்துடன், முன்புபோல வேறொரு சுவிசேஷத்தின் தவறான உபதேசங்களை கடிந்துக்கொண்டு கண்டனம் பண்ணி என் வார்த்தைகளை அவர்களுக்கு கொடுக்க ஆரம்பித்தேன். மீண்டும் நான் என் வைராக்கியத்திலே பேசினேன்.

25. ஏழாம் சபைக்கால தூதன் (வெளி.3:14) அதாவது லவோதிக்கேயா சபைக்கால தூதன் வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். (வெளி.10:6) இவர் தன் ஊழியத்தை நிறைவேற்றி முடித்தார். இவருக்குப்பின் பலர் எழும்பி ஏழாம் சபைக்கால தூதன் எலியாவின் ஆவியை உடையவராகயிருந்ததால்,

எலியாவுக்குப்பின் எலிசா எழும்பினது போல சகோ.பிரன்காமிற்குப் பிறகு ஒருவர் எழும்பவேண்டும் என தங்களை முன் நிறுத்தினர். மோசேக்கு பின்பு யோசுவாவின் ஊழியம் இருந்தது. அதன்படி ஏழாம் சபைக்கால தூதனுக்குப்பின் நான், நீ என்று பலர் தங்களுக்கு தாங்களே பலவிதமான பதவிகளை தேடிக்கொண்டார்கள். எடுத்துக்காட்டுக்காக சகோ.ஜீனியர் ஜாக்சன் – அமெரிக்கா, சகோ. ரிச்சர்டு கேன் – சிங்கப்பூர், சகோ.டால்டன் புரூஸ் – நைனிட்டால், சகோ.தாமஸ் – வேலூர், சகோ. யோசுவா – கோயம்பேடு, சென்னை, சகோ. ஜெயராஜ் – புதுக்கோட்டை. இப்பொழுது காக்குவ் பிலிப்பு – ஆப்பிரிக்கா போன்ற சிலர் நான் அறிய.

26. இப்பொழுது நமது கருத்தரங்கிற்கு / வாதத்திற்கு உரியவர் காக்குவ் பிலிப்பு – ஆப்பிரிக்கா. இவன் தன்னை ஏழாம் சபைக்கால தூதனுக்குப்பின் எழுந்துள்ள தீர்க்கதரிசி செய்தியாளன் என்று அழைக்கின்றான். இவன் வலையில் தனது பந்தா பிழைப்புக்காக மார்ஷல் சிக்கியுள்ளான். இந்த காக்குவ் பிலிப்பு தன்னைத்தானே எரே.29:26 ன் படி ஒரு தீர்க்கதரிசியாக நியமித்துக்கொண்டான்.

27. என்னுடைய வாதம் கீழ்கண்டவாறு சற்று விசாலமாக, சத்திய எழுத்திலே கண்டிருக்கிறபடி இருந்தது. அநாதி தேவன் தாம் சிருஷ்டித்த மனுமக்களோடு ஆதி முதல் அந்தம் வரை இடைபடும் காலங்களை நாம் ஏழு யுகங்களாக (Dispensation) பிரிக்கலாம்.

(அ) **குற்றமற்ற / கள்ளகபடமில்லாத யுகம்.** ஆதி.2:25 (Innocence) ஒரு ஆண், ஒரு பெண். இருவரும் வாலிபப்பிராயத்தில் அதாவது ஆதாமும் ஏவாளும் தங்கள் வாலிபப்பிராயத்தில், இப்பொழுது இவர்கள் இருவரும் நிர்வாண நிலையில். ஆனாலும் அவர்களிடத்தில் மாம்ச இச்சையில்லை. கண்களின் இச்சையில்லை. வெட்கமும் இல்லை. ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியினால் திரையிடப்பட்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் வாலிபப்பிராயத்தின் நிர்வாண நிலையில் இருந்தாலும் சிறு குழந்தைகளைப் போன்ற கள்ளகபடமில்லாத குற்றமற்ற நிலை. நன்மை தீமை அறியாத நிலை.

(ஆ) **மனச்சாட்சி யுகம்.** ஆதி.3:7 (Conseience) கனியை புசிக்க கூடாது. இது தேவனுடைய கட்டளை. ஆனால் அவர்கள் அந்த கனியை புசிக்காதிருக்க தேவனால் தடை செய்ய முடியும். ஆனாலும் அவர்கள் தங்களது மனச்சாட்சிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். சாத்தான் தடைசெய்த கனியை புசிக்க தூண்டினான். ஆதலால் அவர்கள் புசித்தார்கள். மார்ஷல் இப்படிபட்டதான மனச்சாட்சியின் கீழ் பணத்திற்கு, புகழுக்கு, வெளிநாட்டு பிரயாணத்திற்கு அடிமையானான்.

(இ) நோவாவின் நாட்களில் **மானிட அரசாட்சி.** ஆதி.8:15 (Human Government). தேசங்கள் (Nations) ஜாதிகள் (Countries) வம்சங்கள் (Families), பாஷைகள் (Tongues) தோன்றின. பூமி பகுக்கப்பட்டது. (Earth Divided) இப்பொழுது மானிட ஆளுகை ஆரம்பமானது.

(ஈ) **வாக்குத்தக்க யுகம்.** ஆதி.12:1 (Promies) கர்த்தர் ஆபிரகாமை நோக்கி நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ. உன்னை பெரிய ஜாதியாக்குவேன். உன்னை ஆசீர்வதிப்பேன். உன் பேரை பெருமைபடுத்துவேன். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன். உன்னிடத்தில் ஒரு உற்பவ காலத்திட்டத்தில் நிச்சயமாய் திரும்ப வருவேன். அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான். ஆபிரகாம் வாக்குதத்தத்தை சுதந்தரித்தான்.

(உ) **நியாயப்பிரமாண யுகம்.** யாத்.19அதி (Law). இதை செய் – செய்தால் ஆசீர்வாதம். இதை செய்யாதே – செய்தால் தண்டனை. நியாயப்பிரமாணம் / கற்பனைகள் கொடுக்கப்பட்டது.

(ஊ) **சபைக்காலங்கள் –** அப்.2அதி. Church Ages. சபைக்காலம் கிருபையின் காலம் என்றும் பரிசுத்த ஆவியின் யுகம் என்றும் அழைக்கப்படுகிறது. கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை ஏழு சபைக்காலங்களில் தெரிந்துகொண்டு, கடைசி சபை முடிவில் அவளை எடுத்துக்கொள்ளுகிறார்.

(எ) **ராஜ்ஜியம்** வெளி.20:4 (Kingdom) கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சி.

28. இப்பொழுது இந்த சபைக்காலங்கள் ஏழு காலங்கள் ஊடாக செல்லவேண்டியது உள்ளது. ஒவ்வொரு சபைக்காலமும் ஒரு காலவரம்புக்கு உட்பட்டது. எப்படி ஏழு யுகங்களும் ஏழு காலவரம்பிற்கு உட்பட்டிருந்ததோ அதே போன்று ஏழு சபைகள் ஏழு காலவரம்பிற்கு உட்பட்டது. ஒவ்வொரு சபைக்கும் ஒரு தூதன் உண்டு. இரு தூதர்கள் அல்ல. பல தூதர்கள் அல்ல. மாறாக ஒரே ஒரு தூதன். இந்த தூதனுக்குப்பின் அவனுடைய வாரிசுகள் அல்ல. அந்தந்த தூதனுக்கு ஒரு செய்தி உண்டு. செய்தியானது அந்தந்த கால தூதனுக்குத்தான் கொடுக்கப்படும்.

செய்தியில் ஒரு சிலருக்கோ அல்லது பலருக்கோ பங்கு கிடையாது. ஆதலால் காக்குவ் பிலிப்புவுக்கு லவோதிக்கேயா சபைக்கடுத்த செய்தியில் எந்தவிதமான பங்கும் பாத்திரமும் கிடையாது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29. | (அ) எபேசு | - | 53-170 | பவுல் | விசுவாசம் |
| | (ஆ) சிமிர்னா | - | 170-312 | இரேனியஸ் | வல்லமை |
| | (இ) பெர்கமு | - | 312-606 | மார்ட்டின் | ஞானம் |
| | (ஈ) தியத்தீரா | - | 606-1520 | கொலம்பா | தன்னடக்கம் |
| | (உ) சர்தை | - | 1520-1750 | லூதர் | பொறுமை |
| | (ஊ) பிலதெல்பியா | - | 1750-1906 | வெஸ்லி | தேவபக்தி |
| | (எ) லவோதிக்கேயா | – | 1906- ? | வில்லியம் மாரியன் பிரன்காம் | சகோதரசிநேகம் |

நாம் யாவரும் மேற்கண்டதை விசுவாசிக்கிறோம். காக்குவ் பிலிப்பும் இதை விசுவாசிக்கிறான். அப்படியானால் அவனது கைபாவையாகிய மார்ஷலும் விசுவாசித்தாக வேண்டும். ஆனால் சிலர் லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்து விட்டது என்ற துர்உபதேசத்தை செய்து வருகிறார்கள். இது தவறு. இது குறித்து ஏழாம் சபைக்கால தூதன் கூறுவது என்ன? இது சபைக்காலங்களின் முடிவு ஆகும். லவோதிக்கேயா சபை முடியவில்லை. முடிந்தால் சபை போய்விடும். சபை உள்ளவரை அது முடியவில்லை. (கே.ப.391 பக்கம்.31, பத்தி.74 நாள்.30-08-1964).

30. ஏழாம் சபையாகிய லவோதிக்கேயா சபை காலத்திற்குப்பிறகு மற்றொரு சபைக்காலம் கிடையாது. இது தேவனுடைய கணக்குக்கடுத்தது. ஆதலால் ஏழாம் சபைக்கால தூதனுக்குப்பிறகு மற்றொரு தூதனும் / செய்தியாளனும் கிடையாது. கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். For the Lord himself shall descend from haven with a shout with the Voice of the archangel and with the trumps of God, and the dead in Christ shall rise first. ஆங்கிலத்தில் and என உள்ளது. அதாவது மேலும் / மற்றும் என உள்ளது. இது தமிழில் அப்பொழுது என உள்ளது. இது தவறு. மேலும் / மற்றும் என இருக்க வேண்டும். அதாவது : கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும் இறங்கி வருவார். மற்றும் / மேலும் (அப்பொழுது அல்ல) கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என இருக்க வேண்டும். இங்கு Shout – ஆரவாரம் என்பது ஒவ்வொரு சபைக்காலத்திலும் அதனதன் தூதன் / செய்தியாளன் சுமந்துக்கொண்டு வந்த செய்தியாகும். உதாரணமாக பெர்கெமு சபையின் பிரதான செய்தியாளன் மார்ட்டின். இவருக்குப்பின்பு மற்றொரு குட்டி செய்தியாளனோ அல்லது ஒரு சிறப்பு செய்தியாளனோ கிடையாது. அதுபோன்று லவோதிக்கேயா சபையின் செய்தியாளன் வில்லியம் மாரியன் பிரன்காம். இவருக்குப்பின்பு எந்த விதத்திலும் மற்றொரு செய்தியாளன் கிடையாது. ஆக எபேசு சபைக்காலத்தில் தொடர்ந்த ஆரவாரம் லவோதிக்கேயா சபைக்காலம் வரை தொடர்ந்து சென்று கொண்டிருக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் தங்கள் காலத்தில் கூட எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. (1பேது4:7) இது கடைசி காலமாயிருக்கிறது. (1யோ2:18) என நினைத்தார்கள். ஆனால் எபேசுவில் ஆரம்பமான ஆரவாரம் லவோதிக்கேயா சபைக்காலம் வரை, அதாவது ஏழு சபைக்காலங்களின் வழியாக செல்லவேண்டியதிருந்தது. ஏனென்றால் கிறிஸ்துவின் மணவாட்டி ஏழு சபை காலங்களிலிருந்து தெரிந்துக்கொள்ளபட்டவளாக இருக்கிறாள். ஆக கடைசி சபைகால தூதனுடைய ஆரவாரம் அதன்பின் பிரதான தூதனுடைய சத்தம். கடைசி சபைகால தூதனுடைய செய்திக்குப்பிறகு மற்றொரு தூதனுடைய செய்திக்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் கிடையாது. மாய்மாலக்காரன் காக்குவ் பிலிப்புக்கு மாத்திரமே ஆதாரங்கள் உண்டு. அவனை பின்பற்றும் அவனது கொத்தடிமை மார்ஷலுக்கும் ஆதாரங்கள் உண்டு. இவன் பெறும் பண உதவிகள் இவனை இவ்வாறு துதிபாட வைக்கிறது. ஆக இவர்களுடைய போதனை பேய்தனத்துக்கடுத்தது. ஆக ஏனைய சபைக்காலத்தைப் போன்று லவோதிக்கேயா சபைக்கும் ஒரே தூதன், ஒரே செய்தியாளன்.

31. இங்கு சற்று தானி.10:6 யை தியானியுங்கள். அவருடைய (தேவனுடைய) வார்த்தைகளின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப்போல் இருந்தது. இப்பொழுது கவனியுங்கள் : கர்த்தர்தாமே ஆரவாரத்துடன் இறங்கி வருவார். (1தெச.4:16) இந்த ஆரவாரத்தின் செய்தி ஏழு சபைக்காலங்களிலும் கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்கப்பட்டு கடைசி லவோதிக்கேயா சபையில் செய்தி முற்றுப்பெறுகிறது. இந்த ஆரவாரம் சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை தொனித்துக் கொண்டுதான் இருக்கும். ஆக தேவன் மீண்டும் ஒருமுறை

ஆரவாரத்தோடு / மற்றொரு செய்தியோடு சபைக்காக வர வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் இல்லை. இனி நடக்கயிருப்பது பிரதான தூதனுடைய சத்தம். அதற்கடுத்ததாக சபை எடுத்துக்கொள்ளப்படுதல்.

32. அடுத்து தேவனுடைய எண்கள் விதிமுறையில் ஏழு பரிபூரணம். ஏழாவது சபை பரிபூரணமடைந்தபின், அதாவது கிறிஸ்துவின் ஏழு தெய்வீக சுபாவங்களில் சபை பரிபூரணமடைந்தவுடன் அது எடுத்துக்கொள்ளப்படும். முடிவின் சபைக்கடுத்த செய்தி சகோதர சிநேகம். சகோதர சிநேகத்திற்கடுத்து மற்றொரு செய்தி வேதவாக்கியங்களின் அடிப்படையில் கிடையாது. இது ஏழாவது தலைமுறையில் வந்த ஏனோக் எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு முன் அடையாளம். இந்த திருஷ்டாந்தத்தின்படி சபையானது ஏழு தெய்வீக சுபாவங்களில் முழு வளர்ச்சி அடைந்து இயேசு கிறிஸ்துவைப்போல் அவருடைய தன்மைகளில் காட்சியளித்து, ஏழாவது சபைக்கால முடிவில் எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு பெறுகிறது.

33. இவ்வாறாக தேவனுக்கடுத்த எண்கள் 3, 7, 10, 12, 24, 40, 50, 70 என வேதவாக்கியங்களில் காணப்படுகிறது. இதில் 8 என்ற எண்ணுக்கு இடம் கிடையாது. தேவன் தமக்கடுத்த காரியங்களை வேதத்தின் எண்களைக்கொண்டு உறுதிப்படுத்துகிறார். இந்த எண்களோடு மற்றொரு எண்ணை குறைவாக / கூடுதலாக சேர்த்தால் அடுத்துவரும் சம்பவங்களுடன் அது பொருந்தாது. (முதலாம் முத்திரை, பக்கம்.201, பத்தி. 20) இது ஆங்கிலத்தில் Unbroken Numbers என கூறப்பட்டுள்ளது.

34. கவனியுங்கள்.

1. தேவனுடைய ஏழு தெய்வீக சுபாவங்கள். 2. ஏழு சபைக்காலங்கள்
3. ஏழு சபைக்காலங்களின் தூதர்கள் 4. ஏழு நட்சத்திரங்கள்
5. ஏழு பொன் குத்துவிளக்குகள் 6. ஏழு எக்காளங்கள்
7. ஏழு முத்திரைகள் 8. ஏழு இடிமுழக்கங்கள்
9. ஏழு ஆவிகள் 10.ஏழு பரிமாணங்கள்
11. ஏழு ஜாமங்கள் 12.ஏழு கண்கள்
13. ஏழு பலிபீடங்கள் 14.ஏழு மலைகள்
15. ஏழு கொம்புகள் 16.ஏழு தலைகள்
17. ஏழாம் நாள் 18. ஏழு காளைகள்
19. ஏழு ஆட்டுக்கடாக்கள் 20. ஏழு தரம் விழுந்தாலும் நீதிமான் திரும்பவும் எழுந்திருப்பான். இவைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. இதில் ஏதாவது ஒன்றை கூட்டினால் அல்லது குறைத்தால் அது பின்வரும் சம்பவங்களுடன் பொருந்தாது. ஏழுசபைக்காலங்களுடன் நீங்கள் எட்டாவது தீர்க்கத்தரிசி செய்தியாளனாக ஒருவரைக்கொண்டு பொருத்தமுடியாது. அது ஒரு முறைகேடு ஆகும். அது அனைத்தையும் ஒரு குழப்பத்திற்குள் கொண்டுவந்து விடும். ஏழு சபைக்காலங்கள் ஏழு சபைக்கால தூதர்கள். ஏழு சபைக்காலங்களில் எட்டாவது தூதனாக செய்தியாளனாக வருவது என்பது ஒரு முரண்பாடாகும். காக்குவ் பிலிப்புவே ஒரு முரண்பாட்டின் வித்தாகயிருப்பதால் இந்த முரண்பாட்டைக்கொண்டு லவோதிக்கேயா சபையை ஒரு குழப்பத்திற்குள் கொண்டு வருகிறான். இந்த முரண்பாட்டின் வாரிசாக தமிழ்நாட்டில் மார்ஷல் உள்ளான்.

35. ஆக தேவனுடைய கணக்கு வீதத்தில் 7 என்றால் அது 7 தான். அங்கு 8க்கு இடம் இல்லை. 7ல் ஒன்றைக்குறைத்து 6 ஆக்க முடியாது. 7க்கு பின் ஒன்றைக்கூட்டி 8 ஆக்க முடியாது. 7 என்பது தேவனுடைய எண். இது தேவனுடைய முற்றுப்பெற்ற, பூரணமான எண். 7 ல் தேவன் நிறைவு பெறுகிறார். 7 என்பது பூர்த்தி அடைந்ததை குறிக்கிறது. ஏழாம் சபைக்காலத்திற்கு பின் வேறொரு சபைக்காலமும் கிடையது. ஏழாம் சபைக்கால தூதனுக்குப்பின் வேறொரு தூதனும் கிடையாது. லவோதிக்கேயா சபையோடு சபைக்கடுத்த காரியங்கள் யாவும் முற்றுப்பெற்று பின்பு மற்றொரு யுகத்திற்கு கடந்து செல்கிறது. அதாவது ராஜ்ஜியம். முதல் 2000 ஆண்டுகள் ஆனபோது உலகமானது தண்ணீரினால் அழிக்கப்பட்டது. இரண்டாவது 2000 ஆண்டில் கிறிஸ்து வருகிறார். மூன்றாவது 2000 ஆண்டுகள் நடந்துக்கொண்டு இருக்கிறது. 6000 ஆண்டுகள் தேவன் உலகத்தை கட்டினார். 6000 ஆண்டுகள் சபையானது உலகிற்கு எதிராக பாடுபடுகிறது. இதன் பிறகு 7000-மாவது ஆண்டு. இது 1000 வருட அரசாட்சி காலமாகிய 1000 ஆண்டு காலம் ஆகும். இதுபோன்று சபைக்குக்கூட ஏழு சபைக்காலங்கள் உண்டாயிருக்கிறது. ஏழுசபைக்காலங்கள், சிருஷ்டிப்பில் 7000 ஆண்டு காலங்கள் யாவும் 7 என்னும் எண்ணில்தான் அமைந்துள்ளது. 7 is God's number. 7 is God's Perfect number. 7 is God's Completed number.

கவனியுங்கள் நீங்கள் 8க்கு சென்றால் அது உங்களை நித்தியத்திற்கு கொண்டு செல்லும். When you kit the eighteth you go in to eternity.

36. ஆனால் இந்த பேலியாளின் மக்கள், கள்ள தீர்க்கத்தரிசி காக்குவ் பிலிப்பு போன்ற, கள்ள அப்போஸ்தலன் மார்ஷல் போன்ற கபடஸ்தர்கள் கிறிஸ்துவினுடைய தீர்க்கதரிசி, அப்போஸ்தலன் வேஷத்தை தரித்துக்கொண்டு, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்டு, நீதியின் ஊழியக்காரர்களுடைய வேஷத்தை தரித்துக்கொண்டு, உலகத்தோற்றம் முதல் ஜீவ புஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டிராத பூமியின் குடிகளை ஏமாற்றுகிறார்கள். அதுதானே பிசாசின் தொழில். அதைத்தான் பிசாசின் இந்த இரு ஊழியகாரர்களும் செய்கிறார்கள். நிச்சயமாக இவர்கள் இருவருடைய முடிவும் இவர்களுடைய கிரியைகளுக்குத்தக்கதாக இருக்கும். சுருக்கமாக சொல்லப்போனால் இந்த காக்குவ் பிலிப்புவின் அப்போஸ்தலன், இவனுடைய விசுவாசிகளாகிய சீஷர்கள் அனைவரும் பண ஆசையுடன், தங்களை காக்குவ் பிலிப்புவுக்கு விற்று 7ல் இருந்து 8க்கு தாண்டுகிறார்கள். அது அவர்கள் காலை வாரிவிடும். அவர்களது பண ஆசையே எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது.

37. நைனிட்டால், டால்டன் புரூஸ் என்பவருக்கு முன்பாக தமிழ்நாட்டில் சிலர் பல்லாக்கு தூக்கி நடனமாடி சென்றார்கள். பிரசங்கி 11:1-2 வசனங்களைக் கொண்டு ஏழாவது சபைக்கால தூதனுக்கு பின் 8வதாக ஒரு தூதன் உண்டு. அவர்தான் எங்கள் டால்டன் புரூஸ் என்று பரவசமாக பாடிச்சென்றார்கள். உன் ஆகாரத்தை தண்ணீர்கள் மேல் போடு அநேக நாட்களுக்குப்பின்பு அதன் பலனை காண்பாய். 7 பேருக்கும், 8 பேருக்கும் பங்கிட்டுக்கொடு. மீகா.5:5 அசீரியா ராஜாவுக்கு எதிராக சமாதான கர்த்தர் 7 மேய்ப்பர்களையும், மனுஷரில் 8 அதிபதிகளையும் நிறுத்தினார். இந்த இரு வசனங்களை கொண்டு ஏழாம் சபைக்கால தூதனுக்குப்பிறகு எட்டாவதாக ஒரு தூதன் உண்டு. அவர்தான் எங்கள் டால்டன் புரூஸ் என்ற பேய்தனத்திற்கடுத்த லௌகிக சம்பந்தமான உபதேசத்தைக் கொண்டு வந்தார்கள். அதேபோன்று தான் காக்குவ் பிலிப்பும் மத்.25:6, வெளி.12:14 யை தன் கரங்களில் எடுத்துக்கொண்டான். நான் முன்பே எழுதியபடி இந்த இருவசனங்களுக்குரிய வெளிப்பாடு, பொருள், அர்த்தம், விளக்கம், வியாக்கியானம் அனைத்தும் ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தியில் உள்ளது. இதன்பின் அதை தொடர்ந்து மற்றொரு செய்தியா? காக்குவ் பிலிப்பு தன்னை மிக்க ஞானி என்று எண்ணிக்கொண்டான். உங்களையே புத்திமான் என்று எண்ணாதிருங்கள். (ரோ.12:16) இவர்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத வார்த்தைகளை, சம்பவங்களை இணைத்து, பிணைத்து அவைகளைக்கொண்டு புதிய வெளிபாடு எனக்கூறி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். மக்களை வஞ்சிக்கிறார்கள்.

38. **இந்த ஏமாற்று வித்தைகாரர்களுக்கு இணையாக சிலவேத பூர்வமான எடுத்துக்காட்டுக்கள்.**

(அ) அப்.5:36,37 **தெயுதாஸ்.** இவன் இந்த காக்குவ் பிலிப்பு போன்று தன்னைத்தானே ஒரு பெரியவனாக காண்பித்தான். இந்த காக்குவ் பிலிப்பு எவ்வாறு தனது கைக்கூலியாக மார்ஷலை வைத்துள்ளானோ அதேபோன்று இந்த தெயுதாஸ் சுமார் 400 பேர்களை தனக்கு ஆதரவாக வைத்திருந்தான். அவர்களுக்கு பண்டம், பலகாரம் கொடுத்து அவர்களை தன்னுடன் தக்க வைத்துக்கொண்டான். ஆனால் ஒருநாள் அவனுடைய முடிவு வந்தது. அவன் மரித்தான். அவனை சேர்ந்த அனைவரும் நான்கு திசைகளுக்கும் ஒடிச்சென்று அவமாய் போனார்கள். தெயுதாஸ் உடன் அவர்களது சரித்திரமும் முடிவு பெற்றது.

(ஆ) இதோடு மட்டுமல்ல **கலிலேயனாகிய யூதாஸ்** என்பவன் எழுந்தான். அவன் தான் இயேசுவுக்கு சொந்தகாரன். அவருக்குப்பின் நான் தான் அவருடைய வாரிசு என்ற நயவசனிப்போடு மக்களிடம் பேசி, தன்னை பின்பற்றுமாறு அநேக மக்களை தன் பக்கம் இழுத்தான். முடிவில் அவன் முயற்சியில் அழிவே அவனை சந்தித்தது. தன்னுடைய அழிவில் மற்றவர்களையும் இழுத்துக்கொண்டான். ஆக அவனும் அவனை சார்ந்தவர்களும் அக்கினிக்கடலிலே விழுந்து மாண்டு போனார்கள்.

(இ) தமிழ்நாட்டில் **பாலாசீர்லாறி** எழுந்தார். தன்னை மனுஷகுமாரன் என்று அழைத்தார். அற்புத அடையாளங்களை நடப்பித்தார். இவருக்கும் உலகம் முழுவதும் தொண்டர்கள் இருந்தார்கள். தன்னை சகோ.பிரன்காமோடு இணைத்து புகைப்படம் எடுத்துக்கொண்டார். காலப்போக்கில் பாதை தவறி திசைமாறி சென்றார். இவரது கதையும் கந்தலாயிற்று. பலர் இவரை விட்டு வெளியேறினார்கள். முடிவில் அவர் மரித்தார். அவரை பின்பற்றின அனைவரும் மோசம் போனார்கள். ஏனென்றால் தங்களது சொத்து சுகங்களை விற்று பாலாசீர்லாறியின் காலடியில் வைத்திருந்தார்கள். அவர் கடந்தபின் தெருவிற்கு வந்தார்கள். இதில் வேலூர் தாமஸ்,

புதுக்கோட்டை ஜெயராஜ் போன்றவர்கள் மற்றவர்களை ஏமாற்றி எப்படியோ பிழைத்துக்கொண்டார்கள். இவர்கள் தங்களை சுதாரித்துக்கொண்டு வேலூர், திருச்சி போன்ற இடங்களில் அநேக ஆத்துமாக்களை வேட்டையாடினார்கள். பின் இவர்களும் மரித்தார்கள். இவர்களை பின்பற்றின கூட்டமும் திசைதெரியாமல் நான்கு திசைகளிலும் சுற்றி திரிந்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தோ பரிதாபமான நிலை. இவர்களில் திருச்சி ரூபன் தன்னை சுதாரித்துக்கொண்டார். இவர்கள் எல்லாம் ஒருவனை தங்கள் மார்க்கத்துக்குள் கொண்டுவர தெரு தெருவாக சுற்றினார்கள். அவன் மார்க்கத்தான் ஆன பின்பு அவனை இருமடங்கு நரகத்தின் பிள்ளைகளாக்கிவிட்டு அனைவரும் மாண்டுபோனார்கள்.

39. இங்கு தெயுதாஸ், யூதாஸ், பாலாசீர்லாறி இவர்களோடு கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்புவையும் ஒப்பிட்டு பேசி மார்ஷல் கூட்டத்தினரை கடிந்துக்கொண்டு வந்தேன். காக்குவ் பிலிப்பு மண் சுவரை வைத்தான். மார்ஷல் கொத்தனாராக இருந்து அதற்கு சாரம் இல்லாத சாந்தை கூலிக்காக பூசி வருகிறான். ஆதலால் மார்ஷல் கூட்டிக்கொண்டு வந்த கூட்டமும், மேற்கண்ட மூன்று கூட்டத்தாரைப்போன்று கூடிய சீக்கிரத்தில் அவமாய் போய் தெருவிற்கு கருத்தமுகத்தோடு வருவார்கள் என என்னுள் உள்ள ஆவியில் அனல் கொண்டு கடிந்து கண்டனம் பண்ணி பேசினேன். எதிர்த்து பேசிகிறவர்களை கண்டனம் பண்ணு என்றுதானே பவுல், தீமோத்தேயுவுக்கு கட்டளையிடுகிறான். (தீத்.1:9) இதை நினைவு கூர்ந்தேன். எனது கண்டிப்பையும், கடிந்துகொள்ளுதலையும், புத்திமதிகளையும், மார்ஷல் கோஷ்டியினரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. என் எழுத்துக்கள் எப்படியிருக்கிறதோ அப்படியே நான் என் சொல்லிலும், நடக்கையிலும் இருக்கிறேன். ஆதலால் அவர்கள் மத்தியில் என் வார்த்தைகள் கேட்கப்படாமல் போயிற்று. இவர்கள் என்னை பேசவிடாமல் இடையூறுகள் தொடக்கத்திலிருந்தே செய்துகொண்டு வந்தார்கள். கருத்தரங்குக்கு வந்தவர்கள் பொய்யை ஏற்றுக்கொள்ள கூடாத படிக்கு உண்மையானது, சத்தியமானது நம்மிடத்தில் மிதமிஞ்சி இருந்தது. ஆனால் அவர்களோ அதை ஏற்றுக்கொள்ளாமல் தவறான பாதையை தெரிந்துகொண்டார்கள். ஒரு காலக்கட்டத்தில் மார்ஷல் தரப்பில் வந்திருந்த, அவர்களில் பிரதானமான அருண்குமார் என்பவர் வாதமேடைக்கு என்னை நோக்கி வந்தார். கர்த்தர் தாம் ஏற்படுத்திய ஐந்துவகை ஊழியங்களில் ஒருவனைக்கொண்டு உங்களிடம் பேசும் போது, நீங்கள் அவன் பேசுவதை கேட்க புறக்கணிப்பது, சத்தியத்திற்கு செவி கொடுக்க முடியாதபடி கடின மனமடைந்தவர்களாகும் போது இருக்கும்படி மாறுபாடனவனுடைய அடையாளத்தை நீங்கள் பெற்றுக் கொண்டு விடுகிறீர்கள். அதுதான் பிசாசின் முத்திரை. அதுவே மிருகத்தின் முத்திரையுமாகும். அந்த முத்திரையை பெற்றுவிட்டால் நீங்கள் இனி வெளியே வந்து சத்தியத்தை அறிகிற அறிவடைந்து சுதந்திரமடையமுடியாது. அவனைத்தான் சதாகாலங்களிலும் சேவிக்கிறவர்களாயிருப்பீர்கள். இது கடினமான விஷயமாகத்தான் இருக்கிறது. பாருங்கள் அது வெட்டுகிறது. ஆனால் அதுதான் அது. அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. வேதம் அதைத்தான் கூறுகிறது. அதையே நானும் கூறுகிறேன். நானோ மனுஷர்களின் நிந்தனைக்கு பயப்படாமலும் அவர்கள் தூஷனங்களினால் கலங்காமலும் என் ஸ்தானத்தில் நின்று கொண்டிருந்தேன். நான் ஆவியில் மிகவும் துக்கப்பட்டேன்.

40. மார்ஷல் வகையாறாக்கள் கண்கள் இருந்தும் காணாமலும், காதுகள் இருந்து கேளாமலிருக்கிற உணர்வில்லாத ஜனங்களாயிருந்தபடியினால் கள்ளத்தீர்க்கதரிசியின் கள்ளத்தீர்க்கதரிசனம், கள்ளசகுணம், இல்லாத விசேஷம், அவன் இருதயத்தின் கபடத்தை தீர்க்கதரிசனமாக சொல்லும் வார்த்தைகளை மார்ஷல், ஜான்சன், அமிர்தலிங்கம் பிரசங்கிக்கும் போது அல்லேலூயா! ஸ்தோத்திரம்! என கூச்சலிட்டு வரவேற்பது தான் அவர்களுக்கு பிரியமாய் இருந்தது. ஜீவனுக்கேதுவான கடிந்துக்கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்திலே தங்கும்.

41. மீண்டும் என்வாதம் தடைப்பட்டது. தொடக்கத்தில் முன்னுரை நேரத்தில், இப்பொழுது வாத நேரத்தில். ஆனாலும் தடைப்பட்ட என் வாதத்திற்கு நீங்கள் வாருங்கள். நான் உங்களை அழைத்துச் செல்லுகிறேன். வாதத்தை முன் வைப்போமா? பாருங்கள். ஏழாம் சபைக்கால தூதன் ஒரு தீர்க்கத்தரிசி (வெளி.10:6) இவர் ஜாதிகளுக்கு ஒரு தீர்க்கதரிசி. இவர் ஏழாம் சபைகாலத்திற்கு தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசி செய்தியாளன். தன் தாயின் வயிற்றில் உருவாகும் முன்னே தேவனால் அறிந்து, தெரிந்துகொள்ளப்பட்டு ஒரு பணிக்காக அழைக்கப்பட்டவன். இவனுடைய அழைப்பு எரேமியா தீர்க்கதரிசி போன்று இருந்தது. கர்த்தருடைய வார்த்தை அவருடைய தீர்க்கதரிசிகளுக்கு மாத்திரமே வரும். (2நாளா.18:4-7) இந்த தூதன் கர்த்தர் உரைக்கிறார். Thus saith the Lord என்று கூறி கர்த்தருடைய வார்த்தையை உடையவனாக இருக்கிறார். பாருங்கள் ஒரு

தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தையாக இருக்கிறான். தேவனை போன்று பேசுகிறான். ஆனால் அவன் தேவன் அல்ல. தேவனுடைய வார்த்தையை / செய்தியை சுமந்துக்கொண்டு வரும் ஒரு செய்தியாளனாக இருக்கிறான்.

42. **இப்பொழுது ஏழு சபைக்கால தூதர்கள் யார் என்பதை வேதவாக்கியங்களின் அடிப்படையில் காணலாம்.** இதோ வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது (வெளி.4:2) இந்த சிங்காசனத்திலிருந்து மின்னல்களும், இடிமுழக்கங்களும், சத்தமும் புறப்பட்டன. தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன. (வெளி.4:5) ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் தான் இந்த ஏழு சபைக்கால தூதர்கள். இங்கு எட்டாவது அக்கினி தீபத்திற்கு இடமே இல்லை. காக்குவ் பிலிப்பு பக்கவழியில், வேறுவழியில் நுழைந்துள்ளான். தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை கூட்டக்கூடாது. இந்த பாவத்திலிருந்து காக்குவ் பிலிப்பு, மார்ஷல் இவர்களின் கூட்டத்தார்கள் தப்பவே முடியாது. ஆக்கினைத்தீர்ப்பு நிச்சயமாக இவர்கள் மீது விழும். இந்த ஆக்கினைத்தீர்ப்பு என்ன என்று உங்களுக்கு தெரியுமா? ஜீவ புஸ்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்திலிருந்தும், தேவஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் இவர்களுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்.

43. சபை பக்திவிருத்திக்கு அடுத்த ஊழியத்திலும் தீர்க்கதரிசிகள் உண்டு. இந்த தீர்க்கதரிசிகள் சபையில் இரண்டு பேராவது, மூன்று பேராவது பேசலாம். மற்றவர்கள் அவர்கள் பேசுவதை நிதானிக்க வேண்டும். அதாவது பேசப்படும் தீர்க்கதரிசனத்தை நிதானி. சொன்னதை அப்படியே ஏற்றுக்கொள்ளாதே. அதை ஆராய்ந்து பார், நிதானித்துப்பார், தியானி. (1கொரி.14:29-32) நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுக்குள்ளவர்களானபடினாலே நம்மில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தை உடையவர்கள் விசுவாச பிரமாணத்திற்கேற்றதாக சொல்லக்கடவர்கள். (ரோ.12:6) மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகள் வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தை பற்றி அசதியாயிராதே. (1தீமோ.4:14) இவைகள் எல்லாம் சபை பக்திவிருத்திக்கடுத்த தீர்க்கதரிசன வரங்களையுடைய தீர்க்கதரிசிகள். இவர்களில் சிலர் சீலா(அப்.15:32), பிலிப்புவின் 4 குமாரத்திகள் (அப்.21:9), அகபு(அப்.21:10) போன்றவர்கள் இவர்கள் சபை பக்திவிருத்திக்காக கர்த்தருடைய சித்தத்தை சபைக்கு வெளிப்படுத்துகிறார்கள். (அப்.13:1)

44. சபைகாலங்களின் முதல் தூதன் – அப்.பவுல். இவன் ஒரு அப்போஸ்தலன் மற்றும் தீர்க்கதரிசி.(அப்.13:1,9) கடைசி சபை லவோதிக்கேயாவின் தூதன் வில்லியம் மாரியன் பிரன்காம். இவரும் வெளி.10:6 ன்படி ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். சபைக்காலங்களில் இடைபட்ட ஐந்து தூதர்களும் சீர்திருத்தக்காரர்கள். இவர்கள் அப்போஸ்தலர்களும் அல்ல. தீர்க்கதரிசிகளும் அல்ல. ஆதலால்தான் இவர்கள் பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் என உச்சரித்து ஞானஸ்நானம் கொடுப்பதை கடிந்து கண்டனம் பண்ணி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானத்தை போதிக்க முடியவில்லை / தவறிவிட்டார்கள். நீண்ட தலைமயிரே ஒரு பெண்ணுக்கு அவளது தலைமுக்காடு என்பதை இவர்களால் உபதேசிக்க முடியவில்லை. ஒரு தேவன், அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என தேவத்துவத்திற்கு அடுத்த காரியங்களை பிரசங்கிக்க முடியவில்லை. தேவனுடைய வசனம் தூஷிக்கபடாதபடிக்கு பாலியஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்க வேண்டும் என போதிக்க முடியவில்லை. கிறிஸ்துமஸ் பண்டிகை என டிசம்பர் 25 ஆம் தேதியை குறித்து அதை கொண்டாடுவதையும், ஈஸ்டர் என்று ஒரு நாளை குறித்து அதை கொண்டாடுவதையும் இவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஏன்? இவர்கள் யாவரும் சீர்திருத்தக்காரர்களே. தேவனுடைய வார்த்தை தீர்க்கதரிசி செய்தியாளனுக்கே வருகிறது. இதனால்தான் தேவனுடைய வார்த்தை (Thus saith the Lord) அப்.பவுலுக்கும், தீர்க்கதரிசி பிரன்காமுக்கும் வந்தது. சபை பெந்தெகொஸ்தே நாளன்று ஆரம்பமானது. அது தொடர்ந்து ஏழு சபை காலங்கள் வழியாக கடந்து சென்று கடைசி சபை லவோதிக்கேயா முடிவில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

45. இந்த மதிகெட்ட பாகாலின் தீர்க்கதரிசி 24-04-1993-ல் அவன் இருதயத்தில் யோசனைகள் எழும்ப, பொல்லாத நினைவை நினைத்து அதினால் ஒரு தரிசனம் கண்டான். இவன் கண்ட தரிசனத்தில் சத்தியம் இல்லை.அந்த தரிசனத்தில் இவனுக்கு மத்.25:6, வெளி.12:14 நிறைவேறும்படியான ஊழியத்திற்கென இவனை சந்தித்த தூதன் இவனுக்கு தனிபொறுப்பை ஒப்படைத்தானாம். ஆக இவன் 24-04-1993-ல் நித்திய ஜீவவார்த்தைகளை பெற்றுக்கொண்டானாம். ஆதலால் இவன் தான் கற்றறியாதவைகளை போதிப்பானாம். இவனுடைய செய்தியை விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு மாத்திரமே நித்திய ஜீவன் உண்டாம். இதுகுறித்து இவனது செய்தி மத்.25:6ல் சத்தம் இதுதான் என்பதை 1 மற்றும் 6ம் பத்திகள் வரை தியானிக்கலாம். நிச்சயமாக யூதாஸ்க்குள் புகுந்த

சாத்தான் இவனுக்குள் 24-04-1993-ல் புகுந்தான் என்பதுதான் எனது கணிப்பு. இவனுடைய தரிசனத்தையும், உபதேசங்களையும் நீங்கள் நன்கு ஆராய்ந்து பார்த்தால் அனைத்தும் அவனுக்கு பெயரும், புகழும் உண்டாக்குகிற, அவனை மேன்மைப்படுத்துகின்ற காரியங்களாகவேயிருக்கும். இவன் தனக்கு மேன்மை தேடுகிறதினால், இவன் தரிசனங்கள் யாவும் பிசாசினுடையதே. பெருமை எப்பொழும் பிசாசினுடையது. பரிசுத்த வேதாகமத்தில் இந்த மதிகேடனைப் போன்று மதியீனன் தன்னை மேன்மைபடுத்திய, தன் இருதயம் மேட்டிமை கொண்ட தீர்க்கதரிசியை உங்களில் யாராவது எடுத்துக்காட்ட முடியுமா? முடியாது! ஆனால் தன் மினுக்கினால் தன் ஞானத்தை கெடுத்த ஒருவன் உண்டு. அவன் யார்? அவன் தான் லூசிபர் / பிசாசு. அவன் தான் இவன். இவன் தன்னுடைய சிந்தையில் கொண்டுள்ள தீர்க்கதரிசனங்களினால் தன்னை உயர்த்தி, அனைத்து தேவனுடைய தீர்க்கதரிசிகளுக்கும் மேலாக தன்னை உயர்த்தி, எல்லாவற்றிலும் எல்லாருக்கும் மேலாக தன்னை பெரியவனாக்கி, மேட்டிமையானவைகளையும் தூஷணமானவைகளையும் பேசும் வாய் இவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக உலகதோற்றம் முதல் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டிராத ஜனங்கள் யாவரும் இவனை ஒட்டிக்கொள்வார்கள், பின்பற்றுவார்கள், இவனுக்கு அப்போஸ்தலர்களாக இருப்பார்கள். இங்கு நான் பிரசங்கிப்பதை / எழுதுவதை காதுள்ளவன் கேட்க கடவன். கண்கள் உள்ளவர்கள் வாசித்து தியானிக்க கடவர்கள்.

46. மேலும் எபே.4:11ன் ஊழியம் செயல்படாவிட்டாலும் தேவனுடைய திட்டம் நிறைவேறுமாம். (செய்தி நியாயத்தீர்ப்பை திட்டவட்டமாக அறிவித்தல், பத்தி.10). கர்த்தர் உரைக்காதிருந்தும் கர்த்தர் உரைத்தார் என்று சொல்லும்போது, அபத்தத்தையும், பொய்குறியையும் தரிசித்து, கண்டதை நிர்வாகம் பண்ணனும் என்ற நம்பிக்கையில் தன் ஊழியத்தை ஆரம்பித்து, கெர்ச்சிக்கிற சிங்கம் போல சத்தமிட்டு யாரை விழுங்கலாம் என்று வகைதேடி திரிகிறான். ஆனால் மார்ஷலோ நீ மாம்சத்தை தின்றுவிட்டு எலும்பை மட்டும் எனக்கு போடு, அது எனக்கு பிழைப்புக்கு போதும் என கூறி அவனை பற்றிக்கொண்டான். ஆனால் இவனுடைய தரிசனங்கள் யாவும் மாயையாய் இருக்கிறது. இவ்வாறாக இவனுடைய வஞ்சகத்திற்கடுத்த உபதேசம், போதனைகள், தரிசனங்கள் நீண்டுகொண்டே போகிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும் என்பார்கள். இவனது செய்தியை விசுவாசிப்பவனுக்கு மாத்திரமே நித்திய ஜீவன் உண்டு என்பது எவ்வளவு பெரிய ஒரு தேவதூஷனம், பித்தலாட்டம், வஞ்சனை, சூது, இது இந்த கபடஸ்தனுடைய மனோராஜிமே அன்றி மற்றபடி அல்ல. மற்றும் எபே.4:11 செயல்படாவிட்டாலும் பரவாயில்லை, என் போதனைகளே போதும் என்கிறான். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காகத்தான் கர்த்தர் ஐந்து வகை ஊழியங்களை ஏற்படுத்தியுள்ளார். இது செயல்படாவிட்டால் சபை பக்திவிருத்தி அடையாது. தேவன் நியமித்ததை, அது செயல்படாவிட்டாலும் பரவில்லை என்று இந்த மடையன் கூறுகிறான்? செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தால் தான் இந்த ஊழியங்களை கர்த்தர் நியமித்துள்ளார். அப்படியானால் கர்த்தர் நியமித்ததை அசட்டை பண்ணி பேசும் இவன் யார்? பிசாசுதானே. அன்று ஏவாளுக்கு இப்படித்தான் தூண்டில் போட்டான். அவள் அதில் விழுந்தாள். இன்று மார்ஷல் விழுந்ததோடு மட்டுமல்ல, அநேகரையும் பாதளத்துக்குள் இழுத்து வருகிறான். பிரியமானவர்களே இந்த நயவஞ்சகர்கள் வலையில் விழுந்து விடாதீர்கள் என்று மீண்டும் மீண்டுமாக உங்களை எச்சரிக்கிறேன்.

47. அடுத்து இந்த அக்கிரமக்காரனுடைய அழைப்புக்கு வேதவாக்கியங்களில் எங்காவது ஒரு இடத்தில் கூட ஆதாரங்கள் கிடையாது. ஆதாரத்தை இந்த மாய்மாலக்காரனும் கொடுக்கவில்லை. அவன் சிஷியன் மார்ஷலும் கொடுக்கவில்லை. ஏனென்றால் இவர்கள் நம்முடைய கரத்தில் உள்ள பரிசுத்த வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொள்வது இல்லை. இவன் இவனுக்கென்றே தனி பைபிள் ஜான் நெல்சன் டார்பி வேதாக பதிப்பை வைத்துள்ளான். அதையே மற்றவர்களுக்கு சிபாரிசும் செய்கிறான். மாயவித்தைகாரர்களாயிருந்து அதாவது குறி சொல்லுகிறவர்கள், நாள் மற்றும் அஞ்சனம் பார்க்கிறவர்கள், சூனியக்காரர், மந்திரவாதி, மாயவித்தைக்காரர்கள், சன்னதக்காரன், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறேன். (உபா.18:10-12) போன்றவர்கள் விசுவாசிகளானபோது, தாங்கள் உபயோகித்துவந்த புத்தகங்களைக் கொண்டு வந்து சுட்டெரித்தார்கள் என அப்.19:18,19 வசனங்களில் காண்கிறோம். ஆனால் இந்த பைத்தியக்காரன், பிசாசின் மகன் ஜேம்ஸ் மன்னர், ஸ்கோபீல்டு வேதாகம பதிப்பு போன்ற அநேக பதிப்புகளையும், சுவிசேஷபுத்தகங்களையும் சுட்டெரித்து அதை அப்.19:18,19 சம்பவங்களோடு முட்டாள் தனமாக ஒப்பிடுகிறான். இவன் பார்வையில் டார்பி வேதாக பதிப்பு தவிர அனைத்துமே இறையியல் வேலைபாடுகளை கொண்டதாகயிருக்கிறதாம் மற்றும் பிசாசின் பெருமைக்குரிய ஒன்றாகவும் இருக்கிறதாம். பூமியின் மேல் ஒரேயொரு வேதாகமம் தான், தன்னையே சுமக்கின்றதும், ஒருபோதும்

மறுபடியும் தீண்டப்படாததும் அல்லது அதன் ஆசிரியரால் கூட திருத்தம் செய்யப்படாததும், ஒரு பிரதியில் இருந்து எடுக்கப்பட்ட மறு பிரதி அல்லாததும், ஒரு பதிப்பிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதல்லாததுமாய் உள்ளது. அதுவே வழக்கறிஞர் ஜான் நெல்சன் டார்பி என்பவருடைய வேதாக பதிப்பு என்கிறான். இவ்விதமாக டார்பி வேதாகமம் தான் இந்த மீட்டளிப்பின் செய்திக்கு (Message of Restitution) தேவையானதாம். டார்பி என்ற ஒரே மனிதன் தேவனின் சார்பாக வேதாகமத்தை மொழிபெயர்த்துள்ளான் என கூறுகிறான். சகோ பிரன்காம் ஏழாம் சபைக்கால தூதன் மற்றும் தீர்க்கதரிசி என்பதை நாம் யாவரும் அறிவோம். நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். அவன் பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்திற்கும் (லூக்.1:17) பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.(மல்.4:6) முந்தின பணியை யோவான் ஸ்நானன் செய்தான். பிந்தின பணி ஏழாம் சபைக்கால தூதனுக்கு கொடுக்கப்பட்டது. முதல் எலியா அற்புதங்கள் செய்தான். ஆனால் பிரசங்கிக்க வில்லை. இரண்டாவது எலியாவாகிய யோவான் ஸ்நானன் அற்புதங்கள் எதுவும் செய்யவில்லை. மாறாக இவன் பிரசங்கம் மட்டும் செய்தான். மூன்றாவதாக எலியாவின் ஆவியை உடைய வில்லியம் மாரியன் பிரன்காம், ஏழாம் சபைக்கால தூதன், தீர்க்கதரிசி அற்புதங்களை செய்தார், அத்துடன் பிரசங்கமும் செய்தார். காக்குவ் பிலிப்பு தன்னைத்தானே ஒரு தீர்க்கதரிசி என்று அழைத்துக்கொண்டான். தன் அழைப்பை சகோ.பிரன்காமுடைய ஊழியத்தைப் போன்று வேதவாக்கியங்களை கொண்டு உறுதிப்படுத்த முடியவில்லை. இவன் தன் நாவின் சொல்லை வழங்கி, கர்த்தர் அதை உரைத்தார், தூதன் அதை உரைத்தான், தரிசனம் கண்டேன் என கூறி பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யை சொல்லி மக்களை வஞ்சிக்கிறான்.(எரே.23:32) கர்த்தராகிய ஆண்டவர் உரைத்தார் என்று சொல்லி தன் வலையில் பலரை சிக்கவைத்து அவனை நம்பினோருக்கு சாரமற்ற சாந்தை பூசுகிறான். ஆத்துமாக்களை கொள்ளையிடுகிறான். ஆனாலும் சாத்தானுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதா? தெரிந்தவர்கள் தப்பிக் கொண்டார்கள். தெரியாதவர்கள் கண்ணியில் விழுந்தார்கள். மார்ஷல் கோஷ்டி கண்ணியில் விழுந்து விட்டதை நான் காண்கிறேன்.

48. **பரிசுத்த வேதாகமத்தில் இந்த மதிகேடனுக்கு முன்னோடிகள் பலர் உண்டு.**

(அ) **சிதேக்கியா** 1ராஜா.22:11 இவன் தீர்க்கதரிசனம் உரைத்தான். எதனால்? பொய்யின் ஆவியினால். காக்குவ் பிலிப்பு கண்ட தரிசனங்கள் யாவும் இந்த பொய்யின் ஆவியினால்தான். அது நிச்சயம் / உறுதி.

(ஆ)**அனனியா** எரே.28அதி. கர்த்தர் இவனை அனுப்பினதில்லை. இவன் ஜனங்கள் தன் பொய்யை நம்பும்படி செய்தான். (எரே.28:15) இஸ்ரவேல் ஜனங்கள் அழிவதற்காக இவன் பொய்யான தீர்க்கதரிசனம் சொன்னான். (எரே.27:10) அவர்கள் என் நாமத்தை சொல்லி உங்களுக்கு பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். நான் அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்கிறார். (எரே.29:9) எனக்கு அருமையான மார்ஷல் வகையறாக்களே நீங்கள் நம்பியிருக்கும் காக்குவ் பிலிப்பு இந்த பணியைத்தான் செய்துக்கொண்டிருக்கிறான். உங்களை அழிவுக்கு ஒப்புக்கொடுக்கவே அவன் தன் வலையை விரித்து வருகிறான். இவன் ஒரு கபடமுள்ள வேலையாள் என்பதை உங்களுக்கு திரும்ப திரும்ப எழுதுகிறேன். நான் எழுதுகிறதை கண்கள் உள்ளவர்கள் நிச்சயமாக கண்டுகொள்வார்கள். நான் பேசுகிறதை காதுள்ளவர்கள் நிச்சயமாக கேட்பார்கள்.

(இ)**பர்யேசு** அப்.13:6 இவன் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. ஜனங்களை தேவவசனத்தை கேட்கவிடாதபடி, அவர்களை விசுவாசத்திலிருந்து திருப்பும்படி வகைத்தேடினான். இந்த காக்குவ் பிலிப்பும் பரிசுத்த வேதாகமத்தை தீயிட்டு எரிக்கிறான். வெறோரு சுவிசேஷத்திற்கு மக்களை திசை திருப்புகிறான். சத்தியத்தில் நடக்க மனதாயிருக்கிற மக்களுக்கு மாறுபாடான வழியை காட்டுகிறான். ஆதலால் பிரியமானவர்களே இந்த காக்குவ் பிலிப்புவையும் அவனது தொண்டன் பந்தா மார்ஷலையும் புறம்பே தள்ளுங்கள். இவர்கள் இருவரும் உங்களுடைய விசுவாச கப்பலை சேதப்படுத்தும் இமெனேயும் அலெக்சாண்டரும் ஆவார்கள். (1தீமோ.1:20)

(ஈ)**ஆகாப்** எரே.29:21,23 கர்த்தருடைய நாமத்தை சொல்லி சிதேக்கியா போன்று பொய்யான தீர்க்கதரிசனங்கள் உரைத்தான். காக்குவ் பிலிப்பு காரியங்கள் அனைத்தும் பொய்யான தீர்க்கதரிசனங்களே. நிச்சயமாக இவன் ஒரு மதிகெட்டவன் தான். இதுகுறித்து பின்வரும் பத்திகளில் எழுதுகிறேன்.

49. மேலும் இந்த மதிகெட்ட கள்ளதீர்க்கதரிசி காக்குவ் பிலிப்பு கூறுவதை கவனியுங்கள். நான் ஒரு தீர்க்கதரிசி என்பதற்கு ஆதாரம் என்னவென்று அவர்கள் கேட்டால், இப்படி சொல்லுங்கள். 1963-ல் பிரன்காமினால் இவரை பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழாம் சபைக்கால தூதன் இந்த மாய்மாலக்காரனைப் பற்றியோ இவனது ஊழியத்தை பற்றியோ எங்கும் சொன்னதாக அவருடைய செய்திகளில் ஆதாரங்கள் இல்லை. பானையில் சோறு

இருந்தால்தானே அகப்பையில் வரும். உன்னுடைய ஊழிய அழைப்பை பற்றி ஏழாம் சபைக்கால தூதன் அறிவித்தாரோ, இல்லையோ : அது முக்கியத்துவம் கொண்டது அல்ல. உன்னுடைய அழைப்பு வேதவாக்கியங்களில் எங்கு கூறப்பட்டுள்ளது என்பதுதான் முக்கியம். பழைய, புதிய ஏற்பாடு ஊழியர்களுக்கு அழைப்பு இருந்தது என்பதை நாம் வேதவாக்கியங்களில் தியானிக்கலாம்.

அ. இயேசுவைக்குறித்து ஏசா.61:1,2, லூக்.4:14-21.

ஆ. யோவான்ஸ்நானன் குறித்து ஏசா.40:3, மத்.3:1-3.

இ. பிரன்காம் குறித்து வெளி.3:14, 10:6.

ஈ. யூதாஸ் குறித்து சங்.41:9. ஆனால் உன்னுடைய அழைப்புகுறித்து நீ எதையும் சுட்டிக்காட்ட முடியவில்லை. மத்.25:6, வெளி.12:14 குறித்த ஊழியம் உனக்கு தரிசனமான தூதனால் கொடுக்கப்பட்டது என்பது வேதவாக்கியங்களுக்கு அடுத்ததல்ல. ஆதலால் அது நம்பத்தக்கதும் அல்ல. சகோ. பிரன்காம் ஏழாம் சபைக்கால தூதன். இவர் வேதவாக்கியங்களில் கூறப்படாத ஒரு நபரை தீர்க்கதரிசியாக அறிவிக்க முடியாது. அவர் அறிவிக்கவும் இல்லை. ஆனால் இந்த மாய்மாலக்காரன் பிதற்றுகிறான். சகோ.பிரன்காமுக்கு பின் அவரை தனக்கு சாதகமாக இவனுடைய வலையில் இழுக்கிறான். முதலாவதாக காக்குவ் பிலிப்பு பொய்யான தரிசனங்களை கண்டு, அவைகளை பிணைத்து, இணைத்து, அவைகளை விவரித்து தன்னுடைய பொய்களினாலும், வீம்புகளினாலும் மக்களை மோசம் போக்குகிறான். இவனிடமிருந்து அநியாயமாக பொருள் சம்பாதிப்பதற்கு மார்ஷல் உடந்தையாக இருக்கிறான். இவனை தேவன் அனுப்பவில்லை. இவன் தேவனுக்கடுத்த தரிசனங்கள் குறித்து ஒன்றும் தரிசிக்க வில்லை. தேவன் எதையும் இவனுக்கு கற்பிக்கவும் இல்லை. இவனால் ஜனங்களுக்கு எந்தவொரு பிரயோஜனமும் இல்லை. தியானியுங்கள். எரே.23:32 ஆனால் மார்ஷலுக்கு மாத்திரம் இவனது உறவில் பிரயோஜனம். என்ன? ஆசீர்வாதமான பணமழை. இந்த மார்ஷல் தான் காக்குவ் பிலிப்புவிடமிருந்து எந்த வகையிலும் பணஉதவி பெறாமல், அவனுடைய உபதேசத்தில் கவரப்பட்டு / ஈர்க்கப்பட்டு இந்த உபதேசத்தை இந்தியாவில் பிரஸ்தாபப்படுத்த என் சொந்த பணத்தையே செலவு செய்து இந்த மகத்தான ஊழியத்தை செய்து வருகிறேன் என்று கூற முடியுமா? நான் என் ஊழியத்தின் பாதையில் எத்தனையோ வெளிநாடுகளிலிருந்து வரும் ஊழியர்களை சந்தித்திருக்கிறேன். வெளிநாடுகளிலிருந்து வரும் ஊழியர்களிடம் பணம் பெறாமல், எந்தவொரு இந்தியனும் செய்திக்காக தன் சொந்த பணத்தை செலவு செய்து ஊழியம் செய்ததில்லை. கூலிக்காகவே தான் மாரடித்தார்கள். அனைவருடைய பணியும் சிறு மீனை தூண்டிலில் போட்டு பெரிய மீனை பிடிக்கும் தந்திரமாகவே காணப்பட்டது. ஆதலால் தான் பிரசங்கி சூரியனுக்கு கீழே செய்யப்படுகிற காரியங்களை எல்லாம் கவனித்து பார்த்தேன், இதோ எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. மாயை, மாயை எல்லாம் மாயை என்கிறான். பிரன்காம் பெயரை சொல்லி திரியும் பெரும்பாண்மையான ஊழியர்கள் நிலை எல்லாம் மாயையாகத்தான் இருக்கிறது.

50. **தன் மதிகேட்டில் திரியும் மதியீனன் கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்புவின் மாறுபாடான, மதிகேடான உபதேசங்கள் மற்றும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் அதற்கு எனது வாதங்களை தியானியுங்கள்.**

(அ) பல சத்தியங்கள் (Truths) உள்ளன. ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் தான் சத்தியம்.(The Truth) பல தெய்வங்கள் (God's) உண்டு. ஆனால் ஒரே ஒருவர் மட்டுமே மெய்யான தேவன்.( The True God) பல சபைகள் (Churchs) உண்டு. ஆனால் ஒன்றே ஒன்று மட்டும்தான் மெய்யான திருச்சபை. (The True Church) **பல பரிசுத்த ஆவிகள் (Holy Spirits) உள்ளன. ஆனால் ஒன்றே ஒன்று மட்டுமே உண்மையான பரிசுத்த ஆவி. (True Holy Spirit)** வேதாகம பதிப்புகள் அநேகம் உண்டு. ஆனால் ஒன்று மட்டுமே உண்மையான வேதாகமம். (டார்பி மற்றும் லூயிஸ் செகண்டின் இடையிலான ஒப்பீடு பத்தி.4 நாள். 2-11-2003). இங்கு பாலுக்குள் எவ்வாறு நஞ்சை ஊற்றுகிறான் என்பதை பாருங்கள். நாம் இங்கு முதலில் சத்தியத்தைக் குறித்து சற்று சிந்திப்போம். இதை நான் மனுஷ ஞானம் (காக்குவ் பிலிப்பு) போதிக்கும் வார்த்தைகளாக பேசாமல் / எழுதாமல் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாக எழுதுகிறேன். பாருங்கள் ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்.(1கொரி.2:15) தேவனே சத்தியபரர். எந்த மனுஷனும் பொய்யன்.(ரோ.3:4) நாம் இங்கு இந்த பொய்யன் கூறும் சத்தியத்தில் எந்த அளவுக்கு உண்மை உள்ளது என்பதை அறியலாம். அவனுக்கு அவன் கூறுவது அனைத்தும் சத்தியமாகத்தான் தோன்றும். ஆனால் ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறதினால், அது சத்தியமாக அவனுக்கு தோன்றாமல், அது லௌகிக சம்பந்தமான மனுஷ ஞானமாக தோன்றுகிறது. பாருங்கள் தேவனுடைய வசனமே சத்தியம். (யோ.17:17) அதாவது தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களே சத்தியம். ஆதியிலே

வார்த்தையிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.(யோ.1:1) இயேசு கிறிஸ்து – வார்த்தை – ஆதலால்தான் அவர் நானே சத்தியம் எனக்கூறினார். (யோ.14:6) சத்தியத்தைக் குறித்து இயேசு ஒருவர் தான் சாட்சி கொடுக்க முடியும். மனிதர்களுடைய சத்தியம் மாம்சத்திற்கேற்றபடி இருக்கும். ஆக சத்தியம் என்பது ஒன்றுதான். அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து – வார்த்தை. ஆக தேவனுடைய வார்த்தை தான் சத்தியம். சத்தியம் என்பது தேவனுடைய வார்த்தைக்குள் அடங்கியிருக்கிறது. அதற்கு புறம்பானது எதுவும் சத்தியம் என அழைக்கப்படலாகாது.

51. மேலும் கவனியுங்கள். சத்தியம் என்பது வாய்மொழியில் (வாய்மை) காணப்படுவது மாத்திரம் அல்ல, அது நிலைமாறாததும், நம்பத்தக்கதும், நித்தியமானதுமாகும். மனிதனுக்கு தெரிவிக்கப்படும், வெளிப்படுத்தப்படும் தேவனுடைய சித்தத்திற்கு சத்தியம் என்று பொருள். அது ஜீவனும் ஒளியுமாயிருக்கிறது. கர்த்தரே சத்தியபரர். (சங்.31:5) கர்த்தரே மெய்யான தேவன். எரே.10:10 இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள் இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். (1யோ.5:20) இவர் என்றென்றைக்கும் உண்மையை காக்கிறவர். (சங்.146:6) இவருடைய உண்ணை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது. (சங்.100:5) இவருடைய பூர்வ ஆலோசனைகள் சத்தியமும் உறுதியுமானவைகள் (ஏசா.25:1) இவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள். அவருடைய கட்டளைகள் எல்லாம். உண்மையானவைகள். அவைகள் என்றென்றைக்கும் உள்ள சகாகாலங்களுக்கும் உறுதியானவைகள். அவைகள் உண்மையும் செம்மையுமாய் செய்யப்பட்டவைகள். (சங்.111:7,8) கர்த்தருடைய வசனம் சமூலமும் சத்தியம். Thy Word is True from the beginning (சங்.119:160) பரிசுத்த ஆவியினால் பிறப்பது மாத்திரமே சத்தியம். ஏனென்றால் சத்தியஆவி தான் உங்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்த முடியும். மேற்கண்ட வசனங்கள் சத்தியம் எந்த சொல்லின் அடிப்படையான பொருளை தெளிவுபடுத்துகிறது. மனிதனோ மாறுபாடுள்ளவன். வாக்குமீறுகிறவன். இவர்களில் மேன்மக்கள் கூட பொய்யர். (சங்.62:9) எந்த மனுஷனும் பொய்யன். (ரோ.3:4) பிசாசு பொய்க்கு பிதா. சத்தியம் அவனிடத்தில் இல்லை. ஆதலால் அவன் சத்தியத்தில் நிலைத்திருக்கவில்லை. (யோ.8:44) முடிவாக சத்தியத்தை அறிகிற அறிவு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும்.(தீத்.1:3) சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற காக்குவ் பிலிப்பு, மார்ஷல் போன்ற மனுஷர்களுடைய எல்லாவித அவபக்திக்கும், அநியாயத்திற்கும் விரோதமாய் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டியிருக்கிறது.(ரோ.1:18)

52. **மேலும் இந்த மாய்மாலக்காரன் ஒரு தீர்க்கதரிசியின் தலைமுறையில் அவனே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறான் என்கிறான்.** (தீர்க்கதரிசி செய்தியாளன், பக்கம்.29, பத்தி.27) தேவனால் ஏற்படுத்தப்பட்ட, அழைக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசி நமக்கு இரட்சிப்பின் வழியை அறிவிக்கலாம்.(அப்.16:17) ஆனால் அவன் அந்த இரட்சிப்பின் வழியாக முடியாது. (அப்.18:26) இயேசு கிறிஸ்துவேயன்றி வேறுயாரும் வழியாக முடியாது. ஏனென்றால் அவர் நானே வழி என்று கூறிவிட்டார். ஆதலால் இன்னொருவன் வழியாக முடியாது. ஒரு தீர்க்கதரிசி செய்தியாளனாகவே இருப்பதால் அவன் வழியாக முடியாது. அவன் வழியை காட்டுகிறவனாக இருப்பானேயன்றி அவன் அந்த வழியாக முடியாது. மேலும் ஜீவனை கொடுப்பது யார்? சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்து மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவன். (ரோ.6:23) நித்திய ஜீவன் இயேசு கிறிஸ்து (1யோ1:2) நித்திய ஜீவனை அளிப்பவர் இவரே. (1யோ.2:25) நித்திய ஜீவனைப் பெற இயேசு கிறிஸ்துவின் இரக்கம் தேவை.(யூதா:21) இந்த கள்ளத்தீர்க்கதரிசியும், நம் மத்தியில் உள்ள இந்த கள்ள அப்போஸ்தலனும் பொதுவாக வேதவாக்கியங்களையும், ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்திகளையும் ஒருபுறம் ஏற்றுக்கொள்வது போல் நடித்து மறுபுறம் அதை கனம்ஈனம் படுத்தி மாய்மாலம் பண்ணுகிறார்கள்.

53. மேலும் தேவனை அறியாதவர்களுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களுக்கும் நேரிடப்போகும் நீதியுள்ள ஆக்கினையை எதிர்நோக்கி கொண்டிருக்கும் இந்த கள்ளத்தீர்க்கதரிசியும், கள்ள அப்போஸ்தலனுமாகிய மார்ஷலுடைய உபதேசத்தை கவனியுங்கள். பல பரிசுத்த ஆவிகள் (Holy Spirits) உண்டு. ஆனால் ஒன்று மட்டும் உண்மையான பரிசுத்த ஆவி (Holy Spirits) இந்த இருவரும் மதிகேடகர்கள் என்று நான் முன்பு எழுதியது முற்றிலும் சரியே. இதில் தவறு எதுவும் இல்லை. பல பரிசுத்த ஆவிகள் எப்படி இருக்க முடியும்? பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களை கவனியுங்கள். ஒரே

ஆவி (எபே.4:4) There is one Spirit. இந்த ஆவிக்குறித்து எபே.3:16-19 வசனங்களை தியானியுங்கள். இது தேவனுடைய ஆவி, பரிசுத்த ஆவி, புதிய ஆவி (எசே.11:19) என அழைக்கப்படுகிறது. தேவன் ஒரு ஆவி. (God is a Spirit) யோ.4:24 தேவனுடைய ஆவி எப்படி எண்ணிக்கையில் பலவாக இருக்கமுடியும்? தேவனுக்குள் பல ஆவியா? மேலும் இந்த ஒரே ஆவி நித்திய ஆவி என்று அழைக்கப்படுகின்றது. (எபி9:14) இந்த நித்திய ஆவியானது எங்கும் வியாபித்திருக்கும் ஆவி. (சங்.139:7-13) எல்லாம் அறியும் ஆவி (1கொரி.2:10) பலமுள்ள ஆவி(லூக்1:35, ரோ.15:13,18) தேவனுடைய ஆவி மகிமையுள்ள ஆவி (1பேது.4:14) மறுபிறப்பின் காரணர். (யோ.3:5,6) இந்த ஆவியினால் தான் வேதவாக்கியங்கள் எல்லாம் அருளப்பட்டிருக்கிறது. (1தீமோ.3:16) இந்த ஆவியினால் தான் ஒருவனுக்கு ஞானத்தை போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாசம், குணமாக்கும் வரம், அற்புதங்களை செய்யும் சக்தி, தீர்க்கதரிசனம் உரைத்தல், ஆவிகளை பகுத்தறிதல், பற்பல பாஷைகளை பேசுதல், வியாக்கியானம் பண்ணுதல் அருளப்படுகிறது. (1கொரி.12:8-11) மேலும் பிசாசுகளை துரத்தும் ஆவி (மத்.12:28). ஒருவனை ஊழியத்திற்கு அழைப்பதும் பரிசுத்த ஆவிதான்.(அப்.13:2, 20:28) ஆனால் காக்குவ் பிலிப்புவை அழைத்தது அவனுடைய மாயையான தரிசனம். மார்ஷலை அழைத்தது அந்த கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்புவின் ஆவி. இதிலிருந்து மார்ஷலையும், அவனது அழைப்பையும் நீங்கள் பகுத்தறிந்து கொள்ளலாம். இவன் தேவசித்தத்திற்கு புறம்பாக, காக்குவ் பிலிப்புவின் சித்தத்திற்கு உட்பட்டு, காக்குவ் பிலிப்புவிடமிருந்து ஒரு அப்போஸ்தல ஊழியம் பெற்று, இயேசு கிறிஸ்துவுக்கு கள்ள அப்போஸ்தலனாக அவருடைய சித்தத்திற்கு மாறாக ஊழியம் செய்து வருகிறான். ஆதலால்தான் இவன் வேறொரு சுவிசேஷத்தில் நிலைத்திருந்து அதை பிரசங்கிக்கிறான். மேலும் கவனியுங்கள் பரிசுத்த ஆவி ஒருவரே. அவர் ஒரு இடத்தில் வசனத்தை சொல்லுவதற்கு தடை விதிக்கிறார். (அப்.16:16) அதாவது உபதேசத்தின் பாதையில் தமது ஊழியக்காரர்களை எங்கு செல்லவேண்டும் எங்கு செல்லக்கூடாது என அவர்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து வழிநடத்துகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தமது தாசர்களுக்குள் வாசம் பண்ணுகிறார்.(யோ.14:17)

54. காக்குவ் பிலிப்புவுக்குள் பல ஆவிகள் பரிசுத்த ஆவியின் பெயரில். இது தான் வஞ்சிப்பு. இவனுக்குள் பல ஆவிகள். அது என்ன? அது தான் பிசாசு. இயேசு அவனை நோக்கி அசுத்த ஆவியே இந்த மனுஷனை விட்டு போ என்றார். பின்பு உன் பெயர் என்னவென்று கேட்டார். அவன் நாங்கள் அநேகர். ஆதலால் என் பெயர் லேகியோன் என்றான். இப்பொழுது புரிகிறதா காக்குவ் பிலிப்புவுக்குள் பரிசுத்த ஆவியின் பெயரில் அநேகரான அந்த லோகியோன்.

55. அடுத்து பரிசுத்த ஆவி பாவத்தை குறித்தும், நீதியை குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துகிறார். (யோ.16:8) இதைத்தான் அவருடைய உண்மையான, தெரிந்துக்கொள்ளப்பட்டு, அழைக்கப்பட்ட பணிவிடையாளர்கள் செய்துவருகிறார்கள். முடிவாக பல பரிசுத்த ஆவிகள் கிடையாது. மாறாக பல ஆவிகள் உண்டு. அது பரிசுத்த ஆவியின் தன்மையாகவும், அசுத்த ஆவியின் தன்மையாகவும் இருக்கிறது. அதுதான் உண்மை. பாருங்கள். 1. மனுஷனுயை ஆவி (1கொரி.2:11) 2. நொறுங்குண்ட ஆவி (சங்.51:17) 3. உற்சாகம் உள்ள ஆவி (மாற்.14:38) 4. ஆராய்ச்சி செய்யும் ஆவி (சங்.77:6) 5. கபடமில்லாத ஆவி (சங்.32:2) 6. சாந்தமும் அமைதலும் உள்ள ஆவி (1பேது.3:4) 7. களிகூரும் ஆவி (லூக்.1:47) 8. விசனமடையும் ஆவி. (யோபு.21:4) 9. கலக்கமுள்ள ஆவி (தானி.2:1) 10.தொய்ந்து போகும் ஆவி (சங்.77:3) 11.பொல்லாப்பு உண்டாக்கும் ஆவி (நியாயாதி.9:23) 12. எரிச்சலின் ஆவி (எண்.5:14) 13. தேவனுக்கு விரோதமான ஆவி (யோபு.15:13) 14. பயமுள்ள ஆவி (2தீமோ.1:7) 15.பலமுள்ள, அன்புள்ள, தெளிந்த புத்தியுள்ள ஆவி (2தீமோ.1:7) 16.அடிமைத் தனத்தின் ஆவி (ரோ.8:15) 17.நியாயத்தின் ஆவி (எசா.28:6) 18.காவலிலுள்ள ஆவிகள் (1பேது3:19,20) 19. பணிவிடை ஆவிகள் (எபி.1:14) 20. பொய்யின் ஆவி (1இராஜா.22:21-23) 21. வஞ்சிக்கிற ஆவி (1தீமோ.4:1) 22. அந்திக்கிறிஸ்துவின் ஆவி (1யோ.4:3) 23. வேசித்தன ஆவி (ஓசி.4:12) 24. கன நித்திரையின் ஆவி (ஏசா.29:10) 25.தாறுமாறுகளின் ஆவி (ஏசா.19:14) 26. பொல்லாத ஆவி (1சாமு.16:14,15) 27. அசுத்த ஆவி (மத்.8:16) 28. உணர்வுள்ள ஆவி (யோபு.20:3) 29. நிலைவரமான ஆவி (சங்.51:10) 30. பக்தியுள்ள ஆவி (யோ.4:23) 31. ஆறுதலடையும் ஆவி (ஆதி.45:27) 32. சோர்வுறும் ஆவி (சங்.77:3) 33. துர்ஆவி (நியாயாதி.9:23) 34. பதறும் ஆவி (யோபு.15:13) 35.பயப்படும் ஆவி (2தீமோ.1:7) 36. பலமும் அன்புமுள்ள ஆவி (2தீமோ.1:7) 37. எலியாவின் ஆவி (2இரா.2:15) 38. விசேஷித்த ஆவி (எண்.14:24) 39. ஒற்றுமையின் ஆவி (1கொரி.6:17) 40. தேவஆவி (1யோ.4:7) 41. சத்தியஆவி (1யோ.4:6) 42. பரிசுத்த தேவர்களின் ஆவி (தானி.4:8)

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? தேவனுடைய ஆவி பரிசுத்த ஆவி. அடுத்தது பிசாசுனுடைய ஆவி. இரு ஆவிகளும் அதன் அதன் தன்மைகளையுடையது. பரிசுத்த ஆவி அதன் தன்மையைக் கொண்டது, பிசாசின் ஆவி அதனுடைய தன்மையைக் கொண்டது. முடிவாக பல பரிசுத்த ஆவிகள் அல்ல. ஒன்றே ஒன்று தான் பரிசுத்த ஆவி. அது நித்திய ஆவி. நாம் அந்த நித்திய ஆவி அல்ல. மாறாக அந்த நித்திய ஆவியில் பங்கு பெறுகிறவர்களாக இருக்கிறோம். பரிசுத்த ஆவி நமக்கு அளவோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது முழுமையாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள். அதாவது பரிசுத்த ஆவி பரிபூரணமாக இயேசு கிறிஸ்துவுக்குள். அசுத்தஆவி அது பரிபூரணமாக சாத்தானுக்குள். காக்குவ் பிலிப்புவுக்குள்ளும், மார்ஷலுக்குள்ளும் அசுத்தஆவி அளவோடு.

56. **தேவனின் வாயாக ஒரு உயிர் வாழும் தீர்க்கதரிசி செய்தியாளனே தவிர, வேறு அனைவரும் பிசாசானவர்கள்.** (தீர்க்கதரிசி செய்தியாளன் காக்குவ் பிலிப்பு பக்கம்.35, பத்தி.28). சத்தியம் உயிர்வாழும் தீர்க்கதரிசியிடம் மாத்திரமே உள்ளது. இவ்வாறாக இந்த கபடமுள்ள வேலையாள் பிதற்றுகிறான். மேலும் இவனுடைய வார்த்தையை கவனியுங்கள். மோசே மகத்துவமானவர்தான். ஆனால் அவர் ஏற்கெனவே மரித்துப்போய்விட்டார். **எலியா மகத்தானவர்தான். ஆனால் அவர் ஏற்கெனவே மரித்துப் போய்விட்டார்.** முகமது மகத்துவமானவர்தான் ஆனால் அவர் ஏற்கெனவே மரித்துப் போய்விட்டார். வில்லியம் பிரன்காம் மகத்தானவர்தான். ஆனால் அது அங்கே ஜெபர்சன் வில்லில் கல்லறையில் உள்ளது. அவர் ஏற்கெனவே மரித்து போய்விட்டார். முதன்முதலாக கள்ள அப்போஸ்தலன் மார்ஷல் வாட்ஸ்அப்பில் இந்த பகுதியை எனக்கு அனுப்பியிருந்தான். அதை பார்த்த உடனே எனக்கு இவனது உபதேசத்தின் மேல் மிக்க கசப்பு ஏற்பட்டது. ஏனென்றால் முன்பு கூறியதை போல் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும். அது போல் இவர்கள் உபதேசத்தில் ஒரு சிறு பகுதியை வாசித்த உடனே என் மனம் இவர்களது உபதேசங்களை மீண்டும் தியானிக்க தூண்டவில்லை. ஆனால் கருத்தரங்கு என்று ஒன்று வந்ததால் மீண்டும் அவைகளை மேலோட்டமாக தியானிக்க ஆரம்பித்தேன். முதல்பக்கம் தொடங்கி கடைசி பக்கம் வரை இவர்களது உபதேசங்களில் முற்றிலுமாக ஒரு மனப்பாடே கிடைக்கவில்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

57. இப்பொழுது வேதவாக்கியங்களை அறியாத இந்த பேலியாயின் மகன் தன் மனம்போன போக்கில் தன் வாயின் தாறுமாறுகளை, தன் உதடுகளின் மாறுபாடுகளை கொண்டு தகாத தரிசனங்களை மனதார பின்பற்றி ஏதேதோ பிதற்றுகிறான், பிரசங்கிக்கிறான். இவனும் தன்னைத்தானே ஒரு தீர்க்கதரிசி என அழைத்துக்கொள்கிறான். இவனுக்கு அன்னக்காவடி மார்ஷல் எடுக்கிறான். இந்த மார்ஷல் பணத்திற்காக எதையும் செய்யும் நிலையில் தன்னை வளைந்து கொடுக்கக்கூடியவன். இந்த இரு மடையர்களும் உயிரோடு இருக்கும் தீர்க்கதரிசியை மரித்தோர்களின் கல்லறைகளில் காண்கிறார்கள். ஒருவேளை இவர்கள் இருவரும் பைத்தியகாரர்களாக இருக்கக்கூடுமோ என்று ஐயப்படவேண்டியதாயிருக்கின்றது. மோசே, எலியா, பிரன்காமை இவன் குறிப்பிடுகிறான். தேவனுடைய தீர்க்கதரிசிகள் மரித்தாலும் அவர்கள் ஆபேலை போன்று இன்னும் பேசுகிறார்கள். (எபி.11:5) என்பதை இந்த கண் சொருகிப்போன குருடர்களால் பார்க்ககூடாத படியாயிற்று. ஏனென்றால் இவர்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டுள்ளன. காக்குவ் பிலிப்பு : The Living follow a living Prophet. The Dead follows a dead Prophet என தன் மூடத்தனத்தினால் முழங்குகிறான். அதாவது உயிரோடு இருப்பவர்கள் தங்கள் சந்ததியில் ஒரு உயிரோடுயிருக்கும் தீர்க்கதரிசியைதான் பின்பற்ற வேண்டும். மரித்தோர்கள் அதாவது உயிரோடுயில்லாதவர்கள் மாத்திரமே மரித்த தீர்க்கதரிசிகளை பின்பற்றுவார்கள் என பிதற்றுகிறான். இது என்ன ஒரு ஆணவம்? இவன் உள்ளத்தில் பிசாசின் தன்மைகளே காணப்படுகின்றன. இவனுடைய ஆணவம் கெர்சிப்பு எல்லாம் மாம்சத்திற்குரியதே. ஏசாயா, ஏரேமியா, எசேக்கியேல், தானியேல், போன்றவர்கள் யாவரும் மரித்த தீர்க்கதரிசிகள் தான். ஆனால் அவர்களுடைய தீர்க்கதரிசனங்கள் இந்த மணிவேளை வரை நம்மோடு பேசிக்கொண்டிருக்கிறது. தானியேல் உயிரோடுயிருந்த தீர்க்கதரிசி, தன் காலத்தில் இல்லாத ஏரேமியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை நினைவு கூறுகிறான். பாருங்கள், தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்கடிப்புகள் நிறைவேறித்தீர எழுபது வருஷம் செல்லும் என்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையை புத்தகங்களினால் அறிந்துகொண்டேன் என்கிறான். (தானி.9:2) தேவனுடைய தாசனாகிய மோசேயின் நியாயபிரமாணபுத்தகத்தில் எழுதியிருக்கிறதை தானியேல் நினைவு படுத்துகிறான். (தானி.9:11) உயிரோடுயிருக்கிற தீர்க்கதரிசியோடு உயிரோடில்லாத தீர்க்கதரிசிகள் எழுதப்பட்ட வார்த்தைகளின் மூலம் பேசுகிறார்களே? இந்த பேலியாளின் மகன் உயிரோடுயிராத தீர்க்கதரிசிகளை உதாசினப்படுத்துவது என்ன? அப்போஸ்தலர் மரித்தவர்கள் தான். ஆனால் அவர்களுடைய நிருபங்கள் நம்மோடு பேசிக்கொண்டு,

நம்மை சத்தியத்தின் பாதையில் வழி நடத்துகிறது. அவர்களுடைய உபதேசங்களின் மேல்தான் நாம் கட்டப்பட்டு வருகிறோம். சகோ.பிரன்காமும் ஒரு மரித்த தீர்க்கதரிசிதான். ஆனால் ஆரவார செய்தி இன்னும் நம் மத்தியில் தொனித்துக்கொண்டு, சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை அது தொனிப்பதாகவே உள்ளது. ஏற்கெனவே இறந்த தீர்க்கதரிசிகளை பின்பற்றக்கூடாது, அது சாத்தானுடைய கொள்கை என பிதற்றும் இவன், பின் ஏன் சகோ.பிரன்காம் செய்திகளை எடுத்துக்காட்டுகிறான்? இவனுடைய பேச்சும் செயலும் ஒன்றுக்கொன்று முரணாகவேயிருக்கிறது. பேச்சில் சுத்தம் இல்லை. ஏனோதானோ என்று இவன் தன் மனம்போன போக்கில் பேசி வருகிறான்.

58. கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். கர்த்தர் அவனை மோவாப் தேசத்தில் உள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம் பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான். (உபா.34:5,6) அதேவேளையில் பிசாசு, பிராதன தூதனாகிய மிகாவேலிடம் மோசேனுடைய சரீரத்தைக்குறித்து தர்க்கித்தான். ஏனென்றால் அவனும் மோசேயின் பிரேதக்குழியை அறியான். ஆனால் இந்த மோசேயும், எலியா இயேசுவுடன் பேசுகிறவர்களாக காணப்பட்டனர். (மத்.17:3) மோசே உயிர்தெழுந்தான். எலியா உயிருடன் எடுத்துக்கொள்ளப்பட்டான். ஆக இருவரும் இன்று உயிருடன்தான் இருக்கிறார்கள். எலியாவும் இதுவரை மரணத்தை ருசிப்பார்க்கவேயில்லை. இதோ அக்கினி இரதமும், அக்கினி குதிரைகளும் அவர்கள் (எலியா மற்றும் எலிசா) நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். (2ராஜா.2:11) உயிரோடுயிருக்கிறவர்களை கண் சொருகிப்போன இந்த குருட்டு தீர்க்கதரிசி மரித்தோர்கள் மத்தியில் காண்கிறார். இவர்தன் கண்களுக்கு கலிங்கம் போட்டால் நலமாக இருக்கும். மேலும் எலியா மகத்தான மனுஷன். ஆனால் மரித்து தன் கல்லறையில் இருப்பதாக இந்த அறிவின் வாசனையில்லாத மடையன் உபதேசம் பண்ணுகிறான். எலியா உயிரோடு இருக்கும் போதே எடுத்துக்கொள்ளப்பட்டு இன்னும் சாவாமை உடையவனாக, மரணத்தை ஜெயமாக விழுங்கினவனாக தேவசமூகத்தில் / பரலோகத்தில் இருக்கிறான். ஏனோக்கும் மரித்ததாக வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் கிடையாது. இவன் இந்த பூமியில் தேவனோடு சஞ்சரித்து கொண்டிருந்தபோது, எடுத்துக்கொள்ளப்பட்டான். இவர்களை எல்லாம் இந்த சூனியத்திலும் சூனியம் மரித்தவர்களிடத்தில் காண்பது என்ன? ஆக காக்குவ் பிலிப்பும் மார்ஷலும் குருடர்களாக இருந்து, குருடர்களுக்கு வழிகாட்டி கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாவரும் குழியில் விழ தங்கள் எல்லைக்கோட்டை தாண்டிவிட்டார்கள் என்றே தோன்றுகிறது. அப்படியானால் இவர்களின் நிலை அந்தோ பரிதாபம்.

59. இங்கு நாம் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஒரு தீர்க்கதரிசியும் தேவனுடைய நாமத்தைக்கொண்டுள்ள கள்ளத்தீர்க்கதரிசியையும் காண்கிறோம். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். (1கொரி.2:15) ஆதலால் இந்த கள்ளத்தீர்க்கதரிசியையும், அவரது மூன்று வேலையாட்களையும் வேதவாக்கியங்களைக்கொண்டு, ஆராய்ந்து நிதானிக்க வேண்டும். இந்த தீர்க்கதரிசியின் கைப்பாவைகளை நாம் ஏற்கெனவே ஆராய்ந்தோம். இப்பொழுது இந்த தீர்க்கதரிசியின் அழைப்பு மற்றும் உபதேசங்களை ஆராய்ந்துப்பார்ப்போம். **மோசே** அழைக்கப்பட்டதிற்கு தேவனுக்கு ஒரு நோக்கம் இருந்தது. இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்த தேசத்திலிருந்து நீக்கி, கானானிரும், ஏத்தியரும், ஏமோரியரும், பெர்சியரும், ஏவியரும், எபுசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஒடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டு போய் சேர்ப்பதற்காக அந்த அழைப்பு இருந்தது. ஆதலால் மோசே இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி பார்வோனிடத்திற்கு அனுப்பப்பட்டான். (யாத்.3:7-10) **யோனாவுக்கு** ஒரு பணி இருந்தது. அவன் மகா நகரமாகிய நினிவேக்குப்போய், அதற்கு விரோதமாக பிரசங்கிக்க வேண்டியவனாயிருந்தான். ஏனென்றால் நினிவேயின் அக்கிரமம், தேவனுடைய சமூகத்தை வந்து எட்டியது. (யோனா.1:2) **ஆமோஸ்** மந்தையின் பின்னாலே போகிறபோது கர்த்தர் அவனை அழைத்து நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லு என்று உரைத்தார். (ஆமோஸ்.7:15) **யோவான் ஸ்நானன்** அழைப்பை பெற்றிருந்தான். இவன் இஸ்ரவேல் சந்ததியாரின் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திருப்புவதற்கு அழைக்கப்பட்டான். பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்திற்கும், கீழ்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும், திருப்பி உன்னதமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தம் பண்ணும்படியாக அவன் எலியாவின் ஆவியும், பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே (இயேசுகிறிஸ்து) நடந்தான். (லூக்.1:16,17) **சகோ பிரன்ஹாம்** பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்கள் இடத்திற்கு

திருப்ப மல்.4:6 ன் பின்பகுதியை நிறைவேற்ற, எலியாவின் ஆவியை உடையவராக வந்தார். ஏழாம் சபைக்கால தூதனாகவும் இருந்தார். நாம் வேதவாக்கியங்களைக்கொண்டு அவரை அடையாளம் கண்டுக்கொண்டோம். இங்கு நீங்கள் கவனிக்க வேண்டியது. எலியா அற்புதங்களை செய்தான். ஆனால் பிரசங்கிக்கவில்லை. எலியாவின் ஆவியைவுடைய யோவான் ஸ்நானன் பிரசங்கம் மட்டும் செய்தான். அற்புத அடையாளங்கள் எதுவும் செய்யவில்லை. எலியாவின் ஆவியைபெற்ற எலிசா அற்புதங்களை மட்டும் செய்தான், பிரசங்கிக்கவில்லை. ஆனால் சகோ பிரன்ஹாம் அற்புத அடையாளங்கள் மற்றும் பிரசங்கம் இரண்டையும் செய்தார்.

60. பொதுவாக தீர்க்கதரிசிகள் தேவனுக்காக தேவனுடைய அழைப்பைப் பெற்று, தேவனுடைய வார்த்தையை பெற்று, ராஜாக்களிடம் சென்று பேசினார்கள். மக்களிடம் சென்று பேசினார்கள், ராஜாக்களை கடிந்துக்கொண்டு மக்களுக்கு எச்சரிப்பின் சத்தத்தை கொடுத்தார்கள். அரசியல், சமூக ஒழுக்கக்கேடுகளை இடித்துரைத்தார்கள். மாய்மாலமான, மேலோட்டமான மார்க்கங்களை அனுசரிப்பவர்களை கண்டித்தனர். ஆதலால் இவர்கள் தேவனுடைய சார்பில் கூறிப்பிட்ட வேலைகளை செய்யும்படி ஏற்படுத்தப்பட்டனர். சொல்லப்போனால் இவர்கள் தேவனுக்காக செயல்பட்டனர், தேவனுக்காக பேசினர். நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலம் லவோதியக்கேயா சபையின் கடைசி மணிவேளை. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நேரத்தை எதிர்நோக்கி கொண்டிருக்கும் வேளை. கதிர் முதிர்வடைந்து அறுப்பை எதிர்நோக்கி கொண்டிருக்கிறது. சபை பக்திவிருத்திக்காக கர்த்தர் ஏற்கெனவே ஐந்துவகை ஊழியங்களை நமக்கு கொடுத்திருக்கிறார். இதில் இரண்டாவது ஸ்தானத்தில் தீர்க்கதரிசிகள் வருகிறார்கள். (எபே.4:13) இது தீர்க்கதரிசன வரங்களைக்கொண்ட தீர்க்கதரிசிகள். மற்றபடி பழைய ஏற்பாட்டில் காணப்படும் தீர்க்கதரிசிகளைப் போன்றவர்கள் அல்ல. அவர்கள் பொதுமக்களுக்காக இருந்தார்கள். இங்கு இவர்கள் சபை பக்திவிருத்திக்காக மாத்திரமே. இங்கு சகோ காக்குவ் பிலிப்பு தன்னை ஒரு பெரிய தீர்க்கதரிசியாக தன்னைத்தானே அறிமுகப்படுத்தி கொள்கிறார். அப்படிப்பட்ட ஒரு தீர்க்கதரிசி இந்த மணி நேரத்திற்கு தேவையா? வேதவாக்கியங்களில் இதுக்குறித்து முன்னறிவிக்கப்பட்டுள்ளதா? இந்நாட்களில் அநேகர் தங்களை தீர்க்கதரிசிகள் என்று கூறிக்கொள்கிறார்கள். மறைந்த சகோ D.G.S. தினகரனை தீர்க்கதரிசி என்றே வர்ணிக்கிறார்கள். ஆனால் அதற்குரிய தகுதி வேதவாக்கியங்களின் அடிப்படையில் அவரிடத்தில் இருந்ததா? இல்லையே! மும்பை, சகோ டேனியல் கிறிஸ்டியான் தன்னை அப்போஸ்தலன் என்று அழைக்கிறார். ஆனால் அதற்குரிய தகுதிகளை வேதவாக்கியங்களின் அடிப்படையில் அவரிடத்தில் காணப்படுகிறதா? இல்லையே! ஆக அநேகர் தங்களை தீர்க்கதரிசி, அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக்கொள்ளலாம். ஆனால் இது பிசாசின் வஞ்சகம். ஆனால் அவர்கள் அழைப்பு வேதவாக்கியங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். எந்த தீர்க்கதரிசி சகோ D.G.S. தினகரனைப்போன்று கோடிக்கோடியான சொத்து சுகங்களை ஊழியத்தின் பேரில் சம்பாதித்து அனுபவித்தார், தலைமுறை தலைமுறைக்கான வாரிசுகளுக்கு சேர்த்துவைத்தார் என்பதை வேதவாக்கியங்களில் காட்டமுடியுமா? பொதுவாக தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் தனித்தவர்களாகவும், துக்கம், பாடுநிறைந்தவர்களாகவும், அனுபவிக்கிறவர்களாகவும், வேதவாக்கியங்களில் காணப்படுகின்றனர்.

61. எரே.28அதி, 1இராஜா.22அதிக்கு ஒப்பாக தேவனுடைய நியாயத்தீர்ப்பை காணவும், தேவனுடைய நியாயத்தீர்ப்பை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவும் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது என தன்னை ஒரு நியாயாதிபதியாக இந்த மூடன் பறைசாற்றுகிறான்.(தீர்க்கதரிசி செய்தியாளன் காக்குவ் பிலிப்பு பக்கம்.17, பத்தி.36) நியாயத்தீர்ப்பை அறிவிக்கும் வாய், காணும் கண்கள், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் யாவும் ஒரு தீர்க்கதரிசிக்கு கொடுக்கபட்டிருப்பதாக வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் இல்லை. இவன் வேதவாக்கியங்களை ஒரு பொருட்டாக எண்ணுவதேயில்லை. வேதவாக்கியங்களுக்கு மேலாக தன்னை உயர்த்துகிறான். உயிரோடு இருக்கிறவர்களையும், மரித்தோர்களையும் நியாயந்தீர்க்க போகிறவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என 2தீமோ.4:1ல் கூறப்பட்டுள்ளது. பொதுவாக காக்குவ் பிலிப்பு போடும் எலும்பு துண்டுகளுக்காக வாலாட்டிக்கொண்டு அவனை பின் தொடரும் மார்ஷல் பரிசுத்த வேதாகமத்தை முற்றிலுமாக விசுவாசிப்பதில்லை. மாடு புல் தரையில் அங்கும் இங்குமாக சென்று மேய்வது போன்று இவர்கள் பரிசுத்த வேதாகமத்திலும், சபைக்கால செய்தியிலும் தங்களுக்கு சாதகமானவைகளை பொறுக்கி கொள்வார்கள். தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறி கெட்டுபோகப்பண்ணும் செத்த ஈக்களாக இவர்கள் இருவரும் இருப்பதை என் உள்ளத்தில் உணர்ந்தேன். இவர்களால் தான் தேவனுடைய நாமம் / வார்த்தை அநுதினமும் தூஷிக்கப்பட்டு வருகிறது. ஆனால் வெட்கம் ஒரு நாள் இவர்களுக்கே உரியதாகயிருக்கும்.

62. மேலும் இந்த மனமேட்டிமைக்காரன் நான் நியாயத்தீர்ப்பு செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறேன் என்கிறான். (நியாயத்தீர்ப்பை திட்டவட்டமாக அறிவித்தல் பத்தி.32) இது இவனுடைய மனோராஜ்யத்தின் கற்பனை. ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் இல்லை என தேவனுடைய வார்த்தை கூறும்போது இவன் ஜனங்களை நியாயந்தீர்ப்பதை தன் கரத்தில் எடுப்பது என்ன? தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினை செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதர்களோடும், ஜூவாலித்து எறிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படுவார். (1தெச.1:7,8) கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி (ஏசா.33:22) தேவனே நியாயாதிபதி (சங்.50:6) நியாயத்தீர்ப்பு கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் (வெளி.18:8) பட்சபாதமில்லாமல் அவன் அவனுடைய கிரியைகளின்படி நியாயம் தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாக தொழுது கொண்டுவருகிறீர்கள். (1பேது.1:17) நியாயத்தீர்ப்பு கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமை உள்ளவர். (வெளி.18:8) நியாயத்தீர்ப்பு தேவனுடையது. (உபா.1:17) அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். அவர் பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை சத்தியத்தோடும் நியாயம் தீர்ப்பார் என சங்.96:13ல் தியானிக்கிறோம். அப்படியானால் அவர் வருகிறார் என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது யார்? இந்த மூடன் காக்குவ் பிலிப்புவா? காக்குவ் பிலிப்பு தொண்டர்களே சற்று சிந்தித்து செயல்படுங்கள். நிச்சயமாக இவன் காலையில் காணும் மேகத்தைப் போலவும், விடியற்காலையிலே ஒழிந்து போகிற பனியைப் போலவும், பெருங்காற்று கலத்திலிருந்து பறக்கடிக்கிற பதரைபோலவும், புகை கூண்டில் ஏறிப்போகிற புகையை போலவும் இருக்கிறான் என்பதை மறந்து விடாதீர்கள்.தேவவாக்கியங்களுக்கடுத்த வாதம்.

63. இதோடுமட்டுமல்ல, இந்த கொடிய வஞ்சகன் உங்கள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதை தான் காண்பதாக பிதற்றுகிறான். (தேவனிடமிருந்து வந்த ஒரு தீர்க்கதரிசி. பத்தி.42). கவனியுங்கள், இது குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது? மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்க கண்டேன். அப்பொழுது புத்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுத்தகம் என்னும் வெறோரு புத்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்த புத்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்கு தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். (வெளி.20:12) மேற்கூறிய இரு புத்தகங்களும் நியாயத்தீர்ப்பு நாள் வரை அதாவது வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு நாள் வரை மூடப்பட்ட நிலையில் தான் இந்தமணிவேளை வரை இருந்து வருகிறது. அது நியாயத்தீர்ப்பு நாளன்று தான் திறக்கப்படும். அதற்கு முன் திறக்கப்படாது. திறக்கப்படும்போது அதில் எழுதியிருக்கிற பிரகாரம் ஒவ்வொருவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இந்த கள்ளத்தீர்க்கதரிசி, போலியாளின் மகன் பந்தா பண்ணிக்கொண்டு, நியாயத்தீர்ப்பு புத்தகங்களில் எழுதியிருப்பதை தான் கண்டதாக பிதற்றுகிறான். இவனுடைய போலி பந்தாவில் தான் மார்ஷலுக்கு பிழைப்பு ஓடிக்கொண்டிருக்கிறது. அதுதான் உண்மை. மானங்கெட்ட பிழைப்பு. இவனுக்கெல்லாம் அப்போஸ்தல பதவி தேவையா? அப்போஸ்தலன் என்று வாகை சூடி கொண்டுள்ளான். நீ யாருக்கு அப்போஸ்தலன்? என் தேவனுக்கு இல்லை. மாறாக நீ ஒரு கள்ளத்தீர்க்கதரிசிக்கு, ஒரு பொய்யனுக்கு அப்போஸ்தலனாக இருந்துக்கொண்டு உன் பிழைப்பை ஓட்டுகிறாய். நீ மனந்திரும்பினால் உன் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்.

64. நியாயத்தீர்ப்புக்கடுத்த காரியங்கள் இப்படியிருக்க, இந்த புரட்டன் நியாயத்தீர்ப்புக்கடுத்த காரியங்களை புரட்டுகிறான். காக்குவ் பிலிப்புவே நீயும் உன் அப்போஸ்தலனும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பித்துக்கொள்ள முடியாது. நீங்கள் இருவரும் உங்கள் மனக்கடினத்திற்கும், குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிளே உங்களுக்காக கோபாக்கினையை குவித்து கொள்ளுகிறீர்களே! தேவ தயவு நீங்கள் குணப்படும்படி உங்களுக்காக திறப்பின் வாசல் இந்தமணிவரை திறந்துள்ளது.

65. **அபத்தமும் வியர்த்ததுமான தீர்க்கதரிசனங்களை தரிசித்த இந்த கள்ளத்தீர்க்கதரிசி கூறுகிறதாவது:** ஏப்ரல் 24, 1993-ல் தரிசனத்தில் திருச்சபையின் ஏழுகாலங்களின் கூர்நுனிக்கோபுரத்திற்கு மேலே எலியாவை போன்று நான் நின்றுகொண்டிருந்ததை நீங்கள் காணலாம் என்றான். (தீர்க்கதரிசி செய்தியாளன் காக்குவ் பிலிப்பு பக்கம்.31, பத்தி.45) முதலாவது கூர்நுனிக்கோபுரம் என்ற சொல் (Pyramid) வேதவாக்கியங்களில் இல்லை என்பது எனது அறிவு. ஏழு சபைக்காலங்கள், ஏழு சபைக்காலங்களின் தூதர்கள், ஏழு சபைகாலங்களின் செய்திகள், கர்த்தராகிய

இயேசு கிறிஸ்துவின் ஏழு தெய்வீகசுபாவங்கள் / ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி இவைகள் யாவையும் ஒன்றாக இணைத்து, ஒன்றோடு ஒன்று சம்பந்தப்படுத்தி, இதை ஒர் கூர்நுனிக்கோபுரமாக சகோ.பிரன்காம் வரைந்து காட்டுகிறார். இந்த கூர்நுனிக்கோபுரத்தின் மேல்பகுதி அன்பு. இது தான் தலைக்கல். தலைக்கல் யார்? அது கிறிஸ்து. தலைக்கல்லாகிய கிறிஸ்துவின் மேல் தன் இருதயத்தின் இச்சையிலே நடக்கும் தன் கள்ள வார்த்தைகளாலே எளியவர்களை கெடுக்கும்படி தீவினைகளை யோசித்து, போதித்து செயல்படும் இந்த கபடமுள்ள வேலையாள் நிற்பதா? தேவனுடைய ஸ்தானத்திற்கு / ஸ்தானத்திற்கு மேல் தன்னை உயர்த்துபவன் யார்? அவன் உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசுதானே! இவனுடைய இருதயம் மேட்டிமையாகி, இவனுடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்டு போயிற்று. சத்தியத்தை விட்டு விலகுகிற மாறுபாட்டை பற்றிக்கொண்டான். இவன் தன்னுடன் எலியாவையும் இழுத்துக்கொள்வது எவ்வளவு ஒரு பெரியதான வஞ்சிப்பு. தனக்கு சாதகமாக ஏதோ ஒன்றைக்கூறி அதற்காக மக்கள் மனதை திசை திருப்புவதே இவனது ஊழியமாக காணப்படுகிறது. பிசாசுவுக்கு காக்குவ் பிலிப்பு கூட்டாளி. மார்ஷல் காக்குவ் பிலிப்புவுக்கு கூட்டாளி. இருவருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான்.

66. எபே.4:14-ன் ஊழியம் செயல்படாவிட்டாலும் தேவனுடைய திட்டம் நிறைவேறும் (நியாயத்தீர்ப்பை திட்டவட்டமாக அறிவித்தல், பத்தி.10 மற்றும் 14) ஒரு மேய்ப்பனாலோ அல்லது நான்குவகை ஊழியங்களாலோ சபையை ஒன்று சேர்த்து பூரணப்படுத்த முடியாது என கர்த்தர் ஏற்படுத்திய ஐந்துவகை ஊழியங்களுக்கு எதிராக இவன் ஆணவத்துடன் பேசுகிறான். கர்த்தர் தமது சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடையவும், அதை பரிபூரணப்படுத்தவும் தானே எபே.4:11-13ல் ஊழியங்களை ஏற்படுத்தியுள்ளார். இப்படியிருக்க அதற்கு எதிராக பேசி பிசாசு தன் பணியை செய்கிறதோ? தேவனுடைய திட்டத்தில் தன் கருத்துக்களை, எண்ணங்களை, சிந்தனைகளை புகுத்த முயற்சிப்பது மனித அறிவுத்திறமை. அது பிசாசு. இயேசு கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் அதாவது சபையானது ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி அடையும் வரைக்கும், பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது, பக்திவிருத்தி அடைவதற்காகவும் கர்த்தர் ஐந்து வகை ஊழியங்களை ஏற்படுத்தியுள்ளார். சபை பக்திவிருத்தி அடைய ஐந்து வகை ஊழியங்கள் அத்தியாவசியம் என்பதை கர்த்தர் அறிந்தே ஏற்படுத்தியுள்ளார். அது செயல்படாவிட்டாலும் பரவாயில்லை என்ற நோக்கத்தோடு அது அவர் ஏற்படுத்தியதாக கூறமுடியாது. சபை பக்திவிருத்தி அடைய இந்த ஐந்துவகை ஊழியங்களும் அத்தியாவசியமானது. அப்படியானால் இந்த ஊழியங்கள் இல்லாமல் சபை பக்திவிருத்தி அடையமுடியாது. நம்முடைய சரீர வளர்ச்சிக்கு சில அத்தியாவசியமான தேவைகள் உண்டு. அது இல்லாமல் சரீரம் வளர்ச்சி அடைய முடியாது. அதேபோன்றுதான் இங்கும். சபையின் பக்திவிருத்திக்கு ஐந்து வகை ஊழியங்கள் தேவை. நம் மத்தியில் பல பாஸ்டர்கள் இந்த ஊழியங்களை தங்கள் சபைகளில் அனுமதிப்பது இல்லை. தானே ஐந்து வகை ஊழியங்களில் எல்லாவற்றிலும் எல்லாம் என்ற கோட்பாட்டில் உள்ளனர். மற்றபடி வெளிநாடுகளிலிருந்து வரும் ஊழியர்களுக்கு மட்டும் அனுமதி உண்டு. இதில் பாஸ்டர் ஐசக் வசந்தகுமார், வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் போன்றவர்கள் கைதேர்ந்தவர்கள். இவர்களுடைய பாணியில் தான் இந்த காக்குவ் பிலிப்பு. இவனும் தானே எல்லாவற்றிற்கும் எல்லாம் என்கிறான். ஒன்றை ஏற்படுத்தி பின் அதை டம்மி செய்து கர்த்தர் தமது திட்டத்தை ஒருகாலும் நிறைவேற்ற மாட்டார். அவர் ஒன்றை நியமித்தால் அதை நியமித்ததுதான். அதில் மாற்றம் இருக்காது. ஏனென்றால் அவர் எல்லாவற்றையும் அறிந்து செயல்படுகிறவர். அவர் தம்முடைய திட்டத்தை மாற்றினால் ஊழியங்களை அவர் ஏற்படுத்தியதில் எந்தவிதமான நல்நோக்கமும், பிரயோஜனமும் இல்லாமல் போய்விடும். ஆதலால் இந்த காக்குவ் பிலிப்பு உபதேசத்தை புறம்பே தள்ளுங்கள். இவனுடைய உபதேசம் மார்ஷலுக்கு மாட்டும் தான் பிரயோஜனம். ஏனென்றால் இந்த உபதேசத்தில் தானே இவனுடைய பிழைப்பு நடந்துக்கொண்டிருக்கிறது.

67. **காக்குவ் பிலிப்பு செய்தியினாலன்றி நீங்கள் இரட்சிப்பு அடைய முடியாது.** (நியாயத்தீர்ப்பை திட்டவட்டமாக அறிவித்தல் பத்தி.11) என்ன ஒரு ஆணவம்? இவனுடைய செய்தி இவனை சார்ந்தவர்களை அழுகையும், பற்கடிப்பும் உள்ள பாதளத்திற்கு கொண்டு செல்கின்றதாக உள்ளது. முதலாவது இரட்சிப்பு கர்த்தருடையது Salvation belongeth to the Lord (சங்.3:8) நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவன். (சங்.38:20) He who is our Lord, is the God of Salvation அடுத்து மனுஷருக்கு இரட்சிப்பை அளிப்பது தேவ கிருபை. (தீத்.2:11) Grace of

God that bringeth Salvation பாருங்கள் நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம் (எபே.2:5) இரட்சிப்பு தேவனுடைய சுத்தகிருபை. இதன்மேல் யாருக்கும் உரிமை கிடையாது. இது யாருடைய விருப்பு வெறுப்பு அல்ல. தேவனுடைய தீர்மானத்தின்படி பெரும் கிருபை. நித்திய இரட்சிப்பை அடைய காரணர் கர்த்தர்.(எபி.5:9) Author of Eternal Salvation கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். (அப்.16:31) கிறிஸ்து ஒருவரே இரட்சிப்பை அருளுகிறவர். (எபி.9:28) கர்த்தராகிய யெகோவா என் பெலனும் என் கீதமுமானவர். அவரே எனக்கு இரட்சிப்புமானவர். (ஏசா.12:2) Behold, God is my Salvation….. He also is become my Salvation இரட்சிப்புக்கடுத்த காரியங்கள் இப்படியிருக்க ஒரு மனிதனுக்கு இரட்சிப்பை அருள இந்த கள்ளத்தீர்க்கதரிசி யார்? இவனால் இவனை சார்ந்தவர்களை பாதாளத்தில் தான் தள்ள முடியும். ஏனென்றால் பிசாசு இந்த கள்ளத்தீர்க்கதரிசியில் இருந்து கிரியை செய்கிறான். கள்ளத்தீர்க்கதரிசி இந்த மார்ஷலை ஆட்கொண்டு கிரியை செய்கிறான்.

68. **மோசேக்கு பின் யோசுவா. எலியாவுக்கு பின் எலிசா. அதுபோல் பிரன்காமிற்கு பிறகு காக்குவ் பிலிப்பு என்கிறான்.** வில்லியம் பிரன்காமின் அழைப்பு – ஏழாம் சபைக்கால தூதன் – தீர்க்கதரிசி. இவருக்கு பின் மற்றொரு தீர்க்கதரிசி வருவாரா என்ற கேள்விக்கு அவர் பதில் கொடுக்கும்போது; நான் தேசத்தை விட்டு வெளியேறுகிறேன். நான் சென்ற பிறகு மற்றொருவன் இந்த ஊழியத்தில் இல்லை. இது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்கிறார். I am leaving the Country and there'll never be another in the field when I'm gone. Thus saith the Lord. There has not been and will not be. (The Uncertain Sound, Bloomington II 61-041. SE123 Para.97) இது சகோ.பிரன்காமை கொண்டு **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாக உள்ளது. இப்படியிருக்க இவன் பிரன்காமின் பெயரைச்செல்லி அவருக்கு பின் தனக்கொரு ஊழியத்தை ஏற்படுத்திக்கொண்டான். மோசேக்கு பின் யோசுவாவுக்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் உண்டு. எலியாவுக்கு பின் எலிசாவுக்கு அவ்வாறாகவே ஆதாரங்கள் உண்டு. ஆனால் சகோ.பிரன்காமிற்கு பிறகு வேறொருவர் எழும்ப வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் இல்லை. ஏனென்றால் ஏழாம் சபைக்காலத்தோடு, அதன் தீர்க்கதரிசி, அதன் செய்தி யாவும் முடிவுக்கு வருகின்றன.

69. மாமிசப்பிரகாரமான இந்த போலியின் மற்றதொரு வேதாகம புரட்டை கவனியுங்கள். சத்தியத்துக்கு போலியாயுள்ளதை நாம் இக்காலத்தில் எதிர்பார்க்க வேண்டுமா? ஆம் நிச்சயமாக. இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்க மோசே கையில் ஒரு கோலை மாத்திரம் அடையாளமாக ஏந்திக்கொண்டு எகிப்துக்கு சென்றான். பரலோகத்தின் தேவன் அவனுக்கு துணையாயிருந்தார். அவன் ஒரு அற்புதத்தை செய்தான். அதன் பின்னர் போலிகளும் எழும்பி அவன் செய்த அதே அற்புதத்தை செய்தனர். மோசேதான் முதன்முதலாக அந்த அற்புதத்தை செய்தான். பின்பு போலிகள் எழும்பி அதே அற்புதங்களை செய்தனர். அதுபோன்று ஜனங்களை குழப்பத்தில் ஆழ்த்துவதற்கென்றே அநேக போலியான செயல்கள் தோன்றும் நேரம் இது. அதுபோன்று தான் சகோ.பிரன்காமிற்கு பின்பு தான் என்று சொல்லி எழும்பி இருக்கும் இந்த காக்குவ் பிலிப்பு. மேலும் வேதவாக்கியமானது கீழ்கண்டவாறு கூறுகிறது: என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன்குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது. இந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம். (வெளி.1:20) இங்கு ஏழு நட்சத்திரங்கள் அடையாளங்களாக காணப்பட்டு அது ஏழுசபை தூதர்கள் எனக்கூறப்பட்டது. அதன்பின் ஏழுசபை தூதர்களுக்கும் செய்தியானது தனித்தனியாக எழுதப்பட்டுள்ளது. (வெளி.2:1,8,12,18. 3:1,7,14) இப்பொழுது இதற்கு இந்த புரட்டனுடைய வியாக்கியானத்தை கவனியுங்கள். ஒவ்வொரு சபைக்காலத்திலும், அந்த காலத்தில் உள்ள வஞ்சகஆவியோடு போராட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது கரத்திலுள்ள நட்சத்திரங்களை பூமிக்கு அனுப்புகிறாராம். அந்த நட்சத்திரம் அந்த வஞ்சகஆவியுடன் போராடுவதற்கென, அது பயன்படுத்துவதற்காக ஒரு மனுஷனை எடுத்துக்கொள்ளுமாம். அந்த மனுஷன் அநேக ஜனங்களை தெரிந்துக்கொண்டு அவர்களை தனது பணிக்கு உபயோகிப்பானாம். எடுத்துக்காட்டுக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவரது வலதுகரத்திலிருந்த இரண்டாவது நட்சத்திரத்தை பூமிக்கு அனுப்பினாராம். அந்த நட்சத்திரம் இரேனியஸை பூமியின்மீது அனுப்பியதாம். அதுபோன்று மூன்றாவது நட்சத்திரத்தை பூமிக்கு அனுப்பினாராம். அந்த நட்சத்திரம் மார்டினை பூமியின்மீது அனுப்பியதாம். அதுபோன்று இதர அனைத்து நட்சத்திரங்களும். மேலும் இந்த நட்சத்திரம் பல செய்தியாளர்களை பூமியில் எழும்ப பண்ணுமாம். அந்த செய்தியாளர்களில் தன்னை தீர்க்கதரிசி செய்தியாளன் என்றுக்கூறி தனக்கு ஒரு பதவியை தேடிக்கொண்டான். அதாவது கர்த்தர் தமது வலது கரத்தில் கொண்டிருந்த ஏழாவது நட்சத்திரம் வில்லியம் பிரன்காமை பூமிக்கு அனுப்பியது. மேலும் பல செய்தியாளர்களை எழும்பபண்ணியது. அதில் பிரத்தியேகமான

*தீர்க்கதரிசி* செய்தியாளன் என தனக்கொரு பதவியை தேடிக்கொண்டான் இந்த பிசாசு. இவனது கற்பனை எப்படிபட்டது என்பதை சிந்தித்தீர்களா? ஆனால் சத்தியத்தின்படி நாம் அறிந்துக்கொண்டது என்ன? ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைதூதர்களுக்கு அடையாளம். நட்சத்திரங்கள் தூதர்களை பூமிக்கு அனுப்புவர்கள் அல்ல. ஆதலால் இந்த மடையனுடைய வெளிப்பாடுகளிலிருந்து உங்களை காத்துக்கொள்ளுங்கள். இவன் தனக்கு சாதகமாக வேதவாக்கியங்களை பயன்படுத்தி மக்களை வஞ்சிக்கிறான். தனக்காக மார்ஷலைப் போன்ற கள்ள அப்போஸ்தலர்களை நியமித்துக்கொண்டான்.

70. **வில்லியம் பிரன்காமின் செய்திகளை அதன் அனைத்து தூய்மையிலும் பிரசங்கிப்பது முட்டாள்தனம். அது தவளையின் ஆவி** (*தீர்க்கதரிசி செய்தியாளன் காக்குவ் பிலிப்பு பக்கம்.25, பத்தி.20*) ஆனால் இந்த மாய்மாலக்காரனே சகோ.பிரன்காம் பிரசங்கித்த **ஏழு சபைகளின் கால வியாக்கியானம், ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** இன்னும் அநேக செய்திகளிலிருந்து அநேக குறிப்புகள் எடுத்து பிரசங்கிக்கிறான். ஒரு பக்கம் பிரன்காமின் செய்திகளை பிரசங்கிப்பது முட்டாள்தனம். மறுபக்கம் இவன் அவரது செய்திகளிலிருந்து அநேக குறிப்புக்கள் எடுத்து பிரசங்கிக்கிறான். இதிலிருந்து இவன் ஒரு பெரிய மாய்மாலக்காரன் என்று புரிகிறதா? இவன் மாய்மாலகாரன் என்றால் இவனது அப்போஸ்தலன் மார்ஷலும் ஒரு மாய்மாலக்காரன் தானே.

71. **இந்த முரண்பாட்டின் வித்து காக்குவ் பிலிப்புவே தான் எல்லாவற்றிலும் எல்லாவுமாயிருக்கிறேன் (all in all) எனக்கூறுகிறான்.** இவனுடைய உபதேசமாவது : இனி நமக்கு பரிசுத்த வேதாகமம் தேவையில்லை. கடந்தகால எந்தவொரு செய்தியாளனுடைய செய்தியும் தேவையில்லை. இந்த தலைமுறைக்கு காக்குவ் பிலிப்புவே எல்லாவற்றிலும் எல்லாம் என்கிறான். ஏனென்றால் இவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்துகிறானாம். ஆதலால் இனி இவனே வழியும், சத்தியமும், ஜீவனுமாம் Kacou Philippe is the manifestation of Jesus Christ. He is the Way Truth and Life. Now a days No Bible. No Message. Kacou Philippe is all in all for this Generation. பாருங்கள் வேதவாக்கியங்களில் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2தீமோ.3:16) அது இப்பொழுது புத்தக வடிவில் நம் அனைவருடைய கரத்திலும் உள்ளது. இதை நாம் பரிசுத்த வேதாகமம் / சத்திய வேதம் என அழைக்கிறோம். தேவனுடைய வார்த்தை ஒருக்காலும் ஒழியாது. இத்துடன் ஒன்றை நாம் கூட்டவும் குறைக்கவும் முடியாது. வானமும் பூமியும் கூட ஒழிந்துபோம். ஆனால் தேவனுடைய வார்த்தை ஒழிந்துபோகாது. (லூக்.21:33, நீதி.30:6) பரிசுத்த வேதாகமத்திற்கடுத்த காரியங்கள் இப்படியிருக்க, செம்மையான வழியைவிட்டு விலகிய இந்த கள்ளத்தீர்க்கதரிசி No Bible, No Message என கூறுகிறது என்ன? ஏழாம் சபைக்கு கர்த்தர் தம்முடைய தூதனைக்கொண்டு கொடுத்த செய்தியை காதுள்ளவர்கள் கேட்கக்கடவர்கள் என்று கூறுகிறது. இந்த செய்தி – ஆரவாரம் – சபை எடுத்துக்கொள்ளபடும்வரை கடந்து செல்ல வேண்டியதாகயிருகிறது. இப்படியிருக்க செய்தி தேவையில்லை என எப்படி இந்த மடையன் கூறுகிறான்? மேலும் அன்று பிசாசு இயேசுவிடம் உலகத்தின் ராஜ்ஜியங்கள் மேல் உள்ள அதிகாரங்காரமும், மகிமையும் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்றான். அதுபோன்று தான் இந்த பிசாசின் வாரிசும் இந்த தலைமுறைக்கு நானே எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருக்கிறேன், அதிகாரம் மகிமை சகலமும் தனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது என வீண் பெருமை பாராட்டுகிறான். ஆனால் வேதவாக்கியமானது குமாரனுக்குள் (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) எல்லாம் நிலைநிற்கிறது என்று கூறுகிறது. அவரே எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருக்கிறார். மேலும் இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டார். அவரிடத்தில் பாவம் இல்லை. (1யோ.3:5) ஆனால் கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் அகப்பட்டுள்ள இந்த மாயவித்தைக்காரனிடத்தில் கிறிஸ்து ஏன் தன்மை வெளிப்படுத்த வேண்டும்? ஆக காக்குவ் பிலிப்பு தேவனுடைய ஸ்தானத்தை எடுக்கிறான். ஆதியில் லூசிபரும் இதைதான் செய்தான். அவன் தன் முயற்சியில் தோன்றான். அவனுக்கு ஏற்பட்ட நிலைதான் இந்த காக்குவ் பிலிப்புவுக்கும் ஏற்பட போகிறது. அந்தநாள் மிக சமிபமே.

72. போப் அமரும் சிம்மாசனத்தின் மேல் வீகாரியஸ் ஃபிலி டியை (Vicarius Felii Dei) என்று எழுதப்பட்டுள்ளது. தேவகுமாரனுக்கு பதிலாக, பூமியில் அவருக்கு பதிலாக அமர்ந்திருக்கிறார் என அர்த்தம். ஆனால் இந்த பைத்தியக்காரனோ நானே All in All, நான் நியாயத்தீர்ப்பு செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறேன், நானே என் தலைமுறையில் வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், திருச்சபையின் ஏழுக்காலங்களின் கூர்நுனிக்கோபுரத்தின் (Pyramid) மேல் நான் நின்றுகொண்டிருந்தேன், மத்.25:6ல் வாக்குதத்தம் பண்ணப்பட்ட பிரசங்கி நான், தேவனின் வாயான உயிர்வாழும் தீர்க்கதரிசி செய்தியாளனாகிய தன்னைத்தவிர வேறு

அனைவரும் பிசாசானவர்கள். நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சார்பாக பேசுகிறேன். தன்னுடைய செய்திக்கு வெளியே இரட்சிப்பு இல்லை, இவ்வாறாக தானே இயேசு கிறிஸ்துவுக்கு பதிலாக வழி சத்தியம் ஜீவனுக்குரியவன் என்று பிதற்றுகிறான். ஆதலால் பிரியமானவர்களே இவனும் இவனை சார்ந்த கூட்டத்தாரும் வெட்கப்படும் படிக்கு இவர்களுடனே கலவாதிருங்கள்.

73. **இந்த காக்குவ் பிலிப்பு மத்.25:6 க்கு வாக்குதத்தம் பண்ணப்பட்ட பிரசங்கியாம்.** (தீர்க்கதரிசி செய்தியாளன் காக்குவ் பிலிப்பு பக்கம்.32, பத்தி.5) இதுகுறித்து சற்று சுருக்கமாக கவனியுங்கள். ஏனென்றால் இதுகுறித்து ஏற்கெனவே ஜீலை 2016 **இயேசுவே வாரும்** இதழில் எழுதியுள்ளேன். நடுராத்திரியிலே இதோ மணவாளன் வருகிறார். அவருக்கு எதிர்கொண்டுபோக புறப்படுங்கள் என்ற சத்தம் உண்டாயிற்று. இது கடைசி சபையின் காலம். புத்தியுள்ள கன்னிகைகள் இதோ மணவாளன் வருகிறார் என்ற சத்தம் எழுந்தவுடன் சபையின் காலங்கள் தோறும் நித்திரை அடைந்திருந்த ஒவ்வொருவரும் உயிரோடே எழும்புகின்றனர். ஒவ்வொரு சபை காலத்திலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எடுக்கப்படுவர். தெரிந்துகொள்ளப்பட்ட கடைசி நபர் கடைசி சபைக்காலத்தில் உட்பிரவேசிக்கும் வரை கிறிஸ்து மத்தியஸ்த ஸ்தானத்தை வகிக்க வேண்டும். இங்கே ஒரு நித்திரை செய்யும் புத்தியில்லாத கன்னிகை இருக்கிறாள். இங்கே தன் விளக்கில் எண்ணெய் உடையவளாக ஒரு புத்தியுள்ள கன்னிகையும் இருக்கிறாள். இப்பொழுது திடீரென ஒரு சத்தம் உண்டாயிற்று. இதோ மணவாளன் வருகிறார். அவரை சந்திக்க எதிர்கொண்டு போங்கள். சத்தத்தை கேட்ட அவர்கள் விழித்தெழுந்தனர். இருசாரரும் விழித்தெழுந்த போது புத்தியுள்ள கன்னிகைகள் உள்ளே பிரவேசிக்க முடிந்தது. ஏனென்றால் இவர்கள் தங்கள் விளக்குகளில் எண்ணெய் உடையவர்களாக இருந்தார்கள். இன்னொரு பிரிவினராகிய புத்தியில்லாத கன்னிகைகள் உள்ளே பிரவேசிக்க முடியவில்லை. ஏனென்றால் அவர்களது விளக்கில் எண்ணெய் இருக்கவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளும்படி வேண்டுதல் செய்ய திரும்பி போனார்கள். அவர்கள் அதற்காக போயிருக்கையில் யாவும் முடிவு பெற்றது. பாருங்கள் புத்தியுள்ள கன்னிகைகள் பரிசுத்த ஆவியை பெற்றியிருந்து மணவாளன் வந்தவுடன் அவரோடு பிரவேசித்தார்கள். புத்தியில்லாத கன்னிகைகள் பரிசுத்த ஆவியை பெறாததால் கைவிடப்பட்டார்கள். ஆனால் இருசாராருமே கன்னிகைகள் தான். அவர்களுக்கு விசுவாசம் இருந்ததது. அவர்களுக்கு தேவபக்தியின் வேஷம் உண்டாயிருந்தது. அவர்கள் ஆலயத்திற்கு சென்று வந்தார்கள். நல்ல காரியங்களை, தர்மங்களையெல்லாம் செய்து வந்தார்கள். அவர்களுடைய கிரியைகளுக்கு எதிராக குறை ஒன்றும் கூற முடியாது. ஆனாலும் அவர்களிடத்தில் ஒரு குறை இருந்தது. அதாவது அவர்களது தீவெட்டியில் எண்ணெய் இல்லை. பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றிருக்கவில்லை. சன்மார்க்க ஜீவியம் இருந்தது. ஆனால் இவை அனைத்துக்கும் மேல் எது அத்தியாவசியமோ அது அவர்களிடத்தில் இல்லை. ஆதலால் அவர்கள் உபத்திரவகாலத்தினுடே சென்று நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டியதாக உள்ளது. நியாயத்தீர்ப்பு நாளில் நல்லவர்களும் பொல்லாங்கானவர்களும் பிரிக்கப்படும் நாளில் பிரிக்கப்படுவார்கள்.

**74. இப்பொழுது மத்.25:6 என்ன கூறுகிறது?** நடு ராத்திரியிலே, இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போக புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. And at Midnight there was a cry made, Behold, the bridegroom cometh : go ye out to meet him இங்கு இது ஒரு நடுராத்திரி சம்பவமாக உவமையில் ஒப்பனையாக கூறப்பட்டுள்ளது. உவமையாக ஒப்பிட்டு கூறப்பட்டுள்ள இந்த சம்பவம் போன்று. மேலும் உண்மையாகவே நடுராத்திரியில் நடந்த சில சம்பவங்களை வேதவாக்கியங்களில் நாம் காணலாம்.

அ. நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் காவல் கிடங்களில் இருக்கும் சிறைபட்டவர்களின் தலைப்பிள்ளைகள் வரைக்கும், எகிப்து தேசத்திலிருந்த முதற்பேறனைத்தையும், மிருக ஜீவன்களிலும் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார். மேலும் கர்த்தருடைய சேனையாகிய இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணினதினால் இது அவர்களுக்கென்று முக்கியமாய் ஆசரிக்கத்தக்க இராத்திரியாயிற்று. இஸ்ரவேல் சந்ததியார் எல்லாரும் தங்கள் தலைமுறைதோறும், கர்த்தருக்கு முக்கியமாய் ஆசரிக்க வேண்டிய இராத்திரி இதுவே. (யாத்.12:29,42) இது ஒரு மீட்பின் நடுராத்திரியாக இருக்கிறது. மேலும் இது ஒரு உண்மை சம்பவம்.

ஆ. நடுராத்திரியிலே இரட்சிக்கப்பட்ட சிறைசாலைகாரன் மற்றும் அவனுடைய குடும்பத்தினரைக் குறித்து அப்.16:33 ல் பார்க்கிறோம். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனை துதித்துப் பாடினார்கள். அந்த இராத்திரியில் அந்த நேரத்தில் தானே சிறைசாலைகாரனும் அவன் வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஒரு குடும்பத்தின் இரட்சிப்பு நடுராத்திரியிலே நடைபெற்றது. இதுவும் ஒரு உண்மை சம்பவம்.

இ. மேலும். அப்பம் பிட்க சீஷர்கள் கூடியிருந்த வாரத்தின் முதலாம் நாளில் பவுல் நடுராத்திரி வரை பிரசங்கித்தான். (அப்.20:7) இரட்சிப்பின் சுவிசேஷம் நடுராத்திரிவரை பிரசங்கிக்கப்பட்டதை காண்கிறோம். இதுவும் ஒரு உண்மை சம்பவம்.

ஈ. ஒருவன் தன் சிநேகிதனை வீட்டிற்கு நடுராத்திரியிலே போய் தன் வீட்டிற்கு வந்திருந்த தன் சிநேகிதனுக்காக மூன்று அப்பங்களை கடனாக கேட்டான். அவனுடைய நண்பன் தொடக்கத்தில் மறுத்த போதிலும் அவன் தன்னை வருந்திக் கேட்டுகொண்டதினிமித்தம். அவனுக்கு தேவையானதை கொடுத்தான் என பார்க்கிறோம். இது ஒரு உவமை சம்பவம். இந்த உவமை சம்பவத்தின் மூலம் நாம் கற்றுக்கொண்டது என்ன? தேவனுடைய சமூகத்தில் நமது ஜெபங்களுக்கு பதில் கிடைக்க காலதாமதமானாலும் நிச்சயமாக நமக்கு பதில் கிடைக்கும். ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான். (லூக்.11:5-10)

உ. மேலும் கர்த்தருடைய வருகை குறித்து : வீட்டு எஜமான் நடுராத்திரியிலோ, சாயங்காலத்திலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். (மாற்.13:35). மத்.25:6 ல் உவமையாக அவர் நடுராத்திரியில் வருவதாக ஒப்பனையாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சம்பவங்களிலிருந்து ஜனங்கள் நடுராத்திரியில் மீட்கப்பட்டார்கள், இரட்சிக்கப்பட்டார்கள், இரட்சிப்பின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அவர்கள் கேட்டதை பெற்றுக்கொண்டார்கள். இந்த திருஷ்டாந்தத்தின்படி மணவாளன் நடுராத்திரியில் வரலாம் என உவமையாக மத்.25:6ல் கூறப்பட்டுள்ளது.

75. இங்கு நீங்கள் பிரதானமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால், பரலோக இராஜ்ஜியம் மணவாளனுக்கு எதிர்கொண்டு போக புறப்பட்ட பத்து கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. Then shall the kingdom of Heven BE LIKENED unto Ten Virgins went forth to meet the bridegroom. மத்.25:1 இது ஒரு உவமையாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி, உண்மையாகவே அந்தவேளையிலே நடக்கப்போகும் ஒரும் சம்பவம் அல்ல. Parabels என்றால் ஒரு சம்பவத்தை உருவகப்படுத்தி கூறுவதாகும். பரிசுத்த வேதாகமத்தில் இயேசு அநேக சம்பவங்களை உவமையாகவே எடுத்துக்கூறுகிறார். அதுபோன்று தான் இந்த கர்த்தருடைய வருகைக்கடுத்த சம்பவம். என் வாயை உவமைகளினால் திறப்பேன் என்று தீர்க்கதரிசிகளினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. (சங்.78:2, மத்.13:35) இந்த தீர்க்கதரிசன வார்த்தையின்படி இயேசு அநேக விசேஷங்களை உவமையாகவே ஜனங்களுக்கு சொன்னார். (மத்.13:3) அப்பொழுது சீஷர்கள் அவரிடத்தில், ஏன் உவமையில் பேசுகிறீர் என்று கேட்டார்கள். (மத்.13:10) அதற்கு அவர், பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டுள்ளது. அவர்களுக்கோ அருளப்படவில்லை என்றார். ஜனங்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால் நான் அவர்களோடு உவமையாக பேசுகிறேன் என்றார். (மத்.13:13) வேதவாக்கியங்களில் பரலோக இராஜ்யத்தைக் குறித்து அநேக உவமைகள் உண்டு. அதில் மத்தேயு 25 அதி. சம்பவம் ஒன்று.

(அ)விதையை பற்றிய உவமை. மத்.13:18. (ஆ)தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மத்.13:24 (இ)கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. மத்.13:31.(ஈ)புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது. மத்.13:33 (உ) நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்திற்கு ஒப்பாயிருக்கிறது. மத்.13:44 (ஊ)நல்ல முத்துகளை தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. மத்.13:45 (எ)கடலிலே போடப்பட்டு சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. மத்.13:47 (ஏ)ஒரு வீட்டு எஜமானுடைய திராட்சை தோட்டம் குறித்த உவமை. மத்.21:31 (ஐ) ஆட்டுதொழுவத்திற்குள் வாசல் வழியாய் பிரவேசித்ததற்கடுத்த உவமை. யோ.10:1-6 இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? பரலோக இராஜ்யத்திற்கடுத்த காரியங்களை இயேசு உவமையாகவே பேசிவந்தார். அதன் பொருளை எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று சீஷர்கள் கேட்டபோது அதை அவர்களுக்கு விளக்கி கூறினார். (மத்.15:15) இதர பரலோக இராஜ்யத்திற்கடுத்த உவமைகளை போன்றுதான் இங்கு மணவாளனுக்கு எதிர்கொண்டு போக புறப்பட்ட பத்து கன்னிகைகளுக்கடுத்த உவமையும்.

76. அடுத்து நீங்கள் இங்கு மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், நடுராத்திரியிலே மணவாளன் வருகிறார் என்பதும் ஒரு உவமைதான் எனென்றால் அவர் நடுராத்திரியிலோ, சாயங்காலத்திலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ எந்த நேரத்திலும் வரலாம் என நாம் மாற்.13:35ல் வாசிக்கிறோம். ஆக இங்கு நடுராத்திரி என உவமையாக எடுத்துகொள்ளப்பட்டிருக்கிறது. சகரி.14:7ல் ஒரு நாள் உண்டு. அது கர்த்தருக்கு தெரிந்தது. சாயங்காலத்தில் வெளிச்சம் உண்டாகும். இது ஒரு தீர்க்கதரிசனம். நடக்கப்போகும் காரியத்தை

திட்டவட்டமாக எப்பொழுது என்று அறிவிக்கிறது. ஆனால் மத்.25:6ல் நடுராத்திரி ஒரு உவமையாக கூறப்பட்டுள்ளது. திட்டமான நேரம் கிடையாது. ஏனென்றால் மணவாளனுடைய வருகையை யாரும் அறியாது. அது நினையாத நேரத்தில் இருக்கும். மேலும் பத்து கன்னிகைகள் இதில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்கள், ஐந்து பேர் புத்தியிள்ளாதவர்கள் என்பதும் ஒரு எடுத்துக்காட்டுக்காகத்தான் கூறப்பட்டுள்ளது. அதில் உள்ளபடியே பத்து பேர் தான் சந்திக்க புறப்பட்டார்கள். அதில் ஐந்து பேர் எடுத்துக்கொள்ளப்பட்டனர், ஐந்து பேர் தள்ளப்பட்டனர் என அர்த்தம் இல்லை. மேலும் மணவாளனை சந்திக்க புறப்பட்டவர்களில் பாதி பேர் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள், பாதி பேர் நிராகரிக்கப்பட்டார்கள் என்பதும் அல்ல. உவமை என்பது இனி நடக்க போகும் சம்பவத்தை ஒரு உவமையுடன் எடுத்துக்காட்டுவது. ஒரு திருஷ்டாந்தத்துடன் எடுத்துக்காட்டுவது. அவ்வளவுதான். நாம் தீர்க்கதரிசி என விசுவாசிக்கும் ஏழாம் சபைக்கால தூதன் சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் எடுத்துக்கொள்ளப்படுதல் ஏழாம் ஜாமத்தில் நடக்கும், அது காலை 6மணி முதல் 9மணிக்குள் சம்பவிக்கும் என தான் நம்புவதாக **ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்** என்ற செய்தியில் 127வது பத்தியில் கூறுகிறார். இங்கு கவனியுங்கள். நடுராத்திரி என்பது ஒரு உவமை. காலை என்பது ஒரு நம்பிக்கை. முதலில் உவமையாக கூறப்பட்டுள்ளது, இரண்டாவது அது ஒரு தீர்க்கதரிசியினுடைய நம்பிக்கையாகயிருக்கிறது. நீங்கள் மத்.25:13 ல் இந்த சம்பவத்தின் கடைத்தொகையை காணலாம். அதாவது. மனுஷகுமாரன் நாளையாவது, நாழிகையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் எப்பொழுதும் விழித்திருங்கள் என்பதாகும். அவருடைய வருகை நடுராத்திரியில் தான் இருக்கும் என இங்கு கூறப்படவில்லை. ஆதலால் மத்.25:6 ஒரு திருஷ்டாந்த உவமையாகும். ஆதலால் அதற்கு ஒரு செய்தி, ஒரு செய்தியாளன் தேவையில்லை.

77. காக்குவ் பிலிப்பு மாம்சபிரகாரமாக கூறுவது போன்று ஏழுசபைக்காலங்களின் கன்னிகைகளை எழுப்பவும், விழித்துக்கொள்ளவும் பண்ணுகிற ஒரு குறுகிய பிரசங்கங்கள் இராவின் நடுவில் ஒரு சத்தமாக தேவையில்லை. நாம் முன்பு தியானித்தபடி நடு இரவு என்பது ஒரு உவமையேயன்றி, அதற்கு ஒரு முக்கியதுவம் இல்லை. மேலும் இவன் கூறுவதுபோன்று இந்த எழுப்புதலின் மத்தியில்தான் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழும். மேலும் இந்த சத்தம் தான், அதாவது இவனுடைய செய்திதான், இதோ, மணவாளன், அவளை சந்திக்க புறப்பட்டு செல்லுங்கள் என்பது கேட்டின் மகனுடைய சத்தமாயிருக்கிறது.

78. **அப்படியானால் மத்.25:6ன் சத்தம் யாருடையது?** லாசருவே கல்லறையிலிருந்து வெளியே வா என்று அழைத்தவருடைய சத்தம். லாசருவை உயிரோடு எழுப்பும் சத்தமாக இருந்தது. இப்பொழுது நித்திரை அடைந்த மணவாட்டியை வெளியே வா என்று அழைக்கும் சத்தமாக மத்.25:6 உள்ளது. அதாவது நித்திரையடைந்த மணவாட்டியை உயிரோடு எழுப்பும் சத்தம். இது மணவாட்டியை மணவாளனிடம் வழிநடத்தும் சத்தம் அல்ல. மாறாக மணவாட்டியை நித்திரையை விட்டு எழுந்து வா என்று அழைக்கும் சத்தமாகும். இந்த சத்தத்திற்குரியவர் கிறிஸ்து. இது 1தெச.4:16 ல் கூறப்பட்டுள்ள பிரதான தூதனுடைய சத்தமாகயிருக்கிறது. கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானிலிருந்து இறங்கி வருவார். 1தெச.4:16 கவனியுங்கள் கர்த்தர் இறங்கி வரும்போது கர்த்தர் தாமே நடக்கயிருக்கும் மூன்று காரியங்களையும் செய்கிறார். ஆரவாரம், பிரதான தூதனுடைய சத்தம், தேவ எக்காளம். மூன்றையும் அவரே செய்கிறார். ஆனால் இந்த கள்ளதீர்க்கதரிசி மத்.25:6 ன் சத்தத்தை எலியாவின் ஆவி நள்ளிரவில் இதோ மணவாளன் வருகிறார் என்கிறது என்கிறான். இது ஒரு மாயையே. ஆக மத்.25:6, 1தெச.4:16 ன் சத்தம் ஏழு சபைகாலங்கள்தோறும் நித்திரையடைந்த மணவாட்டியை உயிரோடு எழுப்பும் சத்தம். இப்பொழுது முன்பிருந்த சபைக்காலங்களின் மரித்த பரிசுத்தவான்கள் உயிரோடே எழுந்து தங்கள் கல்லறைகளைவிட்டு வெளியே வருவார்கள். அப்பொழுது உயிரோடு இருக்கும் நாமும் அவர்களுடன் அணிவகுத்து ஆகாயத்திற்குள் செல்வோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படும். அல்லேலூயா!

**79. சாயங்காலத்திலே வெளிச்சம்:**

ஒரு நாள் உண்டு, அது கர்த்தருக்கு தெரிந்தது. அது பகலும் அல்ல, இரவும் அல்ல : ஆனாலும் சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும். (சகரி.14:7) இங்கு கவனியுங்கள் அது பகலுமல்ல, இரவுமல்ல. பகலிலும், இரவிலும் (நடுராத்திரியிலும்) வெளிச்சம் உண்டாகாது. சாயங்காலத்திலே வெளிச்சம் உண்டாகும். அந்த வெளிச்சம் மணவாளனுக்கு மணவாட்டியை / பரிசுத்தவான்களை ஆயுத்தப்படுத்தும். சபையை வார்த்தைக்கு திரும்பக் கொண்டுவரும். ஆதி அப்போஸ்தல மூல விசுவாசத்தை, உயிர்தெழுதலின் விசுவாசத்தை சபைக்கு திரும்பக்

கொண்டுவரும். அந்த வெளிச்சம் அவிசுவாசிகளிலிருந்து விசுவாசிகளை வேறு பிரிக்கும். விசுவாசிகள் செய்திக்கு கீழ்படிந்து அதனுடன் நடப்பார்கள். அவிசுவாசிகள் நடக்க மாட்டார்கள். இவர்கள் காக்குவ் பிலிப்புவுடனும் மார்ஷலுடனும் நடப்பார்கள். இவர்கள் சாயங்கால வெளிச்சத்தில் நடக்க மாட்டார்கள். மாறாக நடுராத்திரியில் நடப்பார்கள். இருளின் மகனை பின்பற்றுகிறவர்கள் இருளிலே நடப்பார்கள். இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் இருளில் நடவாமல், சாயங்கால வெளிச்சத்தில் நடப்பார்கள். முடிவாக சாயங்கால வெளிச்சமானது மல்.4:5,6 மற்றும் வெளி.10:6 ஆகும். நடுராத்திரி சத்தம் என்பதொரு வெளிச்சமோ, செய்தியோ இல்லை. இது மணவாளனை சந்திக்க சென்ற புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகளுக்கடுத்த உவமை மட்டுமே. இது சாயங்கால வெளிச்சமா அல்லது இல்லையா என்பதை, செய்தியை வார்த்தையோடு சேர்த்து பாருங்கள். ஒரேயொரு வார்த்தையில் மட்டும் அல்ல. ஒன்று சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையோடும். நீங்கள் விசுவாசமில்லாமல் சோதித்தறிந்தால் அது உங்களுக்கு பிரயோஜனப்படாது. நாம் நள்ளிரவில் இருக்கும் சமயத்தில் ஏழாம் சபைக்கால தூதனுடைய கடைசி செய்தியில் உள்ளவர்கள் சாயங்கால வெளிச்சத்தில் – மாலை நேரத்தில் இருக்கிறார்கள் என்று இவன் தன் பக்தர்களை தேற்றி, அவர்களை திசைதிருப்பி அழிவுக்கு வழிநடத்தி செல்கிறான் என கர்த்தருடைய நாமத்தினால் உங்களை எச்சரிக்கிறேன்.

80. **அடுத்து வெளி.12க்கு வருவோம்.** இங்கு ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள் என்றுகாண்கிறோம். இந்த ஸ்திரீயைக்குறித்து சிலர் இது இஸ்ரவேலைக்குறிக்கிறது என்றும், சிலர் மரியாளை குறிக்கிறது என்றும், சிலர் சபையைக்குறிக்கிறது என்றும் கூறுகிறார்கள். பொதுவாக ஸ்திரீ சபைக்கு அடையாளமாக பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. (எபே.5 அதி) சபையானது கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. (2கொரி.11:2) பழைய ஏற்பாடு காலத்தில் இஸ்ரவேல் தேவனுடைய உடன்படிக்கையின் மனைவியாக வர்ணிக்கப்படுகிறாள். (எரே.3அதி) அக்காலத்தில் நீ என்னை பகாலி (My Lord) என்று சொல்லாமல் ஈஷி (Husband) என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார். (ஓசி.2:16) நித்திய விவாகத்திற்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்வேன். (ஓசி.2:19). மேலும் ஏசா.54:5 ல் இஸ்ரவேல் அவர் உடன்படிக்கையின் மனைவி என்று கூறப்பட்டுள்ளது. (Thy Maker is thy Husband) பழைய ஏற்பாடு காலத்தில் இஸ்ரவேல் எப்படி தேவனுடைய மனைவியாக கூறப்பட்டுள்ளதோ அதேப்போன்று புதிய ஏற்பாட்டில் அப்.2:47 ல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்ட சபையானது கிறிஸ்துவின் மனைவியாகக் கூறப்படுகிறது. ஆனால் இங்கு புதிய ஏற்பாடு சபையே ஸ்திரீ என்ற இடத்தில் பொருந்தும். இங்கு ஸ்திரீயாக மரியாளை எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் அவள் எந்த வனாந்தரத்துக்கும், இயேசுவை பெற்றப்பின் ஓடிப்போகவில்லை. (வெளி.12:6) அடுத்து வெளி:5 ல் அந்த ஸ்திரீ பெற்றது ஒரு ஆண் பிள்ளை. (Male Child) என்று கூறப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறானது. அவள் பெற்றது ஒரு மனிதன் என்று அழைக்கப்படும் முதிர்ச்சிப்பெற்ற ஆண் பிள்ளை (Man Child) என்றுக்காண்கிறோம். இது ஆங்கிலத்தில் Man Child என்றுக்கூறப்பட்டுள்ளது. மேலும் இயேசு பிறந்து வளர்ந்து, தனது இரட்சிப்பின் திட்டத்தை முடித்து, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பின்பு தான் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். (மாற்.16:19) ஆக அந்த ஸ்திரீ மரியாளும் அல்ல, Man Child என்று அழைக்கப்படுகிறதினால் அது இயேசுவும் அல்ல.

81. ஆக புதிய ஏற்பாடு சபைதான் அந்த ஸ்திரீ என்பது நன்கு பொருந்தக்கூடியதாக இருக்கிறது. (எபே.5:29,30) அவள் சூரியனை அணிந்திருந்தாள். தேவனுடைய நாமத்திற்கு பயந்திருக்கிற அவள் மணவாட்டி மேல் / மனைவி மேல் நீதியின் சூரியன் உதிக்கும். (Sun of Righteousness) அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும். (மல்.4:2) அவள் பாதங்களின் கீழ் சந்திரன். சந்திரன் சூரியனுடைய ஒளியை பிரதிபலிக்கிறது. அவ்வண்ணமாகவே பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டின் ஒளியை பிரதிபலிக்கிறதாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேறுகிறதாக இருக்கிறது. இந்த தீர்க்கதரிசிகளின் உபதேசத்தின் மேல்தான் சபை நிற்கிறது, கட்டப்பட்டதாக இருக்கிறது. (எபே.2:20) அந்த ஸ்திரீயின் தலையின் மேல் உள்ள 12 நட்சத்திரங்கள் 12 அப்போஸ்தலர்களைக் குறிக்கிறது.

82. கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகும் அளவும், உங்களுக்காக கர்ப்பவேதனைப்படுகிறேன் என்கிறான் அப்.பவுல். (கலா.4:19) அதுப்போன்று சபையானது அந்த Man Child, அதாவது வளர்ச்சியடைந்த அந்த மனிதக்குழந்தையை - மணவாட்டியை - பிறப்பிக்க சபை கர்ப்பவேதனைப்பட்டு பிறப்பித்தது. மணவாட்டி ஒரு

பரிபூரண மனிதனுடைய வளர்ச்சியடைந்து, கிறிஸ்துவின் தெய்வீக சுபாவங்களில் பங்குக்கொண்டது. ஆனால் உபத்திரவகாலங்களுக்கு முன்னே மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள், இவர்கள் யார்? ஒவ்வொரு சபைக்காலத்திலும் ஜெயம் கொண்டவர்கள்.

83. அடுத்து ஒருபக்கம் தேவன் இஸ்ரவேலை தன்னுடைய மனைவி என்றும், மற்றொருப்பக்கம் இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டப்புத்திரன் என்கிறார். (யாத்.4:22) புதியஏற்பாட்டில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை / மணவாட்டி பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேரானவர்களின் சர்வ சங்கமாகிய சபை என அழைக்கப்படுகிறது. (எபி.12:23) இது ஆங்கிலத்தில் Church of the first born, who are written in heaven என உள்ளது.

84. அடுத்து சகல ஜாதிகளையும், இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் Man Child இப்பொழுது இது யார் என்று கவனியுங்கள். ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றது போல ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களைகளை ஆளுவான். (வெளி.2:26,27) இந்த ஜெயங்கொள்ளுகிறவர்கள் யார்? இவர்கள் அந்தந்த சபைக்காலத்தின் மணவாட்டி. இவர்களைக்குறித்து : ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்வான். நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான் என்று வெளி.21:7 ல் கூறப்பட்டுள்ளது. ஆக ஓரு பக்கம் புதிய ஏற்பாடு சபை - ஸ்திரீ. மறுபக்கம் அவளே - ஜெயங்கொள்கிற அந்த Man Child – Not Male Child. ஆண்பிள்ளையாக, மாறாக முற்றிலுமாக வளர்ச்சியடைந்த மனிதத்தன்மையுள்ள பிள்ளை. மேலும் அந்த ஸ்திரீ மூன்றரை ஆண்டுகாலத்தில் பரலோகத்தில் போஷிக்கப்படுகிறதைக் குறிக்கிறது. ஆம் அவள் எடுத்துக்கொள்ளப்படுதலில் உபத்திரவககாலத்தை காணாது எடுத்துக்கொள்ளப்பட்டாள். அந்த ஸ்திரீ வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள். அங்கே மூன்றே ஆண்டுகள் போஷிக்கப்பட்டாள் என்பது, ஒசியா.2:14-16 வசனங்களுக்கு ஒப்பாக இருக்கிறது.

85. காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக. சபை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பாக சபைக்கு நிகழ வேண்டிய சம்பவங்கள் அனைத்தும் ஏழாம் சபைக்காலம், ஏழாம் சபைக்காலதூதன், ஏழாம் சபைக்கால செய்தியோடு முடிந்துவிட்டது. ஏழாம் சபை கடைசி காலம், கடைசி தூதன், கடைசி செய்தி. முன்மாரிமழை, பின்மாரிமழை யாவும் பொழிந்து முடிந்தது. ஆனாலும் இன்னும் தேவனுடைய மந்தையில் சேரவேண்டிய கடைசி ஆடு வந்து சேரவில்லை அல்லது இன்னும் சபை பரிபூரணப்படவில்லை. அது இயேசு கிறிஸ்துவின் தெய்வீக சுபாவங்களில் பரிபூரணப்படவேண்டும். அந்த நேரம் நம்மில் யாரும் நினையாத மணிவேளையாக இருக்கும். தேவன் ஒருவரே அதை அறிவார். காக்காவும் அறியாது அதன் குஞ்சுவும் அறியாது.

86. அடுத்து தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்திற்கு புத்திமான்களாகவும் தெரியும் மார்ஷல், ஜான்சன், அமிர்தலிங்கம் போன்றோர் 25-12-2017 அன்று தீமையை நன்மை என்றும், நன்மையை தீமை என்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாக பாவித்து, கசப்பை தித்திப்பும், தித்திப்பை கசப்பும் என சாதித்து தாங்கள் பெற்ற தொகைக்கு மாரடித்து சென்றார்கள். இவர்கள் நம்பியிருக்கும், கர்த்தருடைய வாக்கை அல்ல தன் யூகத்தையே கூறும் கள்ளத்தீர்க்கதரிசி காக்குவ் பிலிப்புவின் மதிகேடு சீக்கிரத்தில் வெளிப்படும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை இனி பக்திவிருத்தி அடைய, சபை ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியில் காணப்பட இனி எந்த ஒரு தீர்க்கதரிசி செய்தியாளனும் தேவையில்லை. காக்கா பிலிப்புவும் தேவையில்லை. குருவி பிலிப்புவும் தேவையில்லை. சாத்தானும், குட்டிச்சாத்தானும் உங்களை தேவனுக்கும் இக்காலத்திற்குரிய செய்திக்கும் விரோதமாக ஏவி, உங்களை இறுதியில் அழிவுக்குரிய தங்களது ஆட்சிக்குள்ளாக்க இடைவிடாது முயற்சி செய்து வருகிறார்கள். ஆதலால் எனக்கு பிரியமானவர்களே, அருமையானவர்களே, காக்குவ் பிலிப்பு மற்றும் மார்ஷல் மார்க்கத்தார்களே என் கடிந்துக்கொள்ளுதலுக்கு திரும்புங்கள். நீங்கள் தன் சுயபுத்தியின் மேல் சார்ந்து மாறுபாடான பாதைகளிலும், கோணலான வழிகளிலும் நடக்கும், ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டிறாத காக்குவ் பிலிப்பும், மற்றும் கள்ள அப்போஸ்தலன் மார்ஷலுக்கும் செவிகொடுத்து அவர்களுடைய வழிகளில் நடவாமல் உங்கள் கால்களை அவர்கள் பாதைக்கு விலக்குவீர்களாக. இந்த கபடமுள்ள இரு வேலையாட்களுக்கும், வழிநடத்த சரியான மேய்ப்பன் இல்லாமல் திரியும் ஆடுகளை தங்கள் வாய்க்கு இரையாக்காமல், அவர்களுக்கு நித்திரை வராது. வழித்தவறிய அந்த ஆட்டுக்குட்டியில் நீயும் ஒன்றா? சிலர் திருவசனத்திற்கு கீழ்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள். அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும்

இருக்கிறார்கள். (1பேது.2:8) கேட்டவர்கள் விசுவாசம் இல்லாமல் கேட்டபடியினால் அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை. (எபி.4:2) இது இந்த மார்ஷல் வகையறாக்களுக்குத்தான் எழுதப்பட்டிருக்கிறதோ? கள்ளர்களுடன் நீங்களும் அவமானத்தை சுமக்கப்போகிறீர்களா? இது தேவனுக்கும் உங்களுக்கும் இடையேயுள்ள ஒன்று. நான் தேவையில்லாமல் உங்களை புண்படுத்துகிறேன் என்று நினைக்காதீர்கள். ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்கு அருமையான காக்குவ் பிலிப்பு, மார்ஷல், ஜான்சன், அமிர்தலிங்கம், அருண்குமார் போன்றவர்களே உங்கள் பேரில் எனக்கு எந்தவிதமான விரோதமும் கிடையாது. நாம் ஒருவருக்கொருவர் எவ்வளவுதான் கருத்துவேறுபாடு கொண்டிருந்தாலும், என்னிடத்தில் உங்களுக்கு எதிராக எந்தவிதமான கசப்போ, மாறுப்பாடோ கிடையாது. நான் சத்தியத்தை அறிந்த மட்டும் அதற்கு உண்மையாயிருந்து சத்தியத்தை உங்களுக்கு சொல்கிறேன். என்னுடைய கடிந்துகொள்ளுதலில் நீங்கள் சற்று மனகசப்பு அடைந்திருக்கலாம். வார்த்தையின் கடிந்துகொள்ளுதல், கேட்பவர்களை பலமாக வெட்டுவது போன்று, பேசும் என்னையும் அது பலமாக வெட்டுகிறது என்பதை புரிந்துகொள்ளுங்கள். முடிவாக நீங்கள் மனப்பூர்வமாய் மனந்திரும்பாமல் உங்கள் போதகத்திற்கு இனியும் எவ்வளவுதான் உத்தமமாக இருந்தாலும் சரி, எனக்கு அது குறித்து கவலையில்லை. ஆனால் வெகுவிரைவில் நிகழயிருக்கும் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு நீங்கள் ஆயத்தமா? நிச்சயமாக உங்களுக்கு தேவசமூகத்தில் இரக்கங்களும் மன்னிப்பும் உண்டு. நீங்கள் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, தேவன் உங்கள் மேல் பொறுமையுள்ளவராயிருக்கிறாரோ? இன்றே, இந்த நிமிஷமே சிந்தியுங்கள், செயல்படுங்கள். சத்திய ஆவி உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவதாக. ஆமென்.

குறிப்பு: 1. காக்குவ் பிலிப்பு மற்றும் மார்ஷல் குறித்து எனது விமர்சனங்கள் சற்று கடுமையான வார்த்தைகளாகயிருக்கலாம். ஆனால் இவர்களுடைய வார்த்தைகள் இதைவிட பலமடங்கு கடுமையாகயிருப்பதால், மூடனுக்கு அவர்கள் மதியீனத்தின்படி மறு உத்தரவு வேதவாக்கியங்களின் அடிப்படையில் கொடுத்துள்ளேன். இவ்வாறாக நான் கொடுக்காவிட்டால் அவர்கள் தங்கள் பார்வைக்கு ஞானிகளாயிருப்பார்கள் என்றும் தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

2. சகரி 14:7ல் கூறப்பட்டுள்ள சாயங்கால வெளிச்சத்தில் உள்ள உடன் விசுவாச சகோதரர்களுக்கு இரு பிரதிகள் அனுப்பியுள்ளேன். தயவு செய்து அதில் ஒன்றை இந்த செய்தி தொகுப்பு கிடைக்காத, உடன் விசுவாசத்தில் உள்ள சகோதரர் ஒருவருக்கு கொடுத்து உதவுங்கள்.

பிப்ரவரி 2018.

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா

**If Undelivered**
**Please Return to:**

**Caleb Joshua**
**32, Jemi Ethiraj Nagar**
**Erayamangalam Road**
**Mappedu, Perambakkam (Via)**
**Thiruvallur District – 631402.**
**Mobile No. 9444701953**

**PRINTED BOOK**
**Clause No. 128 P.O. GuideRules**
**GRNP/Dlgs/16 dated @ Tambaram the 04.04.2016.**
**Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**This Printed Book, Yesuvae Vaarum Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006. Editor Caleb Joshua**